தாழம்பூ

1

ஆரத்தி காட்டப்பட்ட போது மனசு பக்தியில் சேர்ந்து போயிற்று. எத்தனையோகாலத்திற்கு முன்பு கோவில் அல்லவா! இந்திரன் பூஜித்த லிங்க பல தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும் ஞானி தரிசித்த தெய்வமல்லவா! பதினான்கு பிறைகளுக்குக் சித்த கம்பீரமான முகம். அதற்குக் கீழ் கழுத்து உச்சியில் என்று இருக்கின்ற உருவத்தைப் பார்த்து உட்கார்ந்த ஜகதாம்பிகை சுபத்ரா வணங்கினாள். கருவறை பதினைந்து தாரத்திற்கு அப்பால் இருந்தது. கருவறையிலிருந்து தாரத்திற்கு அப்பால் நடுநாயகமாக இல்லாமல் கரு சற்று தள்ளியதுபோல் சிவலிங்க உருவம் இருந்தது. வெள்ளிக்கவசம் பூட்டியிந்தார்கள். அந்த வெள்ளிக் பதினான்கு பிறைகளோடும், பிறைகளுக்கு மேல் தோடும் கீழே முகத்தோடும் கழுத்தோடும் இருந்தது. இது மாலையன். தாணு-சிவன், மால்-திருமால், அயன்- சிவன், விஷ்ணு, பிரம்மா மூன்றும் கலந்த அற்புதமான இந்தக் கோயில். 'அரியும், சிவனும் ஒண்ணு. அறியா மண்ணு' என்று சொல்லாமல், சொல்லிக் இருக்கிற கோயில்.

நினைவு தெரிந்த நாளிலிருந்து ராணி இந்தக் கோயிலுக்கு வந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய வேண்டுதல்கள் எல்லாம் இந்தக் கோவிலில் பலித்திருக்கின்றன.

எட்டாவது வேறுபள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டுமென்று அவள் விரும்பினாள். அவள் விரும்பிய வண்ணமே வேறொரு பள்ளிக்கூடத்தில் இடம் கிடைத்தது. கல்லூரியில் படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள். 'இங்குதான் வந்து கல்லூரியில் படிக்கவேண்டும். எனக்கு நல்ல மதிப்பெண் கொடு. கல்லூரியில் சேர்த்துவிடு' என்று இறைஞ்சினாள். அவளுக்கு மிக நல்ல கல்லூரியில் இடம் கிடைத்தது. பி.ஏ. பொருளாதாரம் சேரவேண்டும் என்று வேண்டிக்கொள்ள, கிடைத்தது. பள்ளி ஆசிரியர் பயிற்சிக் கூடத்தில் அவர்களாகக் கூப்பிட்டு கொடுக்க வேண்டும் என்று கேட்க, அவர்களாக கூப்பிட்டு இடம் கொடுத்தார்கள். அப்பா சம்மதிக்க வேண்டுமே என்று இறைஞ்ச, அப்பா சந்தோஷமாக போய் வா, போய் படி என்று உற்சாக மூட்டினார்.

அக்காவுக்குக் கல்யாணம், அண்ணனுக்கு வேலை, வீடு இடித்து பெரிதாகக் கட்ட வேண்டும், அம்மாவின் ரத்தக் கொதிப்பு தலைவலி குணமாக வேண்டும், அப்பாவுக்கு ரிடையர்மெண்ட் காசு வரவேண்டும்- சகலமும். சகலமும் நிறைவேறியது இங்குதான். இந்தக் கோவில் சன்னிதானத்தில் கேட்டபிறகுதான்.

ஸ்தாணுமாலயன் சந்தோஷமானவர். அதேசமயம் 'கேள் கேட்டால்தான் கிடைக்கும்' என்பது போல் ஒரு வழக்கம் உள்ளவர். இதை அம்மாதான் சொல்லிக்கொடுத்தாள். 'வெறுமே சுற்றிவிட்டு வந்தால் போதாது. ஸ்தாணுமாலயன் சன்னதியில் கொஞ்சம்இறைஞ்சலோடு வழிபடவேண்டும். கைகூப்பி மனம்விட்டு அவரோடு பேச வேண்டும். வருகிறேன் என்று வேண்டிக் கொண்டாயா? எப்பாடு பட்டாவது போய் விடு, போவதற்கு முடியாமல் என்ன தடங்கல் இருந்தாலும் உடைத்தெறிந்து போவதே குறிக்கோள் என்பது போல் நடந்து

கொள். அது உனக்கு நல்லது கொடுக்கும். சிவன் சோதனை செய்வார். சோதனையில் ஜெயித்து விட்டால் அற்புதமாய் கொண்டாடுவர். பிறகு எது கேட்டாலும் தருவார்' என்பது போல அம்மா சொல்ல அதைப் புரிந்து கொண்டு அதேவிதமாக சுபத்ரா கோலிலை சுற்றிச் சுற்றி வந்தாள்.

இப்பொழுது வந்திருப்பதுகூட ஒரு பிரார்த்தனைக்குத்தான். டீச்சர் டிரெயினிங் முடித்து சென்னையில் ஒரு பள்ளிக் கூடத்திலும், விழுப்புரத்தில் இன்னொரு பள்ளிக்கூடத்திலும்மூன்று மாதங்கள் வேலை செய்த பிகு மறுபடியும் நாகர் கோயிலுக்கே வந்துவிட வேண்டுமென்று தோன்றியது.

அப்பாவுக்கு உடம்பு சரியாக இல்லை. அம்மா தனியாக மாமத்து வீடு சுத்தம் செய்து நிமிர முடியவில்லை. அக்கா பிரசவத்திற்காக இங்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. 'எனவே, நீ வேறெங்கும் போகாமல் இங்கே வந்துவிடு' என்று அப்பா கடிதம் எழுத- தொலைபேசியில் பேச அவள் விழுப்புரத்து வேலையை ராஜினாமா செய்துவிட்டு நாகர் கோயிலுக்கு வந்துவிட்டாள்.

"என்னடி ஆச்சு உனக்கு."

அம்மா வீட்டுக்குள் நுழைந்ததும் கத்தினாள்.

"ஏம்மா... நல்லாதானே இருக்கேன்."

"என்னா நல்லாயிருக்க, முடிகொட்டிப்போச்சு, கண்ணுக்கு கீழ கருப்பு. கன்னம் ஒட்டிப்போயிருக்கு. உடம்பே வாடி உண்டைக் கத்தரிக்காய் மாதிரி இருக்கியேடி. வயசுப் பொண்ணு மாதிரியா இருக்க!"

அம்மாவும் கிட்டத்தட்ட அலறலாய் பேசினாள்.

"தே.... அப்படியெல்லாம் வீணா கத்தாத. இப்போ இருக்கற பொண்ணுங்க ஜாஸ்தி சாப்பிடறதில்லை. குறைச்சலா சாப்பிட்டு உடம்பை ஒல்லியா வச்சுக்கிதுங்க. அதுவொரு

ஸ்டைல். உன்னை மாதிரி குண்டு தக்காளியா இருக்கெல்லாம் முடியாது. அவங்களுக்கு அதுல இஷ்டமில்லை."

அப்பா சிரிப்போடு சென்னார்.

"அதுக்காக நோய்பட்ட கோழி மாதிரியா இருக்கறது? முகத்தில் ஒரு களை வேணாம்? ஒரு சிரிப்பு வேணாம்? ஒரு பரபரப்பு வேணாம்? நாளைக்கு பொண்ணு பார்க்க வந்தா இதுவா பொண்ணுன்னு எழுந்து போயிடுவாங்க. இப்போ இருக்கற ஆம்பளைபசங்க எல்லாரும் குண்டா பொண்ணு வேணும்னு நினைக்கறான். இப்படி வத்தலும், தொத்தலுமா இருந்தாக்க...?

அவள் இளைப்பதற்கு உடற் பயிற்சியோ, உணவுக் கட்டுப்பாடோ காரணமாக இல்லை.

சென்னையில் கிடைத்தாற்போல நல்ல உணவு விழுப்புரத்தில் கிடைக்கவில்லை. ஹாஸ்டலோடு சேர்ந்த பள்ளிக்கூடம் என்று பெயர். இருப்பினும் ஹாஸ்டல் மிகச் சுமாராக இருந்தது. அங்கே உணவு மோசமாகவே இருந்தது. உணவுக்காக வேறு ஏற்பாடு செய்து கொள்வதாக இருப்பின் அங்கே இருக்க முடியாது. வேறு இடத்திற்கு குடிபெயர வேண்டும் என்று சொன்னார்கள். வேறு இடத்திற்கு குடிபெயர வேண்டுமென்றால் தனியாக இருப்பதும் கஷ்டம், வாடகையும் அதிகம். அது தனியார் பள்ளிக்கூடம் என்பதால் அவர்கள் வைத்ததே சட்டமாக இருந்தது. இதைவிட நல்ல உணவு வேறு யார் கொடுத்துவிடுவார்கள் என்று எகத்தாளமாகப் பேசப்பட்டது.

சரி, சிறிது பயிற்சி எடுத்துக் கொள்ளலாம். உணவு முன்பின்னாக இருந்தாலும் பொறுத்துக் கொள்ளலாம். இந்த வருட முடிவில் வருவதற்கில்லை என்று சொல்லிவிட்டுப் போய் விடலாம் என்று தீர்மானித்திருந்தாள். ஆனால், அப்பா, 'விரைவாக வந்துவிடு. நஷ்டமானாலும் பரவாயில்லை' என்று சொல்லவே, அந்தக் கடிதத்தை அவர்களிடம் காண்பித்தாள். அவரும் நிர்வாகியிடம் டெலிபோனில் பேசினார்.

"எனக்கு உதவி செய்ய ஆளே இல்லை. நிச்சயம் என் மகள் உதவி தேவைப்படுகிறது' என்று சொல்ல வேண்டா வெறுப்பாக அவளை விடுவித்துவிட்டார்கள். ஆனாலும், பள்ளிக்கூடத்து குழந்தைகளைப் பிரிவது கஷ்டமாகத்தான் இருந்தது.

"நீங்க ஒரு டீச்சர்தான் அடிக்காத டீச்சர். நீங்களும் போனீங்கன்னா போங்க எனக்கு இந்தப் பள்ளிக்கூடமே பிடிக்கலை" என்று ஒரு பெண் குழந்தை சொல்ல அதை வாரி அணைத்துக் கொண்டு "என்னைவிடவும் நல்லடீச்சர் இங்கு வருவாள். கவலைப்படாதே" என்று தலையைத் தடவிக் கொடுத்து அவ்விதமே ஸ்தாணுமாலயனிடம் மனசுக்குள் வேண்டிக் கொண்டாள்.

இங்கு வந்ததும் சன்னதி முன்பு கைகூப்பி உட்கார்ந்து அந்தக் குழந்தை எப்படிக் கேட்டது. 'நீங்க ஒருத்தர்தான் அடிக்காத டீச்சர்.' அங்க இருக்கற எல்லா டீச்சருமே அடிக்காத டீச்சரா-ரொம்ப நல்ல டீச்சரா மாறணும்னு உங்கிட்ட பிரார்த்தனை பண்ணிக்கறேன். தயவு செய்து அந்தக் குழந்தைகளைப் பெரியாளாக்கு' என்று ஒரு அம்மாவைப் போல் வேண்டிக் கொள்ள மணி ஒலித்தது. சந்தோஷமாக இருந்தது.

"குழந்தைக்கு பார்த்து சமைச்சுப்போடு. பத்துநாள்ல குண்டாயிட்டுப் போறா. அது பெரிய விஷயமா?

"அப்பா... சமைக்கறதுனால குண்டாகப் போறதில்லைப்பா. தினம் சுசீந்திரம் பஸ் ஏறிப்போய் ஸ்வாமியைப் பார்த்துவிட்டு வந்தேன்னா, அதுலேயே நான் குண்டாயிடுவேன். தாணுமாலயனை பார்க்கப் போகலேன்னுதான் இளைச்சுப் போயிட்டேன்." என்று கண்சிமிட்டியபடி சொன்னாள்.

"போய் வாயேன். போய் எனக்கும் வேண்டிக்க. உனக்கும் வேண்டிக்க."

"உனக்கு வேண்டிக்கறேன்பா. உன் கால்வலி சரியாயிடணும்னு வேண்டிக்கணும். அவ்ளோதானே."

"இல்லைம்மா. உனக்கு நல்லபடியா ஒரு வரன் அமையணும். உன் கல்யாணத்துக்கு வேண்டிய காசு எனக்கு கிடைக்கணும். அப்படின்னு வேண்டிக்கோ. நீ நல்லபடியா குடித்தனம் பண்ணணும்னு வேண்டிக்கோ."

"அப்பா, இன்னும் ஒரு வருஷமாவது நான் வேலை செய்ய வேணாமா?"

அவள் கெஞ்சலாகக் கேட்டாள்.

"இப்பவே இருவத்தொம்பது வயசாச்சு. இன்னும் என்ன வேலை. நாங்க வயித்துல நெருப்பைக் கட்டிகிட்டு உட்கார்ந்து கிட்டிருக்கோமில்ல."

"இதோபாருங்க. இதை சொல்லி என்னை எங்கேயாவது தள்ளிவிட்டுடாதீங்க. நான் வேலை செய்யணும். நிச்சயமா செய்யணும்."

"எதுக்கும்மா நீ சம்பாதிக்கணும். நீ சம்பாதிச்சு ஆக வேண்டிய காரியம் என்ன."

அப்பா சற்று அலுப்பாகக் கேட்டார்.

"முதல் விஷயம் சந்தோஷமா இருக்கறதுக்கு. முடியும் அப்படின்னு எனக்கே நம்பிக்கை வரத்துக்கு. மூணாவது விஷயம். இந்த வேலை. இந்த டீச்சர் வேலை குழந்தைங்களோட இருக்கற இந்த வேலை எனக்கு பிடிச்சிருக்கு. நாகர்கோயில்லயே ஒரு நல்ல பள்ளிக்கூடத்துல வேலை கிடைச்சா நான் வேலைக்கு போனாமாதிரியும் ஆச்சு. உங்களுக்கு உபயோகமா இருந்தமாதிரியும் ஆச்சு."

"நாகர்கோயில் சின்ன ஊரும்மா. இங்க ஏற்கனவே பள்ளிக்கூடம் இருக்கு. அங்க எல்லா இடத்திலும் வாத்தியாருங்க இருக்காங்க. உனக்கு வேலை கிடைக்கறது கஷ்டம் தான். அதனாலதான் சொல்றேன். வேலை வேணும்னு நீ பாட்டுக்கு பொட்டிய தூக்கிகிட்டு வேற ஒரு ஊருக்குப் போகாத இங்கயே இரு. எங்களோட இரு. இங்க வேலை கிடைச்சாப் போ."

"கிடைக்கும்ப்பா. நான் போய் சுவாமிகிட்ட வேண்டிகிட்டு வரேன்."

அவள் திடமாகச் சொல்வதைப் பார்த்து அவள் அப்பா பரிதாபமாக அவளைப் பார்த்தார்.

அம்மா இரவு அவள் தலையைத் தடவி, முதுகைத்தடவி சொன்னாள்.

"அழகாதாண்டி இருக்க. கொஞ்சம் சதைப்பிடிப்பா இருந்தா நல்லாயிருக்கும். கொஞ்சநாள் ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறம் போயேன். இப்பவே போகணும்னு என்ன."

"இப்பவே தேட ஆரம்பிச்சாதான் உடனே கிடைக்கும்மா. இல்லைனா கிடைக்காதயே போயிடும். ஒரு வருஷம் வீட்டோட உட்கார்ந்திருக்கணும். ஒரு வருஷம் வீட்டோட உட்கார்ந்திருந்தா ஒரு மாதிரி ஆயிடும். புதுசா ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கறாங்களாம்மா. எல்.கே.ஜியிலிருந்து அஞ்சாங்க்ளாஸ் வரைக்கும் புது மெத்தட்ல- ஜாதியோ, மதமோ முக்கியமில்லாத படிப்பு மட்டுமே முக்கியமான ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிச்சுருக்காங்க. ஆரம்பிச்சு ரெண்டு வருஷம் ஆச்சு. அதுல வேலை செய்யற ஒரு டீச்சர் துபாய் போயிட்டாங்க. ஆனா, அதுக்கு பெரிய போட்டி இருக்கு?"

"அது எங்கடி இருக்கு?"

"கிட்டக்கதான். கிடைச்சிடுச்சின்னா ஒரு பழைய டுவீலர் வாங்கிப்பேன். தினம் மத்தியானம் சாப்பிடக்கூட வந்துடலாம்."

"வண்டி ஓட்டுவியா?"

"மெட்ராஸ்ல ஓட்டினேனே. ஒரு பியூன் சொல்லிக் கொடுத்தான்."

"ஆம்பளையா?"

"அம்மா. அவருக்கு வயசு நாப்பத்தெட்டு. நம்ம அப்பா மாதிரி ரொம்ப பாசம். 'இப்பவே ரெண்டு பஸ் மாறி வறீங்களே..! ஸ்கூட்டர் கத்துக்கோங்க' அப்படின்னாங்க. ஸ்கூட்டர்

கத்துக்கிட்டேன். அதைவிட இங்க சம்பளம் ஜாஸ்தின்றதுனால விழுப்புரம் பக்கம் வந்துட்டேன். விழுப்புரத்துல ஸ்கூட்டருக்கு வேலையே இல்லை."

"நீ ரொம்பதுணிச்சல் ஆயிட்டடி."

"ஏன் அப்படிச் சொல்ற?"

"ஸ்கூட்டரெல்லாம் கத்துக்கறியே."

"நல்லா இருக்கு கதை. உன்னை மாதிரியே இருக்க முடியுமா வெறும் சாம்பார், ரசம், மோருன்னு? எனக்கு கார் கத்துக்கணும்னு கூட ஆசை இருக்கு."

"சரி. கத்துக்க வேண்டியதுதான். நீ சொல்றா மாதிரி என்னை மாதிரியே வாழ்ந்துட முடியுமா? இன்னும் தெளிவா திடமா வாழணும். நீ இங்க இருந்தாநானும் எதுனா கத்துப்பேன்."

"எது..? ஸ்கூட்டரா?"

"உன்னுடைய ஸ்கூட்டர்ல ஏறி நான் ஊர் சுத்தலாமில்லையா. நாம ரெண்டு பேரும் சுத்தி சுத்தி வரலாமில்லை."

"அடடே... அப்படியெல்லாம் ஆசை இருக்கா? நிச்சயமா கூட்டிட்டு போறேன். ஆனா, அம்மா, இப்ப எதுக்கு ஸ்கூட்டர் வாங்கறது? வேலை கிடைச்சாவாங்கலாம்."

"உனக்கு என்னாடி ஸ்கூட்டர்தானே வேணும். பழசு வாங்காத. புதுசே வாங்கலாம்."

"எங்க இருக்கு காசு?"

"எங்கிட்ட இருக்குடி. நான் தரேன்."

"இருவத்தி மூணாயிரம் ரூபான்னு போட்டிருக்கானே."

"நான் இருவத்தஞ்சு ரூபாதரேன்."

"ஏதும்மா காசு?"

"நானும் சேர்த்து வைக்கிற பழக்கம் உள்ளவதாண்டி. எனக்கும் எண்ணன் தம்பிங்க இருக்காங்க இல்லை. வந்து ஐநூறு,

ஆயிரம்னு கொடுத்துட்டு போவாங்க இல்ல. ஏதோ பன்னெண்டு வருஷமா சேர்க்கறேன்."

"பன்னெண்டு வருஷமா காசு சேர்த்து எனக்கு ஏன் கொடுக்கற? ஏதாவது நல்ல விஷயத்துக்கு உபயோகப்படுத்தலாமில்லை!"

"எது? இது நல்ல விஷயமில்லையா? உன் கல்யாணத்துக்கு வாங்கிக்கோடி."

அம்மாவும் பெண்ணும் போய் டி.வி.எஸ். ஸ்கூட்டி வாங்கி வந்தார்கள்.

"ஒரு தடவை ஓட்டிக் காட்டு பார்க்கலாம்."

அம்மா ரகசியமாய் அவள் காதில் பேசினாள். பெண்ணுக்கு ஓட்டத் தெரிய வேண்டுமே என்ற கவலை அவளுக்கு இருந்தது.

நிதானமாக வண்டி எடுத்து வேகமாக்கி தேசிய நெடுஞ் சாலையில் அவள் ஓட்டிக்காட்டினாள். திரும்பி அம்மாவிடம் வந்தாள்.

"உட்கார் ஒரு ரவுண்ட் போகலாம்" என்று சொன்னாள்.

"ஐயய்யோ. இன்னும் துட்டே கொடுக்கலையே!"

"கொடுக்கலாம் உட்கார்."

மறுபடியும் தேசிய நெடுஞ்சாலையில் அந்த ஸ்கூட்டர் பறந்தது.

அம்மா ஆச்சரியத்தோடு பெண்ணைப் பார்த்துக் கொண்டு வந்தாள். கார்களையும் பஸ்களையும் ஓவர் டேக் செய்தது. சுற்றி மறுபடியும் கம்பெனிக்கு வந்தது.

அவர்கள் காசு எண்ணிக் கொடுத்தார்கள்.

அம்மாவும், பொண்ணும் ஸ்கூட்டரில் வந்து இறங்குவதைப் பார்த்து அப்பா வியந்து போனார்.

"அடிசக்கை..." என்று க்கை தட்டினார்.

"உங்கம்மா முகத்தைப் பாரு. அப்படியே தகதகன்று இருக்கு. நீ இருக்கும்போது அவளுக்கு ரொம்ப சந்தோஷம். நீ அந்தாண்ட போனேன்னு வச்சுக்கோ. மூஞ்சு வாடிப்போயிடும். அதனாலதான் சொல்றேன். நீ எந்த ஊருக்கும் போவாத. இந்த ஊர்லயே எதுனா வேலை பார்த்துக்கோ.

இல்லையா... வேலையே வேணாம். வீட்டோட சுத்தி வந்து கிட்டிரு. ரெண்டு போர்ஷன் வாடகை வருது. பென்ஷன் வருது. போறும்" என்று உரத்த குரலில் சந்தோஷம் பொங்கச் சொன்னார்.

"இருந்துடேண்டி கண்ணு."

அம்மாவந்து தோளைப் பிடித்துக் கொண்டாள்.

"இல்லைம்மா, நான் எதுனா ஒரு வேலைக்குப் போறது நல்லது. காசுக்காவே இல்லை. காசு முக்கியமும் இல்லை. ஆறு மணிநேரம் வெளிய வேலைக்குன்னு போயிட்டு வந்தேன்னா அது மனசுக்கு சந்தோஷமா இருக்கும். தெம்பா இருக்கும். நான் வெளியூர்ல போய் வேலை பண்றதும் எனக்கு நல்லதும்மா. நிறைய கத்துகிட்டேன். நிறைய மனுஷாள புரிஞ்சுகிட்டேன். எப்போ பேசணும், எப்போ பேசக்கூடாது - அது தெரிஞ்சு கிட்டேன். கொஞ்சம் அசந்தாலும் மறுநாள் கவிழ்ந்துடுவாங்க. மனுஷாளோட பழகும் போது எந்நேரமும் விழிப்பா இருக்கணும் கறதுதான் நான் கத்துகிட்ட முதல்பாடம். அந்தப் பாடத்தை நிறுத்திடக்கூடாது. தொடர்ந்து படிச்சுகிட்டே இருக்கணும்."

அவள் சொல்ல, அப்பாவும் அம்மாவும் அவளை வியப் போடு பார்த்தார்கள்.

அப்பா அப்போது கேட்கவில்லை. ஆனால் மெல் பேச்சு ஆரம்பித்தார். சாப்பிடும் போது கேள்வி கேட்டார்.

"அப்படி என்ன தெரிஞ்சுகிட்ட? எனக்கு சொல்லு,"

"என்னப்பா.... திடீர்னு கேள்வி கேட்கற?"

"எனக்கே ஒண்ணும் தெரியாதுடி கண்ணு. உனக்கு என்னமோ தெரிஞ்சு போச்சுன்னு சொல்றியே. நீ என்னா தெரிஞ்சுகிட்ட அப்படின்னு கேட்கறேன்."

அப்பாவின் வெகுளியான பேச்சு அவளை உற்சாக மூட்டியது.

"நான் ஹாஸ்டல்ல தங்கியிருந்தேனா என் பொட்டியை வேற சாவி போட்டு திறந்து அதுக்குள்ளயிருந்து இருக்கற புடவையை எடுத்து தான் உடுத்திண்டு வெளியபோய் தான் புதுசா அந்தப்புடவையை வாங்கினதா சொல்லி மறுபடியும் கொண்டாந்து எங்கிட்ட கொடுக்கறாங்கப்பா. அவ திருடலை. ஆனா, பொட்டிய வேற சாவிபோட்டு திறக்கறா. அவ திருட மாட்டான்னு என்னநிச்சயம். நீ என்ன பண்ணுவ அவளை?"

"அடிப்பாவிகளா!"

அம்மா முகவாயில் கைவைத்து வியப்போடு பார்த்தாள்.

"நீ என்ன பண்ண?"

அப்பா நிமிர்ந்து நின்று கேட்டார்.

"இந்தா... இந்தப்புடவைதானே வேணும். இதை நீயே வச்சுக்க.' அப்படின்னு புடவைய தூக்கி அவமேல போட்டேன்."

"என்னா கோச்சுகிட்டியா? இங்க இப்படி பண்றது வழக்கம் தான்."

"எவ வேணா பண்ணுங்க. என் பொட்டிய இன்னொரு சாவி போட்டு திறக்கறதுங்கறது கேவலமான விஷயம்" அப்படின்னு சொல்லிட்டு அடுத்த அரைமணியில் அந்த ஹாஸ்டலை காலி பண்ணிட்டேன். இன்னொரு டீச்சர்வீட்டுக்கு போயிட்டேன். அந்த டீச்சர் ரிடையர்டு ஆகப்போறாங்க. அவங்களுக்கு பசங்க எல்லாம் இருக்காங்க. எல்லாரும் ஃபாரின்ல இருக்காங்க. அவங்க வீட்டுக்காரர் வீட்டோட இருக்காரு. அவரும் ரிடையர்டு ஆனவரு. எந்தப் பிரச்சினை இருந்தாலும் வான்னு சொன்னது னால அங்க போனேன். பெரிய வீடு. எனக்குன்னு தனி

ரூமெல்லாம் கொடுத்தாங்க. ஆனா, அந்த டீச்சரோட தம்பி அடிக்கடி வந்தான். நான் இருக்கறத பார்த்துட்டு என்னைய சுத்தினான். அந்த டீச்சருக்கு தெரிஞ்சுது. ஆனா, சொல்ல முடியலை. ஏன்னா, அந்ததம்பியோட தயவு, காசு, காவல் எல்லாம் அவளுக்கு தேவையா இருந்தது. அவனைப் பார்த்து ஒரு பயம் இருந்தது. அதனால நானே அவங்க தம்பியை டீல்பண்ண ஆரம்பிச்சேன். சுள்ளுனு மூஞ்சிய காமிச்சேன் தூக்கி எறிஞ்சு பேசினேன். சும்மா என் ஃப்ரெண்டை போல் பண்ணவச்சிட்டு, 'அவங்க அப்பா சர்க்கிள் இன்ஸ்பெக்டர் நான் என்ன உதவி கேட்டாலும் செய்வாரு' அப்படிங்கற மாதிரி பேச ஆரம்பிச்சேன். அந்த பையன் பதிலுக்கு பண்ண ஆரம் பிச்சான். இவங்க என்னாத்துக்கு? இவங்களை அனுப்பிடுங்க,' அப்படின்னு வெளிப்படையா பேசினான். நான் தலைமை யாசிரியர்கிட்ட இந்த மாதிரி பிரச்சனை அப்படின்னேன். அவங்க கூப்பிட்டு டீச்சர்கிட்ட பேசினாங்க. 'ஏன், என்னாச்சு உனக்கு? ஏன் அந்தப் பொண்ண வெளிய அனுப்பற' அப்படின் னாங்க. அந்த டீச்சர் உடனே தம்பியை திட்டி' நீ வேணாம் போடா' அப்படின்னு பேசற லெவலுக்கு வந்துட்டாங்க. இத்தனை தைரியத்துக்கு என்ன தெரியுமா காரணம்; நீங்க இருக்கீங்க. வேலையை வேணாம்னு உதறிவிட்டு வீட்டுக்கு வந்துடலாம்கற திமிர்தான் காரணம். நான் சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லை அப்படிங்கற எண்ணம்தான் காரணம். நீங்க உட்காரவச்சு சோறு போடுவீங்க அப்படின்னு எனக்குத் தெரியும். ஆனாலும் இப்படி திரும்பி வரக்கூடாதுன்ற துல நான் தீர்மானமா இருந்தேன். இந்த மாதிரி சின்னச் சின்னதாநிறைய விஷயங்கள் வெளிய நடந்ததாலதான் எனக்கு மனசுல திடம் வந்தது. இதுல ஒரு தமாஷ் என்ன தெரியுமா? எனக்கு ஸ்கூட்டர் ஓட்ட வண்டி கொடுத்ததே அந்த டீச்சரு டைய தம்பிதான். அவன்தான் வண்டி கத்துக்கணும்னு உற்சாகப்படுத்தினான்.

பின்னால உட்கார்ந்து வண்டி கத்து கொடுக்கணும்னு ட்ரை பண்ணான். நான் 'வேணாம், நானா ஓட்டறே'ன்னு சொல்லிட் டேன். வேற ஸ்கூலுக்கு மாறினவுடனே 'என்னாலதானா? என்னாலதானா?'ன்னு கேட்டான். 'ஆமாம், உன்னாலதான்' அப்படின்னு சொன்னேன். 'ரொம்ப ஸாரி. மன்னிச்சுக்கோங்க, ஒரு ஆர்வத்துல பண்ணிட்டேன்.' அப்படின்னா. 'அதனால பாவாயில்லை. இந்தப் பள்ளிக் கூடத்துல கூடுதலா சம்பளம். இன்னும் பெரிய பள்ளிக்கூடம்.' அப்படின்னு சொல்லிட்டு வந்துட்டேன்.

விழுப்புரத்துலேர்ந்து ஸ்கூட்டர் கிடைச்சுது. ஒரு டீச்சர் வச்சுருந்தாங்க. ஆனா, அவங்களுக்கு ஓட்டறதுக்கு அவ்ளோ நல்லா வராது. 'நீங்க பின்னாடி உட்கார்ந்துக் கோங்க டீச்சர். நான் ஓட்டறேன்' அப்படின்னு சொல்லி தினமும் நான்தான் ஸ்கூட்டர் ஓட்டிகிட்டு வருவேன். அவங்க பின்னால உட்கார்ந்து வருவாங்க. ஞாயித்துக் கிழமை கூப்பிட்டு இந்தக் கோயிலுக்கு போகலாம் வாடி அந்தக் கோயிலுக்கு போகலா வாடின்னு சொல்லுவாங்க. நல்லா அவங்க ஸ்கூட்டர்ல சுத்தியிருக்கேன். அப்பப்போ நானும் பெட்ரோல் போட்டுப்பேன்."

"விழுப்புரத்துல ஒண்ணும் தொந்தரவு இல்லையா."

"சாப்பாடு கஷ்டம். தங்கற இடம் நல்லாயிருந்தது. சாப்பாட் டுக்கு வாதியில்லை. அதான் பிரச்சினை. சாப்பாடு மெட்ராஸ்ல நல்லாயிருக்கும். ஆனா, தங்கற இடத்துல இந்த மாதிரி பிரச்சினை."

"தலையெழுத்தா உனக்கு?"

அப்பா உறுமலாய் பேசினார்.

"நாமளா தேடிக்கிட்டது தானேப்பா. நானா வெளிய போய் என்னான்னு தெரிஞ்சுக்கணும்னு செய்ததுதானே. நாகர் கோவில்லயே சுத்தி நாகர்கோவில்லயே மடிஞ்சு போயிடப் போறோமோன்னு ஒரு பயமும். வெளி உலகம் தெரிஞ்சுக்க ணும்னுதான் நான் மெட்ராஸ் போனேன். அதையும்தவிர

கொஞ்சம் இங்கிலீஷ் பேசணும். கம்ப்யூட்டர் கோர்ஸ் ஏதாவது கத்துக்கணும் அப்படின்னும் போனேன். ஆரம்பத்துல மெட்ராஸ்ல மட்டும்தான் கம்ப்யூட்டர் பள்ளிக்கூடமெல்லாம் இருந்தது. இப்போ எல்லா இடத்துக்கும் வந்துடுச்சு.

அப்பா... நம்ம வீட்ல கம்ப்யூட்டர் வாங்கணும்ப்பா. இன்டர்நெட் கனெக்ஷன் பண்ணணும். நான் உனக்கு சொல்லிக் கொடுத்துடறேன்ப்பா, இன்டர்னெட்ல நிறைய விஷயங்கள் இருக்கு. உனக்கு பொழுது போகறதே தெரியாது. வீட்டோட உட்கார்ந்து நிறைய கத்துக்கலாம். நிறைய தெரிஞ்சுக்கலாம்.

"அதுக்கு நிறைய துட்டு ஆகாது?"

"ஆமாம்ப்பா. நாப்பதஞ்சு அம்பது ரூபா ஆகும். பேங்கல கடன் கேட்டாகொடுக்கறான்."

"வருமானம் இருக்கறவனுக்கு பேங்கல கொடுப்பான். உனக்கு எப்படி கொடுப்பான்?"

"நான் ஏதாவது வேலை பார்த்துகிட்டு பேங்கல கடன் கேட்கறேன்ப்பா. அந்த பள்ளிக்கூடத்து வேலை மட்டும் கிடைச்சுடுச்சின்னா ரொம்ப நல்லாயிருக்கும்."

"தாணுமாலய சாமியை கேளாடி. நிச்சயம்தருவாரு."

அம்மா மறுபடியும் சொன்னாள்.

நாகர்கோயிலிலிருந்து ஆறுகிலோ மீட்டர்வயல்தான்டி, குளம் தான்டி, பகுருளி ஆறு எனப்படும் ஆறு தாண்டி, கோவில் நோக்கி விடிகாலைநேரம் போகையில் மனம் சந்தோஷத்தில் துள்ளும். மிகப்பெரிய நிம்மதி ஏற்படும். அம்மாவோடு போகும் போது இன்னும் ஆனந்தமாக இருக்கும்.

ஆனால், வெளியூர் மக்களுக்கு சுசீந்திரம் என்றால் அந்தப் பதினெட்டு அடி உயர ஹனுமார்தான் ஞாபகம் வருகிறது. அல்லது அதுதான் முக்கியமான விஷயமாக நினைத்துக் கொள்கிறார்கள். இது ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப் படாத ஹனுமார் என்று சொன்னால் யாருக்கும் புரிவதில்லை.

அந்தப் பிரம்மாண்டமான உருவச்சிலை அது நிற்கிற ஒயில் அனைவரையும் கவர்ந்துவிடுகிறது. அந்த ஆஞ்சநேயரின் வாலுக்கு வெற்றிலை மலையும் வெண்ணெயும் சாற்ற பல வெளியூர் ஆட்கள் போட்டி போட்டுக் கொண்டு முந்துகிறார்கள்.

வெகுகாலம் முன்பு பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு லிங்க உருவம் என்பது கதையாகச் சொல்லியும் ஜனங்களுக்குப் புரியவில்லை. தாணுமாலயனைப் புரிந்து கொள்ள கொஞ்சம் அவகாசமும் அனுமதி தேவை. ஆழ் நிலைக்குச் செல்லுகின்ற மனம் தேவை. வெறுமே உட்கார்ந்திருக்கின்ற குணம் தேவை.

அந்த விடியற்காலையில் சன்னதிக்கு எதிரே வெறுமே உட்கார்ந்து சிவலிங்க சொரூபத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். உள்ளுக்குள் அழகழகாய் சிந்தனைகள் முளைவிடும். அன்று சிறிதுநேரம் உட்கார்ந்த உடனேயே தெரிந்துவிட்டது. நாகர் கோயிலிலேயே தனக்கு வேலை கிடைக்கும் என்பது புரிந்துவிட்டது-

அந்தப் பள்ளிக்கூடமா? இல்லை. வேறு எங்கேணுமா?

மறுபடியும் கேள்வியை எழுப்பி பேசாமல் தாணுமாலயனைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

சட்டென்று அந்தப் பள்ளிக்கூடத்திற்குள் அவள் நுழைவது போல் ஒரு எண்ணம் உண்டாயிற்று. மிக அழகாக உடுத்திக் கொண்டு கம்பீரமாகப் போக குழந்தைகள் எழுந்து நின்று வணக்கம் கூப்பினார்கள்.

அவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்.

'இதென்ன... தூக்கமா விழிப்பா? அல்லது இரண்டும் கலந்த நிலையா.' உட்கார்ந்து கொண்டே தூங்குகின்ற பழக்கம் நம்மிடமே இல்லையே. ஆனால், மனம் எங்கோ மயங்கி சொருகிக் கிடக்க சட்டென்று உள்ளுக்குள் கனவு போலும் ஒரு விஷயம் தோன்றியதே. மிகக்குறைந்த நேரமே இருந்தாலும்

இதுதான் என்பதுபோல் ஒரு எண்ணம் ஏற்பட்டதே. தாணுமாலயன் பேசுகிறார். மௌனமாய் பேசுகிறார்.'

'இன்னும் சிறிதுநேரம் இருப்போமா? தாணுமாலயன் ஏதாவது சொல்வாரா?'

அவள் யோவசனை செய்தாள்.

மறுபடியும் சிறிது நேரம் கண்மூடி உட்கார்ந்திருந்தாள். மெல்லக் கண் திறந்து தாணுமாலயனைப் பார்த்தாள். தாணுமாலயன் மீது புத்தம் புதிதாய் பன்னீர் ரோஜாப்பூ மாலை போடப்பட்டிருஹநதது.

'அட.... மாப்பிள்ளை மாதிரி இருக்கீர்.'

உள்ளுக்குள் வார்த்தை பொங்கியது.

சிவலிங்கத்தை விட்டுவிட்டு ரோஜாப்பூ வடிவத்தையே உற்று நோக்க ரோஜாப்பூ வெறுமே அந்தரத்தில் தொங்கியது. அவளை நோக்கி வந்தது. அவள் கழுத்தில் விழுந்தது. மறுபடியும் திடுக்கிட்டு எழுந்தாள். என்ன சொல்கிறார் என்று திகைத்தாள்.

'சாமி போறும். எதுவும் சொல்ல வேண்டாம். இப்போதைக்கு கல்யாணம், கொண்டாட்டம் எதுவும் வேண்டாம். இன்னும் ஒரு வருஷம் வேலை செய்யறேன்.'

அவள் தாணுமாலயனை நோக்கி கெஞ்சுவது போல் கைகூப்பினாள். எழுந்து கோவிலை வலம் வந்தாள். மாலை வேளையில் கோவில் சுற்றியுள்ள எல்லா கருங்கல் பாவை விளக்குகளிலும் அகல்விளக்கு இருந்ததில் எண்ணெய் நிரப்பி திரியிட்டு விளக்கேற்றினார்கள். இருட்டுகின்ற நேரத்தில் கோவிலில் உள்ள எல்லாப் பாவைகளிலும் விளக்குகள் எரிய அந்தச் சூழல் சந்தோஷமாக இருந்தது. கண் முழுவதும் விளக்குகள் மின்னின.

அவள் வீட்டுக்குள் வந்து வண்டியை ஸ்டாண்ட் போட அப்பா அவளை வாசலில் நின்று வரவேற்றார்.

"உனக்கு அந்தப் பள்ளிக்கூடத்துல வேலை கிடைச்சுட்டது" என்று சொன்னார்.

ராணியின் மனம் விக்கித்து நின்றது. தாணுமாலயனுக்கு நன்றி சொன்னது. உள்ளேபோய் அப்பாபிரித்த கவரைப் பிரித்து உள்ளுக்குள் இருக்கின்ற கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். மலர் மதிப்பெண் பட்டியல்கள், சான்றிதழ்களோடு அவளைப் பார்க்குமாறு கடிதம் சொல்லியது. கிட்டத்தட்ட இது வேலை கிடைத்தது போன்றது போலத்தான். சான்றிதழ்கள் சரியாக இருந்தால் வேலையில் சேர்த்துக் கொள்வார்கள். 'நாளைக்கு என்ன புடவை உடுத்திக் கொள்வது?' அவள் யோசித்தாள்.

சிகப்பு நிற கோராக் காட்டன் கண்முன் தோன்றியது. மறுநாள் அதையே உடுத்திக் கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்பினாள்.

அம்மா வராண்டாவில் நிறுத்தி நெற்றியில் தாணுமாலயனின் திருநீறு இட்டாள். வராண்டாவில் இருந்த கண்ணாடியில் முகம் பார்த்தபோது அவள் முகம் அவளுக்கே குதூகலத்தைக் கொடுத்தது.

2

அந்த தலைமையாசிரியையின் அறையில். அந்த தலைமையாசிரியை பின்னால் மிகப்பெரிய அளவில் ஸ்தாணுமாலயனின் உருவம் வரையப்பட்ட வண்ணப்படம் இருந்தது. அதற்குக் கீழ் ஊதுவத்தி ஸ்டாண்டும் கற்பூரத்தட்டும் உதிர்ந்த பூக்களும் இருந்தன. 'இது போறுமே. இவர் பார்த்துப்பாரே இந்தப் பள்ளிக்கூடத்தை.'

உள்ளே நுழைந்ததும் கன்னத்தில் போட்டுக் கொண்டு அந்தப் படத்தை கையெடுத்து கும்பிட்டுவிட்டு பிறகு மெல்ல

தலைமை ஆசிரியையிடம் நெருங்கினாள். தன் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"ஆங்.... ஞாபகம் இருக்கு. ரெண்டு தடவை வந்திருக்க இல்ல இங்க. சர்டிஃபிகேட் கொண்டு வந்திருக்க இல்லையா?" என கேட்டார்.

மிக மேலோட்டமாக அவளுடைய சான்றிதழ்களை சரி பார்த்தார். திரும்ப அவளிடம் கொடுத்தார்.

"எல்லாம் சரியா இருக்கும்னு எனக்குத் தெரியும். என்ன எதிர்பார்க்கற? அதுதான் முக்கியம். அதை வச்சுதான் உனக்கு வேலை."

"நீங்க என்ன கொடுக்கறீங்களோ அது போதும்." அவள் அமைதியாகப் பதில்சொன்னாள்.

"இது புதுசா ஆரம்பிச்சுருக்கற பள்ளிக்கூடம். பெருசா எதுவும் கொடுக்க முடியாது. அதே நேரத்துல நாம ரொம்ப பொறுப்பாவும் நடந்துக்கணும். சம்பளம் கம்மியா கொடுக்கறாங்களேன்னு ஏனோதானோன்னு இருக்கமுடியாது."

"நீங்க சம்பளமே கொடுக்காட்டாலும் நான் ஏனோதானோன்னு இருக்கமாட்டேன்."

"விழுப்புரத்துல நல்ல சம்பளம் வாங்கியிருக்க. அதை விட்டுட்டு ஏன் இங்க வந்த?"

"சாப்பாடெல்லாம் பிரச்சினை ஆயிடுச்சு. எனக்கு வீடு இங்க இருக்கு. அப்பா அம்மாவைவிட்டு பிரிஞ்சு இருக்கறதுக்கு எனக்கு விருப்பமில்லை. எங்கவீட்ல அப்பா அம்மாவும் கூடவே இருக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டாங்க."

"நீதான் உங்க அப்பா அம்மாவை காப்பத்தணுமா?"

"அப்படி ஒண்ணுமில்லை. எங்க அண்ணன் இருக்கார். டெல்லிக்கு பக்கத்துல ஃபரிதாபாத்ல வேலை செய்யறாரு. டயர் கம்பெனி."

"அப்பா அம்மா போகக்கூடாதா?"

"இங்க சொந்தவீடு இருக்கு. மூணு போர்ஷன் வாடகைக்கு விட்டிருக்கோம். அந்த வாடகையும் வருது. அப்பாவுக்கு நாகர்கோயில் விட்டு போகறதுக்கு இஷ்டம் கிடையாது?"

"என்ன இருக்கு நாகர்கோயில்ல?"

"அமைதியான ஊர். பெரிய தொந்தரவு கலாட்டால்லாம் இல்லை. அதே நேரத்துல ஒரு டவுன்ல என்ன கிடைக்குமோ அத்தனையும் நாகர்கோயில்லயும் கிடைக்கும். காத்து கெட்டுப் போகலை, தண்ணி கஷ்டம் கிடையாது."

"அதெல்லாம் அந்தக் காலம். இப்போ தண்ணி கஷ்டம் வந்துடுச்சு."

"இது பன்னெண்டு வருஷத்துக்கு ஒருமுறை வரும் தண்ணி கஷ்டம் தான். பூமி நல்லா காய்ஞ்சுதுன்னா, நல்லா தண்ணி இழுத்துக்கும். அதுக்காகவே ஒரு மழை தப்பிப்போகும். இது எங்கப்பா சொன்னாங்க."

"நானும் கேள்விப் பட்டிருக்கேன்."

தலைமையாசிரியை ராணி பேசியதை ஆமோதித்தாள்.

"சொல்லு. எவ்ளோ எதிர்பார்க்கற?"

"நீங்க சொல்லுங்க மேடம்."

"நான் வெறும் சர்டிஃபிகேட்டை மட்டும் வச்சு உன்னை செலக்ட் பண்ணலை. நீ பார்க்க பளிச்சுனு இருக்க. ஒரு டீச்சர் அழகா கம்பீரமா இருந்தா குழந்தைங்களுக்கு ரொம்ப ஆசை. நீ குணமா, அமைதியா அதுங்களோட கொஞ்சிப் பேசினீன்னா அதுங்க இன்னும் நெருக்கமா ஒட்டிக்கும். ஒண்ணும் பெருசா பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டாம். அதுங்களோட உட்கார்ந்து பேசறதுல நிறையவே கத்துக்கணும். நான் மூணாம் க்ளாஸோ, நாலாம் க்ளாஸோ தரப் போறதில்லை. ரெண்டு ஆயா கூட இருப்பாங்க. அவங்களோட பாட்டும் கதையும் சொல்லி கிட்டிருந்தா போதும். சிலபஸ்னு ஒண்ணும் இருக்கும். ஆனா சிலபஸ் முக்கியமில்லை. நாம அந்தக் குழந்தைகளோட

ஏற்படுத்திக்கற தொடர்பு. காட்டுகிற அக்கறை. பதிலுக்கு அதுங்க நம்மள பார்த்து ஏங்கற ஏக்கம் முக்கியம். ஞாயித்துக் கிழமையும் பள்ளிக்கூடம் போகணும்னு ஒரு குழந்தை சொல்லிடுச்சுன்னா நாம் ஜெயிச்சுட்டோம்னு அர்த்தம்."

"ஈஸியா ஜெயிக்ககலாம் மேடம்."

அவள் அமைதியாகச் சொன்னாள்.

"நான் நாலாயிரம் ரூபா சம்பளம் தரேன்."

"போதும் மேடம்"

"காலையில எட்டு மணிக்கு வந்துடணும்."

"ஏழே முக்காலுக்கு இருப்பேன் மேடம்."

"எப்படி வருவ."

"ஸ்கூட்டர் இருக்கு மேடம்."

"அப்போ உனக்கு ஆட்டோ அனுப்ப வேண்டாமா?"

"எதுக்கு ஆட்டோ?"

"இல்லை.. இதுக்கு முந்தி இருந்த ரெண்டு டீச்சருங்க பள்ளிக்கூடத்துக்கு ஆட்டோலதான் வருவாங்க. அதனால கேட்டேன்."

"இல்லை மேடம். நான் ஸ்கூட்டர்ல வரேன்."

"எங்க இருக்கு வீடு."

அவள் தன் வீட்டைச் சொன்னாள்.

"அட வேணிகூட அங்கதான் இருக்கு. அதையும் நீ கூட்டி வந்துடலாமில்ல?"

"யாரு 'வேணி' மேடம்?"

"இன்னொரு டீச்சர். இன்னொரு யு.கே.ஜி. டீச்சர்.

இசபெல்.... இந்த டீச்சரை கூட்டிகிட்டுபோய் வேணி டீச்சர்கிட்ட இன்ட்ரொடியூஸ் பண்ணு.

வேணி டீச்சரோட பேசு. நான் அதுக்குள்ள மத்த பேப்ப ரெல்லாம் ஏற்பாடு பண்ணி உனக்கு அனுப்பறேன். கை யெழுத்து போட்டுடு"

"அப்போ இந்த சர்டிஃபிகேட்டெல்லாம்."

"நீ எடுத்துக்க. இதெல்லாம் நான் வச்சுகிட்டு ஏன் காபந்து பண்ணணும். இதைவிட நல்ல வேலை கிடைச்சா நீ எப்போ வேணாலும் போகலாம். ஆனா முன்கூட்டியே சொல்லிட்டுப் போ. தடுக்குனு நின்னுடாத. மாத்து ஆள் நான் ஏற்பாடு பண்ணணுமில்லை?"

"அப்படி எதையுமே அந்தரத்துல விட்டுட்டு போகமாட் டேன் மேடம்."

"எனக்குத் தெரியும், இங்க வந்து சேரவங்க நல்லவங்களாத் தான் வருவாங்க. அப்படித்தான் இந்த பள்ளிக்கூடம் நடக்குது. கடவுள் மேல பாரத்தை போட்டுட்டு அவர் அன்புலதான் இதை நடத்தறேன். ஒரு நல்ல டீச்சர் வேணும்னுதான் ஒரு ஞாயிற்றுக் கிழமை முழுக்க பிரார்த்தனை பண்ணேன். நீ வந்து நின்ன. நீ நல்ல டீச்சர்னு உள்ள தோணுது. சந்தோஷமா படிப்பு சொல் லிக்கொடு. குழந்தைங்க பலமா வளரட்டும்."

"சரிங்க மேடம்."

அவள் வணங்கிவிட்டு அந்த ஆயாவோடு அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

ஐந்து வகுப்பு வரையில்தான் பள்ளிக்கூடம். அதற்குமேல் இனிமேல்தான் விரிவாக வேண்டும். கீழே ஐந்து அறைகளும் மேலே ஐந்து அறைகளுமாய் பத்து அறைகள் இருந்தன. அதற்குமேல் கம்பிகள் நீட்டிக் கொண்டு தூண்கள் துருத்திக் கொண்டிருந்தன. நான்கு மாடிக் கட்டிடம் கட்டவேண்டும் என்கிற எண்ணம் இருப்பதாக அழைத்துக் கொண்டு போன ஆயா சொன்னாள்.

வகுப்பறைகள் பெரிதாய், காற்றோட்டமுள்ளதாய், மின் விசிறி உள்ளதாய், குழல் விளக்கு பொருந்தியதாய் இருந்தது. ஆனால், சுவர்களில் படங்கள் இல்லாமல் காட்சியளித்தன. எல்லா வகுப்பறையிலும் படங்கள் ஒட்டவேண்டும் என்ற எண்ணத்தோடயே ராணி அறைகளைக் கடந்தாள்.

பள்ளிக்கூடம் துவங்க இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றன. அப்படியொன்றும் ஜனங்கள் வந்து இந்தப் பள்ளிக்கூடத்தை நோக்கி குவித்துவிடப்போவதில்லை. வேறு பள்ளிக்கூடத்தில் இடமில்லாதவர்கள்தான் இங்கு கொண்டு வந்து சேர்ப்பார்கள்.

"புதுப் பள்ளிக்கூடம்... நல்லாயிருக்கும்னு நினைக்கறேன்" என்று தயக்கத்தோடு வருவார்கள்.

ஒரு பள்ளிக்கூடம் உயிர் பெற்று பெரிய மரமாக வளர குறைந்தபட்சம் பதினைந்து முதல் இருபது வருடம் தேவை. இந்தப் பள்ளிக்கூடம் ஆரம்பித்து மூன்று வருடம்தான் ஆகின்றது. நல்ல டீச்சர்களின் வருகையில்தான் இந்தப் பள்ளிக்கூடம் வளரும்.

இந்த தலைமையாசிரியை மேடம் அமைதியாக இருக்கிறார். இனிமையாக இருக்கிறார். வேறு எந்தப் பள்ளிக்கூடத்திலும் சான்றிதழ்கள் தரமாட்டார்கள். வாங்கி ஒரு கவரில் போட்டு ஒரு பீரோவில் வைத்துப் பூட்டிவிடுவார்கள். வேண்டுமென்று கேட்டால்தான் கொடுப்பார்கள். அதற்கு ஆயிரம் கேள்விகள் கேட்பார்கள்.

'இதைவிட நல்ல வேலை கிடைக்கும்போது நான் ஏன் தடுக்கணும்' என்று தலைமையாசிரியை கூறித்தான் சான்றிதழ்களை திருப்பிக் கொடுத்துவிட்டாள்.

இதற்கு எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம். 'நீ போனால் இன்னொருத்தி' என்று அலட்சியமாகவும் கொள்ளலாம். அல்லது உன்னை நான் சிறை பிடித்து

வைக்கவும் விரும்பவில்லை. உன் சுதந்திரம் இங்கே மதிக்கப்படுகிறது.' என்பதாகவும் எடுத்துக் கொள்ளலாம்

நல்லவிதமாகவே எடுத்துக் கொள்ளலாமே.'

அவள் மனதுக்குள் தீர்மானம் செய்து கொண்டாள்.

நாலாயிரம் ரூபாய் சம்பளம் என்பது நல்ல சம்பளம். நாகர்கோயிலில் அவ்வளவு தூரம் எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் தயங்கி இருந்தால் ஐந்தாயிரம் என்றுகூட சொல்லியிருக்கலாம். நல்ல டீச்சர் என்று நம்மை நினைத்தால்தான் இப்படி சடக்கென்று நல்ல சம்பளமாக கொடுக்கிறார்கள்.

இப்பொழுது பார்க்கப் போகிற அந்த வேணிக்கு என்ன சம்பளம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். சொல்வார்களா என்று தெரியவில்லை. கடைசி வகுப்பறைக்குள் அந்த இசபெல் நுழைய பத்தடி தள்ளி நடந்து கொண்டிருந்த ராணி அந்த அறைக்குள் நுழைய அந்த அறையிலிருந்து வேகமாகப் புறப்பட்ட பெண் கிட்டத்தட்ட மோதுவது போல் வந்து நின்றாள். உள்ளேயும் இல்லாமல் வெளியேயும் இல்லாமல் வாசற்படிக்குக் கீழ் கிட்டத்தட்ட முட்டிக் கொள்வது போல் நின்றார்கள்.

சட்டென்று விலகினார்கள்.

"இவங்கதான் வேணி. வேணி... வேணி டீச்சர்" என்று மூன்று விதமாக இசபெல் சொல்ல அவள் புன்சிரிப்புடன் வேணியைப் பார்த்துக் கைகூப்பினாள்.

"நீங்க ராணியா?"

"ஆமாம். ராணி எம்.ஏ. சைக்காலஜி."

மறுபடியும் வேணி கேட்டாள்.

"விழுப்புரம் டீச்சர்தானே?"

ஆமாம் என்று தலையசைத்தாள்.

மீண்டும் தான் நினைக்கின்ற பெண்ணும் இவளும் ஒன்றுதானா என்பது போல வேணி கேள்வி கேட்க மறுபடியும் புன்சிரிப்போடு ஆமாம் என்று தலையசைத்தாள்.

"நான் வேணி" இரண்டு சிவப்பு வளையல்கள் அணிந்த கை சட்டென்று முன்னே வந்தது.

ராணி இரண்டடி முன்னேறினாள். மிக வேகமாய் அந்தக் கையை பற்றிக் கொண்டாள். அந்த இருவரும் மறுபடியும் நெருங்கி நின்றார்கள். ஒருவர் மீது ஒருவருடைய மூச்சுக் காற்று படும் வண்ணம் அருகருகே நின்றார்கள்.

"வெல்கம் டு கோல்டன் புரோப்பரைட்டரி ஸ்கூல்" வேணி வாய்நிறைய சொன்னான்.

அந்தக் குரலும் மெல்லிய கூச்சலாகக் கொடுத்த வரவேற்பும் ராணிக்கு பிடித்திருந்தன. 'மிக்க நன்றி' என்று ஆங்கிலத்தில் சொன்னாள்.

"நீ போ இசபெல்" என்று இசபெல்லை அனுப்ப, இரண்டு பேரையும் சற்று நேரம் நின்று வியப்பாகப் பார்த்த இசபெல் மெல்ல கால்களைத் தேய்த்தபடி நடந்து கடந்து போனாள்.

"கடவுளே... எனக்குப் பிடிச்ச டீச்சரா வரணும்னு நினைச்சுகிட்டிருந்தேன். எனக்கு பிடிச்ச மாதிரியே வந்துட்டீங்க."

"என்னை எப்போ பார்த்தீங்க."

ராணி வியப்போடு கேட்டாள்.

"முதல் இன்ட்ர்வியூவின்போது நானும் கூடவேதான் இருந்தேன்."

"ஆறேழு டீச்சர் இருந்தாங்க. நீங்க இருந்ததை பார்க்கலை."

"எனக்கும் தெரிஞ்சுது. நீங்க பார்த்துடக் கூடாதேன்னு சொல்லிட்டு நான் கொஞ்சம் பின் பக்கமாத்தான் நின்னுகிட்டிருந்தேன்."

"ஏன்?"

ராணி ஆவலோடு கேட்டாள்.

"உங்களை நல்லா பார்க்கறதுக்கு."

" என்ன பார்த்தீங்க?"

"நீங்க ரொம்ப கெட்டிக்காரச் டீச்சர்னு தெரிஞ்சுகிட்டேன்."

"பார்த்தா கெட்டிக்காரத்தனம் தெரிஞ்சிடுமா?"

"பார்க்கற விதத்துல பார்த்தா தெரியும்."

"எனக்கும் அந்த மாதிரி பார்க்கறதுக்கு சொல்லிக் கொடுங்க டீச்சர்."

"அதுமட்டும் சொல்லிக் கொடுத்தா போதுமா?"

வேணி கண்சிமிட்டியபடி கேட்டாள்.

"உங்களுக்கு என்ன தெரியுமோ அத்தனையும் சொல்லிக் கொடுங்கோ. நான் கத்துக்கறேன்."

"தட் இஸ் த ஸ்ப்ரிட்."

வேணி மறுபடியும் கை நீட்டி குலுக்கினாள்.

"எப்போ ஜாயின் பண்றீங்க?"

"இப்பவே. இன்னிக்கே."

"நாள் நட்சத்திரம் பார்க்க வேணாமா?"

"கடவுள் மேல பாரத்தை போட்டுட்டு வந்த நேரம் நல்ல நேரம்னு வேலையை எடுத்துக்க வேண்டியதுதான்."

"இன்னிக்கு வியாழக்கிழமை. ஒண்ணு டூ ரெண்டு குரு ஹோரை. கையெழுத்து போட்டு சேர்ந்துடுங்க."

"உங்க டேட் ஆஃப் பர்த் என்ன வேணி?"

"எதுக்கு கேட்கறீங்க?"

"என்ன போய் வாங்க போங்கன்னு சொல்றீங்களே என்னைவிட நீங்க வயசுல பெரியவங்களாள இருந்தா அப்படி கூப்பிடாதீங்கன்னு சொல்றதுக்குத்தான்."

"உங்களைவிட நான் ரெண்டரை வயசு பெரியவங்க."

"அப்போ வா போன்னே கூப்பிடுங்க."

"வேணாம். ஒரு டீச்சர் இன்னொரு டீச்சரை வாங்க போங்கன்னு கூப்பிடறதுதான் மரியாதை."

"கூப்பிடலாம் தப்பில்லை. ஆனா ரொம்ப சம்பிரதாயமா இருக்கும். நட்பு இருக்காது."

"அட, உள்ள நுழைஞ்சுவுடனே நட்பு டிமாண்ட் பண்றீங்க."

"டிமாண்ட் பண்ணா நட்பு கிடைச்சுடுமா? நட்பு காட்டினா தான் நட்பு கிடைக்கும்."

"யூ ஆர் கரெக்ட் அப்போ நீங்களும் என்னை 'வாபோ'ன்னு கூப்பிடுங்க. அப்போ நானும் உங்களை 'வா போ'ன்னு கூப்பிடறேன்."

"அது எப்படிங்க? என்னைவிட நீங்க பெரியவங்க இல்லையா."

"நாங்க சின்னவங்களை ரொம்ப பெராம்ப சின்னவங்களை யு.கே.ஜி. வந்து சேரவங்களைக்கூட வாங்க போங்கன்னுதான் கூப்பிடுவோமே தவிர வாடி போடின்னு சொல்லமாட்டோம்."

"குழந்தைங்களை வாங்க போங்கன்னு கூப்பிடுவோம். நம்மள எப்படி கூப்பிடிறதுனுதானே பிரச்சினை."

"என்ன உள்ள நுழைஞ்சவுட்னேயே படுத்தறியே."

"ஆங்... இது எவ்வளவு நல்லாயிருக்கு. இதை விட்டுட்டு என்னாங்க ஏங்கன்னா எப்படி."

"அதான் சொல்றேன் நீயும் என்னை அப்படி கூப்பிடுன்னு."

"என்னைவிட வயசுல பெரியவங்க. சீனியர் டீச்சர். அது தப்பா வரும்."

"போரடிக்கற."

வேணி அலுப்போடு நாற்காலியில் சாய்ந்து கொண்டாள்.

"ஸாரி. ஸாரி. நானும் கூப்பிடறேன். ஐ மீன் கூப்பிட ட்ரை பண்றேன். என்னமோ பார்த்தா மரியாதையாதான் நடத்தணும்னு

உள்ளுக்குள்ள தோணுது. அதனால ரெண்டும் கலந்தாங் கட்டியா உங்களைக் கூப்பிடறேன்."

"அதென்ன கலந்தாங்கட்டியா?"

"பலபேர் முன்னாடி வாங்க போங்கன்னு சொல்றேன். நம்ம மட்டும் பேசிக்கும்போது 'ஏய் வேணி. இங்க வாயேன்' அப்படின்றேன்."

"சரி. உன் இஷ்டம். பழைய பள்ளிக்கூடம் பத்திச் சொல்லு. எந்த க்ளாஸ் எடுத்த? எங்கிட்டு ட்ரெயினிங் முடிச்ச?"

அவர்கள் இரண்டு பேரும் அரட்டை அடிக்கத் தொடங்கினார்கள்.

ஒண்ணேகால் மணிக்கு வேணி துள்ளி எழுந்திருந்து "கையெழுத்து போடணும்னு சொன்ன இல்ல. நல்ல நேரத்துல வா" என்று ராணியைக் கைபிடித்து கூட்டிப்போனாள்

தலைமையாசிரியையிடம் பேசினாள். பள்ளியில் சேருவதற்கான பேப்பரில் கையெழுத்து போட்டு பெற்றுக் கொண்டாள்.

பள்ளியின் சட்டப்படி நடந்து கொள்வதாய் சட்டப்படி கையெழுத்திட்டாள்.

"மத்தியானம் எங்க சாப்பிடப் போற ராணி?"

வேணி பிரியமாகக் கேட்டாள்.

"இதுவரைக்கும் முடிவு பண்ணல. வீட்டுக்குப் போயிட முடியும்னுதான் நினைச்சேன். வேற எங்கேயாவது போக ணும்னா போகலாம்."

"இங்க ஒண்ணும் கிடைக்காது. எங்கேயாவது ஹோட்டல்ல போய்தான் சாப்பிடணும். வீட்டுக்கு அவசியம் போறதா இருந்தா போகலாம். இல்லை ஹோட்டல்ல சாப்பிடறதா இருந்தா சாப்பிடலாம்."

"இங்க எந்த ஹோட்டல் நல்லாயிருக்கும்?"

"நான் ஜாஸ்தி போனதில்லை."

"நான் அடிக்கடி போவேன். இங்க கௌரிசங்கர்னு ஒரு ஹோட்டல் நல்லாயிருக்கும்"

"நீ என்ன வெஜிடேரியனா? நான்வெஜிடேரியனா?"

"எங்க வீட்ல பழக்கப்படி பார்த்தால் நாங்க அசைவம். ஆனால் எல்லாருமே சைவமா மாறிட்டோம்."

"நான் நான்-வெஜ் நல்லா சாப்பிடுவேன். ஆனா எங்க வீட்ல சமைக்க மாட்டாங்க. இன்னிக்கு உனக்காக வெஜிடேரியன் கௌரிசங்கர். சரியா?"

அவர்கள் தலைமையாசிரியையிடம் விடைபெற்று வெளியே வந்தார்கள்.

வேணி பின்னால் ஏறிக்கொள்ள ராணி வண்டியை ஓட்டிக் கொண்டு போனாள்.

"ஐயோ.... வண்டி இருக்கறது சௌகரியம்தான். மூணு நிமிஷத்துல கௌரிசங்களுக்கு வந்துட்டோம். இல்லைன்னா சைக்கிள் ரிக்ஷா பிடிச்சு லொடுக்கு லொடுக்குன்னு ரொம்ப மோசமா இருக்கும். ஆட்டோ ரிக்ஷான்னா பதினஞ்சு ரூபா கேட்கறான். ஏறினதும் தெரியலை. இறங்கினதும் தெரியலை."

"வண்டி வாங்கிடுங்களேன்."

ராணி அவள் பேச்சுக்கு எதிரொலியாகப் பேசினாள்.

"வாங்கிட்டேனே."

வேணி உற்சாகமாகச் சொன்னாள்.

"அப்போ கொண்டு வரலீங்களா?"

"கொண்டாந்துட்டேனே."

"எங்க வண்டி?"

"இதான் என் வண்டி." என்று ராணியின் வண்டியை வேணி காண்பிக்க ராணி பரவசமாகச் சிரித்தாள். வேணியின் மீது தோளில் கை போட்டுக் கொண்டாள்.

"யெஸ். இது உங்க வண்டியும்தான்" என்று அணைத்துக் கொண்டு உள்ளுக்குள் போனாள்.

அங்கு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த பல ஆண்கள், இரண்டு பெண்கள் சந்தோஷமாக நுழைவதை ஆவலாகவும், வியப்பாகவும் வேடிக்கை பார்த்தார்கள். சாப்பிட்டுவிட்டு சின்ன ஏப்பத்துடன் வெளியே வந்தார்கள்.

"உங்க வீட்ல ட்ராப் பண்ணிடட்டுங்களா?"

"என் வீடு கொஞ்சம் தூரம் நான் பஸ்லயே போயிருக்கறேன்."

"எங்க?"

"அது கொஞ்சம் தூரம் ராணி."

"அப்போ எங்க வீட்டுக்கு வாங்க."

"என்ன தீடீர்ன்னு உங்க வீட்டுக்கு."

"வந்து எங்கப்பா அம்மாவை பாருங்க. எங்க வீடு பாருங்க."

"உங்க வீடு எங்க?"

ராணி விலாசம் சொன்னாள். "அந்த வழியாத்தான் ஆட்டோல வருவேன். உங்க வீட்லேர்ந்து நிறைய பஸ் இருக்கும்."

"இருக்கு. வந்து எங்க வீட்டுக்கிட்ட இறங்கிக்கோங்க. அங்கேயிருந்து நான் பிக்கப் பண்ணிக்கறேன்."

"தேவைதானா?"

"என்ன... தனியா வரப்போறேன். உங்களோட வரேன். உங்களை என்ன நானா சுமக்கப்போறேன். வண்டிதானே சுமக்கப் போகுது. இதுவும் உங்க வண்டிதானே."

வேணி சிரித்தாள்.

"உங்க வீடு எந்தப்பக்கம் இருக்குனு பார்த்துக்கறேன். நாளைக்கு காலையில வரும்போது அது வசதியா இருக்கும்."

இருவரும் மறுபடியும் வண்டியில் ஏறிக் கொள்ள வண்டி ராணியின் வீடு நோக்கிப் போயிற்று. வண்டியை உள்ளே

தள்ளிக் கொண்டு போனாள். பின்னால் வந்த வேணியை கை பிடித்து உள்ளுக்குள் அழைத்துப் போனாள்.

"அம்மா நான் வேலையில் சேர்ந்துட்டேன்" என்று உரக்கக் குரல் கொடுத்தாள்.

ஹாலில் படுத்திருந்த அப்பா மெல்ல கண்விழிக்க அம்மா சமையல் அறையிலிருந்து ஹாலுக்கு வந்தாள்.

"என்ன சாப்பிட்டியா... சாப்பிடலையா? நாம சாப்பிடறதா வேணாமான்னு யோசனை பண்ணிகிட்டேயிருந்தேன். நல்ல வேளை வந்துட்ட. யாரது?" என்று பக்கென்று குரலை மாற்றிக் கொண்டு கேட்டாள்.

"இவங்கதான் வேணி. எனக்கு சீனியர். இவங்களும் நானும் சேர்ந்துதான் யு.கே.ஜி., ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் பார்த்துக்கப் போறோம். இவங்கதான் அந்த பள்ளிக்கூடத்துல எனக்கு எல்லாம் சொல்லித்தரப் போறாங்க."

"ஓஹோ. எனக்கு என்ன தெரியும் சொல்லி தரத்துக்கு? நீங்களாவது ரெண்டு ஊர் பார்த்திருக்கீங்க. நாகர் கோயில்லயே பிறந்து, நாகர்கோயில்லயே வளர்ந்து நாகர்கோயில்லயே வேலை பார்க்கிற ஒரு சாதாரண டீச்சர் உங்ககிட்டே யிருந்துதான் நான் கத்துக்கணும்."

வேணி சொல்ல அப்பா சுறுசுறுப்பாய் எழுந்தார்.

"நாகர் கோயிலுக்கு நாஞ்சில் நாடுன்னு பேரு. நாஞ்சில் நாட்டுக்காரனுக்கு நெஞ்சுல உரம் அப்படின்னுவாங்க. அவனுக்கு எதுவும் கத்துக் கொடுக்கணும்னு அவசியமில்லை. அவன் திமிரு, அவன் நெஞ்சு உரப்பு அவனுக்கு எல்லா வெற்றியையும் கொண்டு வந்து தரும்."

"காபியாவது குடிக்கக்கூடாதா" அம்மா வேணியை கொஞ்சினாள்.

தன் மகளுக்கு வேலை கிடைத்த சந்தோஷத்தில் ஒரு நல்ல சினேகிதியும் கிடைத்திருக்கிறாள் என்ற சந்தோஷமும் அவளை அப்படி கொஞ்சத் தோன்றியிருக்க வேண்டும்.

"இல்லீங்க. தூக்கம் கண்ணை சுத்துது. நான் போய் வீட்ல தூங்கிட்டு அப்பறம் காபி சாப்பிடறேன். நல்லா ஹெவியா சாப்பிட்டோமா. காலையிலயும் சீக்கிரமா எழுந்துட்டேனா. ஒரு தூக்கம் போட்டாத்தான் சரியா வரும்."

"ஏன் இன்னிக்கு வீட்டுக்கு போகணும். இங்கயே படுத்து தூங்கிட்டு போகலாம்."

ஏய்.... உன் படுக்கைய உதறிப் போடு" என்று அம்மா அதட்ட ராணி ஓடினாள். தன் படுக்கையை தட்டிப் போட்டாள்.

"இங்கயே படுத்துட்டு மறுபடியும் சாயங்காலம் போங்களேன்."

சட்டென்று வேணிக்குள் ஒரு சந்தோஷமும் அப்படியொரு விஷயம் நடந்தால் நன்றாக இருக்கும் என்பது போன்ற ஏக்கமும் தெரிந்தது.

"உங்களுக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லையா?" என்று கேட்டாள்.

"என்ன கஷ்டம். நீங்க தூங்கப் போறீங்க. எழுந்து முகம் கழுவி காபி சாப்பிட போறீங்க. இதுல எங்களுக்கு என்ன கஷ்டம்."

அம்மா குறுக்கிட்டுப் பேசினாள்.

அவர்கள் இருவரும் அறைக்குள் உட்கார்ந்து மெல்ல கதவு சார்த்திக் கொண்டார்கள்.

வீடு மறுபடியும் நிசப்தமாயிற்று. மெல்ல ஏதேதோ பேசினார்கள்.

வேணி இரண்டு முறை கொட்டாவி விடுவதைப் பார்த்து மெல்ல ராணி அவளை படுக்க வைத்தாள். மின் விசிறியை முழு வேகத்தில் சுழல வைத்தாள். ஜன்னல் கதவுகளைச் சார்த்தி

அறையை இருட்டாக்கினாள். போர்வையை வேணியின் மீது போர்த்தினாள். 'தூங்குங்க' என்று சொன்னாள்.

"நீ?" என்று வேணி கேட்க 'இங்கதான்' படுத்துக்கப் போறேன்' என்று சொல்லி பாயை உதறிக் கீழே போட்டு தலையணை போட்டுக் கொண்டாள்.

அந்தப் பகல் நேரத்தில் நன்றாக சாப்பிட்ட உற்சாகத்தில் தோழிகள் இரண்டு பேரும் அயர்ந்து தூங்கினார்கள்.

ஒன்றரை மணிநேர தூக்கத்திற்குப் பிறகு அம்மா மெல்ல கதவு திறந்து ஓசைப்படாமல் ராணியை உலுக்கி எழுப்பினாள். ராணி எழுந்து முகம் துடைத்துக் கொண்டு அம்மா கலந்து கொடுத்த காபியைக் கொண்டு போய் வேணிக்கருகே அமர்ந்து கொண்டாள். அந்த அமரல் தெரிந்ததும் வேணி திடுக்கிட்டெழுந்தாள்.

"என்னாச்சு?" என்று பதட்டத்தோடு கேட்டாள்.

"ஒண்ணும் ஆவலை."

"ரொம்ப நேரம் தூங்கிட்டோமா? இருட்டிப் போச்சா?"

"இருட்டிப் போகலை."

"இருட்டிதானே இருக்கு."

"கதவெல்லாம் மூடியிருக்கு."

எழுந்து மெல்ல கதவு திந்தாள்.

மாலையின் இதமான வெளிச்சம் உள்ளுக்குள் பரவியது.

"அம்மா.... அஞ்சு மணி வரைக்கும் தூங்கியிருக்கேன் பாரேன். தடிச்சி."

தன்னைத்தானே வேணி திட்டிக் கொண்டாள்.

"காபி குடிச்சுட்டு பின் பக்கம் போறீங்களா. இல்ல இப்பவே போறீங்களா."

ராணி கேட்க வேணி முகம் கழுவிக் கொண்டு, டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டு. நெற்றியிலிட்டுக் கொண்டு

தலையைப் பிரித்து உதறி கையிலிருந்த சீப்பினால் மேலோட்டமாக வாரிக் கொண்டு, மறுபடியும் இறுக்க ரப்பர் பேண்ட் போட்டுக் கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

"நல்ல தூக்கம்ப்பா. ஆனந்தமா இருந்தது. இவ்வளவு அயர்ந்து பகல்ல தூங்கி ரொம்ப நாளாச்சு. எனக்கு இருட்டுல தூங்கறதுன்னா பயம். ராத்திரிகூட டியூப்லைட் போட்டுகிட்டு தூங்கினா நல்லயிருக்குமேன்னு நினைச்சுப்பேன். எங்க வீட்ல திட்டுவாங்க. அணைச்சுடுவாங்க. நான் தூங்கற வரைக்கும் டியூப்லைட் இருக்கும் நான் தூங்கின பிறகு ஆஃப் பண்ணிடுவாங்க."

"குழந்தை மாதிரி தூங்கறீங்க."

ராணி அருகேபோய் வேணியை கட்டிக் கொண்டாள்.

வேணியும் வாகாக அவளுக்கு நெருங்கி அவள் தோளில் புதைத்துக் கொண்டாள்.

'இன்று காலையில் சந்தித்த, ஆறு மணி நேரத்திற்கு முன்பு அறிமுகமான பெண்ணா இவள்?' என்ற ஆச்சரியம் ராணிக்கு வந்தது.

வேணி அதை வாய்விட்டே கேட்டாள்.

"என்ன வெட்கங்கெங்ட்ட பொம்பளை நான். இன்னொருத்தர் வீட்ல தூங்க ஆரம்பிச்சுட்டேன்."

"சும்மாயிருங்க."

வேணியின் குரலுக்கு ராணி எதிர்ப்பு தெரிவித்தாள்.

"ஆனா இது நல்ல வீடு. அதனாலதான் நல்லா தூங்க முடிஞ்சது. வீடு நல்லாயில்லைன்னா தூங்க முடியாது. உங்க அப்பாவையும் அம்மாவையும் பார்த்தவுடனே என்னமோ ஒரு நிம்மதி வந்துடுச்சு. எங்க அப்பா அம்மாவை பார்த்த மாதிரி வந்துடுச்சு, எங்க அம்மாகூட கொஞ்சம் முசுடு. எங்கப்பா சாது. உங்க வீட்ல ரெண்டு பேருமே சாதுவா இருக்காங்க. இது பெரிய கொடுப்பினை. வீட்ல பெரியவங்க மிருதுவா, கம்பீரமா

இருந்தா சின்னவங்க நல்லா தூங்குவாங்க. நிறைய சாப்பிடு வாங்க. இல்லைனா வீட்ல பெரியவங்க நல்லா இல்லைன்னா சாப்பாடும் சரியா இருக்காது. தூக்கமும் நல்லா இருக்காது. சின்ன சத்தம் கேட்டாலும் என்னாகுமோ ஏதாகுமோ'ன்னு பதறும்படி ஆயிடும். பதறிப்பதறி இருக்குற வாலிபர்களும், யுவதிகளும் சீக்கிரமாவழி தப்பிப் போயிடுவாங்க. முரட்டுத்தன மாயிடுவாங்க. நான் லேசா முரடு ஆனதுக்குக் காரணம் எங் கம்மா. அது கத்தி. நான் கத்தி... எனக்கும் கத்தறதே பழக்கமாப் போச்சு."

"உங்களைப் பார்த்தா கத்தறவங்க மாதிரி தெரியலையே."

"அதெல்லாம் நினைக்காத. நான் கத்த ஆரம்பிச்சா ஊர் தாங்காது."

"ஐய்யய்யோ நான் கத்தவேமாட்டேன்."

"அதனாலதான் உன்னை எனக்கு பிடிச்சுருக்கு."

புடவையை அவிழ்த்து உதறி மறுபடியும் சரியாகக் கட்டிக் கொண்டாள்.

"உங்களுக்கு இந்தப் புடவை நல்லாயிருக்கு."

ராணி சொல்ல "ஆங்.... நான் சொல்லணும்னு நினைச்சேன். மறந்து போச்சு. பள்ளிக்கூடம் திறக்கறதுக்கு முன்னாடி ஒரு மூணு புடவை வாங்கணும். இன்னிக்கோ நாளைக்கோ கடைக்கு போகலாம்னு நினைச்சுகிட்டிருக்கேன். நீ வறியா?"

"நானும் புடவை வாங்கணும். நாளைக்கு காலையில போகலாமா?"

"ஏன்... இப்போ போனா என்ன....?"

"சாயந்தரம் வேளையில புடவை வாங்கப் போகாதீங்க."

"ஏன்."

"டியூப் லைட்ல மெர்க்குரி லைட்ல சரியாவே தெரியாது. காலையில பத்து மணிக்குப் போவோம். பத்துலேர்ந்து ஒரு மணி

தான் புடவை வாங்கறதுக்கு சரியான டைம். கடைக்காரங்களும் கறுகறுப்பப்பா இருப்பாங்க. நாமளும் தெளிவா இருப்போம். மயக்கமான நேரத்துல போய் புடவை வாங்கவே கூடாது."

"கரெக்ட்... கரெக்ட்.... நான் சயாந்தரமா புடவை வாங்கிட்டு 'சரியா இல்லையே. ஐயோ சரியா இல்லையே'ன்னு ரொம்ப அவஸ்தைப் பட்டிருக்கேன்."

"நாளைக்கே போவோம். எப்படி போவோம்?"

"எப்படி போவீங்க?"

"பஸ் பிடிச்சுகிட்டு."

"வேண்டாம். நான் கொண்டு போய்விடறேன்."

"என்னாத்துக்கு சிரமம்."

"உங்க வீடு பார்த்தாப்போல இருக்குமில்ல."

"கரெக்ட். வா போகலாம்."

ராணியும், வேணியும் இரண்டு மலர்ந்த பூக்கள் போல ஸ்கூட்டியில் ஏறி நாகர்கோயில் கடற்காற்றை கிழித்துக் கொண்டு தெருக்களில் விரைவாகப் பயணம் செய்தார்கள்.

ராணி வீட்டில் வேணிக்கு நடந்த அத்தனை மரியாதைகளும் வேணி வீட்டில் ராணிக்கு நடந்தது.

"அப்போ உனக்கு அஸிஸ்டெண்ட் போட்டாங்களா" என்று வேணியின் அம்மா கேட்க "தே... ஏதாவது இருக்கா உனக்கு? அவங்க என்னை மாதிரி டீச்சர். இன்னும் பார்க்கப் போனா என்னைவிட நல்ல அனுபவமான டீச்சர். பட்டணத்து பள்ளிக் கூடத்துல பசங்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்திருக்கற டீச்சர் நான் நாகர்கோயில்லயே கும்மியடிச்சுகிட்டே இருக்கேன். அவங்களுக்கு என்னைவிட விஷயம் அதிகம் தெரியும். ஸோ... உதவி மாதிரியெல்லாம் பேசி என் மானத்தை வாங்காத. தாயே உன்னை கையெடுத்து கும்பிடறேன்" என்று நாடக பாணியில் சொல்ல ராணி வாய்விட்டுச் சிரித்தாள்.

வேணியின் அம்மாவுக்கு அருகில் போய் கை கோர்த்துக் கொண்டாள்.

"நான் இவங்களுக்கு உதவிதான். எனக்கு அவங்க சீனியர் தான். அவங்க என்னா சொல்றாங்களோ அதுப்படி கேட்டு நடக்கறதுக்குத்தான் நான் வந்திருக்கேன். நீங்க சொன்னது கரெக்ட். சும்மாவாச்சும் அவங்க டபாய்க்கறாங்க."

"ஆமா.. ஆமா... அவ டபாய்க்கறவதான். இதெல்லாம் ஒண்ணுமில்லை. இதைவிட பெருசால்லாம் டபாய்ப்பா."

"என்ன... வேற என்ன பண்ணுவா?" ராணி ஆவலோடு கேட்க "ஒரு இங்கிலீஷ் புக்குக்கு அட்டை போட்டு படிச்சுக்கிட்டிருந்தா. சரி, ஏதோ பாட புஸ்தகம் படிக்கறாளோன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். என்னாடா. இத்தனை நேரம் ஒரு பாட புஸ்தகம் படிக்குதே அப்படின்னு திடீர்னு ஒரு சம்சயம் போய் பிரிச்சு பார்த்தா முண்ட கட்டையா அட்டைப்படம் போட்டிருக்குது. வயசு பொண்ணு வேலைக்க போறவ இப்படி பட்ட புஸ்தகம் படிச்சா ஒரு பெத்தத் தாய்க்கு எப்படி பதறும்!"

வேணியின் அம்மா நீட்டி முழக்கிப் பேச ராணி வியப்போடு வேணியைப் பார்த்தாள்.

"இரு வரேன்."

மடமடவென்று வேணி கோபத்தோடு அறைக்குள் போனாள்.

வெளியே ஒரு புத்தகத்தோடு வந்தாள். அட்டையைப் பிரித்துக் காட்டினாள்.

"இதுதான். இந்த புஸ்தகம்தான் நான் படிச்சுகிட்டிருந்தேன். ஜேம்ஸ் ஹார்ட்லிசேஸ். துப்பறியும் புஸ்தகம். ஒரு கொலை பண்ணிட்டு அதை மறைக்கறதுக்கு படாதபாடு படறான். தானா போய் மாட்டிக்கறான். அதான் கதை."

"உள்ள விஷயமில்லாமயா வெளியில அப்படி அம்மணமா பொம்பளைபடம் போடுவாங்க?"

"இதோ பார். வாங்கணும் அப்படிங்கறதுக்கா இப்படி பொம்பளை படம் போட்டிருக்கான். எதுல பொம்பளைபடம் போடலை? மசாலா தூள், மிளகாய்த்தூள்னு எல்லாத்துலயும் தான் பொம்பளை படம் போட்டிருக்கான். உள்ள ஒண்ணும் இல்லைன்னு சொன்னா கேட்கணும். நீ எஸ்.எஸ்.எல்.சி வரைக்கும் படிச்சவதானே! உட்கார்ந்து படிச்சு பார்க்க வேண்டியதுதானே. அப்படியே புஸ்தகம் பார்த்தேன். தூக்கிப் போட்டேன். கொஞ்ச நேரம் புஸ்தகத்தை புரட்டிப்பார்த்துட்டு கீழ வச்சிட்டுப் போயிட்டாங்க. ஏன்? எஸ்.எஸ்.எல்.சி., படிச்சேன்னு சொன்னது பொய். எங்கப்பனை ஏமாத்தி கல்யாணம் பண்ணிகறதுக்காக பொய் சர்டிஃபிகேட் கொண்ணாந்து காமிச்சிருக்காங்க."

வேணி உரத்த குரலில் பேச உள்ளிருந்து புயல் மாதிரி அவள் அம்மா வந்தாள்.

"உங்கப்பன் வந்து ஒண்ணும் என் படிப்பை பார்த்துட்டு கல்யாணம் பண்ணிக்கலை. என் வீட்டு காசைப் பார்த்துட்டும் கல்யாணம் பண்ணிக்கலை. எங்க குடும்பம் நல்ல குடும்பம்னு தான் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. என் பேர் நல்ல பேரா ஊர்ல சொல்லவேதான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. என் கல்யாணத்தைப் பத்தி நீ பேசாத."

"இது பொய் சர்டிபிகேட்டா இல்லையா? நீ சொல்லு."

"ஏய், தேவையில்லாத பேசாத. பொய் சர்டிபிகேட்டை உங்கிட்டயாடி காமிச்சேன்?"

"ஏன் பொய் சர்டிபிகேட். அதைச் சொல்லு முதல்ல."

வேணி உரத்துக் கத்த வேணியின் அம்மாகிட்டத்தட்ட அழும் நிலைக்கு வந்துவிட்டாள்.

ராணிக்கு இந்தச் சண்டை எதற்காக என்று புரியாமல் போயிற்று. 'உண்மையிலேயே இது சண்டையா அல்லது சண்டையைப் போன்ற நடிப்பா? இவர்கள் வீட்டில் எப்பொழுதும்

இப்படித்தான் பேசிக்கொள்வார்களா? இல்லை நான் வந்ததற்காக சற்றுத் தூக்கலாய் இப்படிப் பேசுகிறார்களா?'

ஆனால், சற்று நேரத்தில் இந்த வீட்டினுடைய இயல்பு இது என்று புரிந்து போயிற்று. 'சில வீடுகள் வேண்டுமென்றே அதீத மௌனமாக இருக்கும். சில வீடுகள் வேண்டுமென்றே கூச்சலும் அதிகமாய் போடும். இந்த அதீத மௌனமும் அதீது கூச்சலும் உண்மையல்ல. இது வலிந்து ஏற்றுக் கொண்ட ஒரு தன்னை அடுத்தவரைப் பார்த்து அடுத்தவரைக் கவர்வதற்காக தன்னை மாற்றிக் கொண்ட புத்தி. தன் வீடு அதீத மௌனமாக இருப்பதால் இவர்களுடைய சாதாரண விளையாட்டுச் சண்டை கூட எனக்கு தூக்கி வாரிப் போடுதலாக இருக்கிறது.'

ராணி அவர்களோடு பேசிக் கொண்டே இந்த விஷயம் பற்றி உள்ளுக்குள் அலசிக் கொண்டிருந்தாள்.

'ஆனால், வேணி இன்னும் சற்று மௌனமாக இருக்கலாம் சொன்னால் ஏற்றுக் கொள்வாளா. இல்லை. இன்று சந்தித்து விட்டு புத்தி சொல்வது அபத்தம். முட்டாள்தனம்.

ஒருவருக்கு புத்தி சொல்வதற்கு முன்பு அவரைப்பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். புத்தி சொல்ல தனக்குத் தகுதி இருக்கிறதா என்று ஒருமுறை யோசித்துப் பார்க்க வேண்டும். எல்லாம் தெரிந்தது போல் பேசினால் அது அடுத்து இருப்பவருக்கு எரிச்சலை ஏற்படுத்தும். எரிச்சல் தன்மை நல்ல நட்பை பலப்படுத்தாது. மாறாய் கெடுக்கும். இன்னும் இவளோடு சில வருடங்கள் வேலை செய்தாக வேண்டிய நிலையில் எதற்கு இந்த அறிவுரை கூறுவதெல்லாம். அமைதியாக இருப்பதே உத்தமம்.'

தெளிவாய் ஒரு முடிவுக்கு வந்தாள்.

"என்னடா அம்மாவும், பொண்ணும் இப்படி சண்டை போடறாங்களே அப்படின்னுப் பார்க்கறீயா?"

வேணி மெல்ல ஆரம்பித்தாள். ராணி அதற்கு புன்னகையை பதிலாகக் கொடுத்தாள்.

"சொல்லு என்ன நினைக்கற எங்களைப்பத்தி."

மறுபடியும் வேணி கேட்டாள்.

'ஆக... நான் ஏதாவது நினைக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த சண்டை போட்டிருக்கிறாள். நான் போட்ட கணக்கு சரி. நம்மைக் கவருவதற்காக உரத்த குரலில் நடத்தப்பெற்ற நாடகம் இது. உண்மை சொரூபம் வேறு ஏதாவது இருக்கும். ஒருவேளை அது தெரிய வரலாம். அல்லது கடைசி வரையில் தெரியவராதும் போகலாம். இவளுக்கு இப்போதைக்கு என்ன பதில் சொல்வது?'

"நீங்க போட்டது சண்டையே இல்லை. அன்பு. ஒருத்தருக்கு ஒருத்தரை கடிச்சு குதறிக்கறது மாதிரி அன்பு அதிகமா காட்டறீங்க. இதுவொரு வகை. கிள்ளி கொஞ்சறா மாதிரி. உங்கம்மா உன்னை க் கிள்ளி கொஞ்சறாங்க. நீ உங்கம்மாவைக் கிள்ளி கொஞ்சற. எனக்குப் புரியுது." என்று சொல்ல வேணி அருகே வந்து அவளைக் கட்டிக் கொண்டாள். கன்னத்தில் முத்தமிட்டாள்.

'ராணி சாதாரணமானவள் இல்லை. அவள் ஆழ்ந்து யோசிக்கிறவள்' என்று வேணிக்கும் புரிந்து போயிற்று.

'இதுக்கு முன்னாடி ஒரு பாப்பாத்தி இருந்தா. அவ தத்தி. அவளுக்கு அதுவும் புரியாது. ஆனா இந்தப் பொண்ணு கூரா இருக்கு. இவகிட்ட கொஞ்சம் ஜாக்கிரதையா நடந்துக்கணும். அதே சமயத்துல இன்னும் நட்பா பழகணும். இவ டப்படப்னு எடைபோட்டு இறக்கறா. அதேபோல நாமளும் இவளை எடை போட்டு இறக்கணும். ஆனா இது வாயைத் திறந்தாதானே. ரொம்ப அழுத்தமா இல்லை இருக்கு.

என்னா அழுத்தம். ஒருநாள் இல்ல ஒருநாள் நூலை உருவறா மாதிரி உள்ள இருக்கறதை எடுத்துட மாட்டேன்?'

வேணிக்குள் ராணி பற்றிய சிந்தனை வேகமாக ஏறிற்று.

ராணியும், வேணியும் நட்பும் இல்லை. எதிரியும் இல்லை. பரஸ்பரம் இரண்டு சைக்கிள்களில் தொலை தூரம் பயணிக்கும் நண்பர்கள் போல போகிறவர்கள். இவர் முந்தினால் அவர் முந்துவதும், அவர் முந்தினால் இவர் முந்துவதும் என்று இடையறாத போட்டி ஒன்று சைக்கிள் ஓட்டுபவரிடம் இருக்கும். அந்த மாதிரி சின்ன போட்டியாக வாழ்க்கையை ஓட்டுகிறவர்கள். வாழ்க்கையில் இப்படித்தான் பல பேர் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் அரட்டை அடித்து விட்டு வீடு சுற்றிப் பார்த்து விட்ட ராணி தன் வீட்டிற்குத் திரும்ப நேரமாயிற்று. வீட்டிற்கு வந்து அம்மாவிடம் வேணியின் வீட்டைப் பற்றி விவரமாகச் சொன்னாள். சண்டையைக் குதூகலமாக விவரித்தாள்.

"நல்ல பொண்ணு இல்லைம்மா...?" என்று கேட்டாள்.

அம்மா திரும்பி நிதானமாகப் பார்த்தாள்.

"இப்போதைக்கு நல்லவதான்."

"ஏம்மா...? ஏன் அப்படிச் சொல்ற?"

"யாரும் நல்லவங்களும் இல்லை. யாரும் கெட்டவங்களும் இல்லை. அப்பப்போ முன்ன பின்ன மாறிக்குவாங்க. அப்படி மாறுறதும் தப்பில்லை. இதுதான் உலகம். அதான் வாழ்க்கை."

"பின்ன எப்படிம்மா இருக்கணும்."

அவள் யோசித்துவிட்டு அம்மாவிடம் கேட்டாள்.

"நிதானமாக இருக்கணும். எந்த மனுஷாளையும் அற்புதம்னு நினைக்காத எல்லாத்துக்கும் எப்பவும் தயாரா இரு. அப்போ பெரிய அதிர்ச்சி இல்லாம இருக்கும். 'நான் ரொம்ப நம்பினேன், ஏமாத்திட்டாங்க' அப்படின்ற வார்த்தை அத்தனை கெட்டிக் காரத்தனம் இல்லை. மக்கு பொம்பளைதான் அப்படி பேசுவா."

ஆனால், அம்மாவின் சொல் மண்டைக்குள் போகவில்லை.

இரவு முழுவதும் கனவு. விழித்து எழுந்த பிறகு ராணிக்கு வேணி நினைப்பே அதிகம் இருந்தது. சீக்கிரம் குளித்துவிட்டு பள்ளிக்கூடம் போக வேண்டும் போல் ஆசை ஏற்பட்டது.

அது பள்ளிக்கூடம் போகும் ஆசையல்ல. வேணியைப் பார்க்கிற ஆசை.

'வாசனையா இருக்கணும். வேணி என்ன சோப்புன்னு கேட்கணும்.' கூட சோப்பு போட்டு உடம்பை தேய்த்துக் கொண்டாள். தலைக்கு ஷாம்பூ போட்டு நன்றாக அலசிக் குளித்தாள். ஈரப்புடவையை உடுத்திக் கொண்டு தலையைக் காயவைத்தாள். சீப்பினால் ஈரம் போக்கினாள். தேர்ந்தெடுத்து உடுத்திக் கொண்டாள். பாடிஸ்ப்ரே போட்டாள். அதற்குமேல் சென்ட் தெளித்துக் கொண்டாள். வண்டியோடு பூ மாதிரி பள்ளிக்கூடம் போனாள்.

பள்ளிக்கூட வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டாள். தலைமையாசிரியரோடு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தாள்.

"வேணி வரவில்லையா?" என்று ஆவலோடு விசாரித்தாள்.

"வருவா. அவள் மெல்லத்தான் வருவாள்" என்று சொல்ல சற்று ஏமாற்றமானாள். வகுப்பறைக்குப் போய் காத்திருந்தாள்.

ஒரு மணி நேரம் காத்திருந்தும் வேணி வரவில்லையென்று குழப்பமானாள்.

தலைமையாசிரியையிடம் போய் சொல்லிவிட்டு பார்த்து விட்டு வரலாமா?"

அவள் கிளம்பும்போது ஆட்டோவில் வேணி வந்து இறங்குவது தெரிந்தது.

"என்னங்க... ஏன் லேட்?" என்று ஆவலாக கேட்டு விசாரித்தாள்.

வேணி அவளிடம் இரண்டு ரூபாய் கேட்டு வாங்கி தன் காசு போட்டு ஆட்டோவுக்குக் கொடுத்துவிட்டு உள்ளே வந்தாள்.

இல்லையே. சரியான டைம்தானே. ஒன்பதரை பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும்னு சொன்னாங்க."

"ஆமாம்."

"பள்ளிக்கூடம் ஆரம்பிக்கலையே. அதான் மெல்ல பத்து மணிக்கு வந்தேன்."

"ச்சே... நான் ஒன்பது பத்துக்கு வந்துட்டு காத்துகிட்டிருக்கேன்."

"நான் உங்கிட்ட சொல்ல மறந்து போச்சு. ஸாரி."

ஆட்டோவில் வந்தாலும் வேணி எதனாலோ கசகச என்று இருந்தாள்.

ஆனால், ராணியின் முகம் பூவாகவே இருந்தது.

"ரொம்ப அழகா இருக்க ராணி. என்ன சோப்பு? வாசனை தூக்குது."

"இது பாடி ஸ்ப்ரே."

"நானும் வாங்கி வச்சிருக்கேன். போட்டுகிட்டு வர மறந்து போகுது. எங்க. எழுந்துக்கறதே லேட்."

"எப்போ எழுந்தீங்க?"

"உங்கிட்ட பொய் சொல்லாத சொல்லணும்னா எட்டே முக்காலுக்குத்தான் எழுந்தேன்."

"ஏன் அவ்ளோ லேட்"

"ராத்திரி முழுக்க உட்கார்ந்து சும்மா உன்னையே நினைச்சுகிட்டிருந்தேன். டி.வி. பார்த்துகிட்டிருந்தேன். தூங்கறதுக்கு ஒரு மணி ஆச்சு. எழுந்துக்கறபோது நிதானமாத்தான் எழுந்திருந்தேன். நீ எப்போ எழுந்த?"

"நான் எங்க தூங்கினேன் எழுந்திருக்ககறதுக்கு?"

"ஏய்... தூங்கவேயில்லையோ?"

வேணி திகைத்துக் கேட்டாள்.

"உங்களையே நினைச்சுக்கிட்டிருந்தேன். அதனால தூக்கமே வரலை. "என்று ராணி சொல்ல வேணி வாய் விட்டுச் சிரித்தாள்.

"எனக்கும் உன் ஞாபகம் இருந்தது எவ்ளோ அழகா இருக்கா அந்தப் பொண்ணுன்னு ஒரு எண்ணம் வந்தது. ஆனாலும், தூங்கிட்டேன். எனக்கு எல்லாத்தையும்விட தூக்கம் ரொம்ப முக்கியம். தூங்கலைன்னா எனக்கு பைத்தியம் பிடிச்சுக்கும்."

ராணி வேணியை வியப்போடு பார்த்தாள். 'இரவு முழுவதும் தூங்காமல் புரண்டு புரண்டு படுத்த எனக்கும் இரவு தாமதமாகப்படுத்து வெய்யில் ஏறும் வரை தூங்கின வேணிக்கும் சித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது' என்று நினைத்துக் கொண்டாள்.

"ஆனால் என்ன. வேணி வேணியாக இருக்கட்டும். ராணி ராணியாக இருக்கட்டும். வேணியும் ராணியும் நண்பராக இருக்க முடியாதா. இந்தத் தூக்கம் குலைத்துவிடுமா?"

அவள் தலையை உதறிக் கொண்டு வேணியோடு கைகோர்த்துக் கொண்டு வகுப்பறைக்குள் நுழைந்தாள்.

அவர்கள் பேசினார்கள். விவாதித்தார்கள்.

எல்.கே.ஜி. அறையையும், முதல் வகுப்பு அறையையும் என்னவிதமாக மாற்றுவது என்று தீர்மானித்தார்கள் என்ன செலவாகும் என்று கணக்குப் போட்டார்கள். பிற்பகல் நேரத்தில் உணவு உண்ணும் இடைவேளையில் தலைமையாசிரியையைப் பார்த்தார்கள்.

"மத்த வகுப்புகளுக்கும் ஒண்ணும் புதுசா குழந்தைங்க வரப்போறதில்லை. நாலஞ்சு வந்தா அதிகம். எனக்கு எல்.கே.ஜி.க்கு வரணும். எல்.கே.ஜி. போல் அந்தப் பக்கம் ஒரு பள்ளிக்கூடம் இருக்கு. போன தடவை நிறைய குழந்தைகளை சேர்த்துட்டாங்க. ஆனா பெற்றோர்களுக்கு அந்தப் பள்ளிக்கூடம் இஷ்டமில்லை. எல்லாரும் இந்தப் பக்கம் வரத் தயாரா இருக்காங்க. அந்த கும்பலை பிடிக்கணும். நைசா மத்த

பள்ளிக் கூடத்துலேர்ந்தும் இங்க குழந்தைங்களை கூட்டி வரணும். வேணும்னாலும் அட்மிஷன் ஃபீஸ் ஆயிரம் ரூபாய் வச்சுருக்கேன். முப்பது குழந்தைங்க போறும்னு நினைக்கறேன். இந்தப் பசங்க வளரும்போது நம்ம பள்ளிக்கூடமும் வளரும். ப்ளஸ் டு வரைக்கும் வளரணும்.” அழுத்தம் திருத்தமாய் பேசினார். “அதனால இந்த யு.கே.ஜி., ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் பிரமாதமாக பண்ண வேண்டியது, பார்த்துக்க வேண்டியது உன் பொறுப்பு. பிளாஸ்டிக் மோல்டட் டாய்ஸ் நிறைய வரவழைச்சுருக்கேன். இம்ப்போர்டட் டாய்ஸ் ஒரு பத்து பதினஞ்சு வாங்கி வச்சுருக்கேன். அட்மிஷன் டையத்துல இம்போர்டட் டாய்ஸை வச்சு கீ கொடுத்து, பேட்டரி போட்டு விளையாட விட்டுட்டு பசங்க கையில அந்த பிளாஸ்டிக் மோல்டட் டாய்ஸை கொடுத்துடணும். யு.கே.ஜி.க்கு பெஞ்ச் கிடையாது. ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்டுக்கு தனி சேர். தனி டேபிள். ஒவ்வொரு க்ளாஸ் உள்ளேயும் ரெண்டு ஃபேன். இன்னொரு கோட் பெயிண்ட் பண்ணிடுவேன். நிறைய படங்கள் மாட்டப் போறேன். நீங்க ஏதாவது நல்ல டாய்ஸ் பார்த்தீங்கன்னா டக்குனு வாங்கிடுங்க. ஆளுக்கு ஆயிரம் ரூபாய் வரைக்கும் செலவழிக்கலாம். குழந்தைங்களை துடைக்கறதுக்கு டர்க்கி டவல். தூங்கறதுக்கு சின்ன சின்னதா மெத்தை. இதெல்லாமும் வாங்கப் போறேன். ப்ளஸ் டூ வரைக்கும் வந்தாலும் இந்தப் பள்ளிக்கூடத்துல எல்.கே.ஜி.யிலிருந்து ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் வரைக்கும் ரொம்ப சிறப்பா இருக்கணும்னு நிர்வாகிங்க நினைக்கறாங்க. ஏன்னா அவங்க டாக்டர்ஸ். அதுல ரெண்டு பேர் குழந்தை நல மருத்துவர். அவங்க திட்டம் போட்டு பேர் பரப்பறதுக்கும் இதை செய்யறாங்க. அதனால பள்ளிக்கூடம் பிரகாசமா இருக்கணும். பள்ளிக்கூடத்தை உற்சாகமாக வச்சுக்க வேண்டியது உங்க பொறுப்பு. எல்லா ஃபெசிலிட்டியும் கிடைக்கும்.”

“முப்பது பசங்களுக்கு ஒரு டீச்சர் போதுமா மேடம்?” வேணி தயங்கியபடி கேட்டாள்.

“ரெண்டு ஆயா கூட கொடுக்கறேனே.”

“ஆயா போறாது மேடம். இன்னொரு டீச்சரும் வேணும்.”

“ எனக்கும் அப்படியொரு எண்ணம் இருக்கு. கேட்ட போது முடியாதுன்னுட்டாங்க. ஆனா, திருப்பி கேட்கப் போறேன். ப்ளஸ் டூ படிச்ச அழகான பொண்ணுங்களா, பொறுப்பான பொண்ணுங்களா, பிடிச்சு போட்டுடலாம்னு சொல்லியிருக்கேன். டீச்சர் ட்ரெயினிங் மாதிரி போகட்டுமே.”

“ஆமாம் மேடம். பட்டதாரிப் பொண்ணுங்க மாதிரிகூட இருக்கட்டும். அவங்களும் பொறுப்பா இருப்பாங்க. ரொம்ப விளையாட்டுத்தனமா ப்ளஸ் டூ பொண்ணுங்க வேணாம்.”

“நீ சொல்றதும் கரெக்ட்.”

பள்ளிக்கூடம் திறக்கப் போவதற்கு இரண்டு நாள் முன்பு ஒரு ஞாயிற்றுக் கிழமை பேப்பரில் முழு பக்க விளம்பரமும். இன்னொரு பக்கம் கட்டுரையும் வந்தது. அவர்கள் வாங்கி வைத்திருந்த பொம்மைகள் குழந்தைகளுக்கான தனித்தனியான பிளாஸ்டிக் சேர்கள், படங்கள், தோட்டங்கள் என்று எல்லாவற்றையும் போட்டோ எடுத்துப்போட்டு என்னென்ன விதமான வசதிகள் இருக்கின்றன என்று வரிசைப் படுத்தியிருந்தார்கள்.

அதற்கு மிகப்பெரிய மரியாதை இருந்தது. மறுநாளே நிறைய பேர் பள்ளிக்கூடம் பார்ப்பதற்கு வந்தார்கள். ஆயிரம் ரூபாயா என்று திகைத்தார்கள்.

பதின்மூன்று குழந்தைகள் அன்றே சேர்ந்தார்கள். மறுநாள் இன்னும் ஒரு பத்துக் குழந்தைகள் சேர்ந்தார்கள்.

பள்ளிக்கூடம் திறக்கும் அன்று இன்னும் நான்கு சீட்டுகளே இருக்கின்றன என்று விளம்பரம் வந்தது.

வேணியும், ராணியும் பம்பரமாக சுழன்றார்கள். எல்லாக் குழந்தைகளையும் அணைத்துக் கொண்டு பேசினார்கள். பெயர் கேட்டார்கள். அங்க அடையாளங்கள் குறித்துக் கொண்

டார்கள். அங்கேயே ஒரு போட்டோ கிராபரை கூட்டி வந்து போட்டோ எடுத்தார்கள். ஒவ்வொரு குழந்தை பற்றியும் தனித் தனியாக புத்தகம் தயாரித்தார்கள். கூட இரண்டு பெண்கள் சேர்க்கப்பட்டார்கள். மூன்று ஆயாக்கள் துணைக்கு இருந்தார்கள். ஒவ்வொரு குழந்தையும் கவனமாக கவனிக்கப்பட்டது. கொஞ்சப்பட்டது. சீராட்டப்பட்டது. பள்ளிக்கூடம் விட்டும் போகமாட்டேன் போ' என்று சொன்னது.

தந்தையும், தாயும் குழந்தை வந்து விளையாடுவதை ஆவலோடு வேடிக்கை பார்த்தார்கள். மூன்று மாதத்தில் குழந்தைகள் நேரு, காந்தி, எம்.ஜி.ஆர். என்று படங்கள் பார்த்து அடையாளம் சொல்லின. பாட்டுகள் பாடின. தங்கள் பெயரை உரத்துக் கூறின. டீச்சரை பெயர் சொல்லி அழைத்தன. தன் அப்பா பெயர் அம்மா பெயர் என்ன என்று புரிந்து கொண்டன.

"இதென்ன கெட்ட பழக்கம்? அப்பா பேரு அப்பாதான். அதென்ன பேரெல்லாம் சொல்லித்தரீக. நாங்க பேசறதில்லை."

ஒரு பெண்மணி பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டாள்.

"கூறுகெட்ட மூதியால்ல இருக்கு" என்று தனியாக ஒரு வார்த்தை போட்டாள்.

வேணி சரட்டென்று தலைமையாசிரியையைப் போய் அழைத்துவர தலைமையாசிரியை அந்தக் குழந்தையை அவளிடம் கொடுத்து 'நீ வேற எங்கேயாவது போய் குழந்தையை சேர்த்துக்கோ' என்று அவளைப் புறந்தள்ளிவிட்டாள்.

அவள் செய்தது முட்டாள்தனம் என்று அங்குள்ள மற்ற தாய்மார்கள் சொன்னார்கள்.

அந்தப் பெண் மன்னிப்பு கேட்டபோதும் அந்தக் குழந்தைக்கு இடம் கிடைக்கவில்லை.

"இல்லீங்க. நீங்க எங்க ரெண்டு டீச்சரையும் தப்பா சொல்லிட்டீங்க. தவறான வார்த்தையை பயன்படுத்திட்டீங்க. அதனாலதான் உங்க குழந்தையை சேர்த்துக்க மாட்டேன்றோம்.

உங்கசம்பிரதாயப்படி அப்பா பேர் சொல்லக்கூடாது; ஆம்படையான் பேர் சொல்லக்கூடாது. அது எங்களுக்கு புரியுது. அதெல்லாம் உங்களோட முடிஞ்சு போன கதை. ஒரு குழந்தைக்கு அப்பா பேர் என்னன்னு இப்பவே தெரிஞ்சாகணும். இதுக்கு நாங்க ரொம்ப கஷ்டப்பட்டு சொல்லித்தரோம். எங்க கஷ்டம் புரிஞ்சுக்காம டீச்சர் ரெண்டு பேரையும் மூதி கீதின்னு பேசிட்டீங்கன்னா நாங்க எப்படி உங்களை மதிக்க முடியும். வேணாம். நீங்க எங்கேயாவது கூட்டிட்டுப் போங்க. பேர் தெரியாத பள்ளிக்கூடத்துல சேர்த்துடுங்க." என்று விரட்டினார்.

தலைமையாசிரியை கூட நின்றது அந்த இரண்டு பெண்களுக்கும் சந்தோஷமாக இருந்தது. இன்னும் உற்சாகமாக வேலை செய்தார்கள்.

"அட.... நல்லாயிருக்கே ராணி வேணின்னு, சினிமால வர கதாநாயகிகள் பேர் மாதிரி இருக்கே. எப்படியிருக்கீங்க? ஒற்றுமையா இருக்கீங்களா? சண்டை போடறீங்களா?"

"ஒற்றுமையா, நல்லா இருக்காங்க."

தலைமையாசிரியை அவர்கள் புகழ் பாடினார்.

குழந்தைகள் துடிப்பாக இருப்பதையும், பயமின்றி உலாவருவதையும் பாட்டுப் பாடுவதையும் ஆட்டம் ஆடுவதையும் டாக்டர்கள் பார்த்து வியந்தார்கள்.

'அறை சுத்தமாக வைக்கப் பட்டிருக்கிறது; மிக ரசனையாக வைக்கப்பட்டிருக்கிறது' என்று பாராட்டினார்கள்.

மறுநாள் எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச மருத்துவப் பரிசோதனை தரப்பட்டது. தாய்மார்கள் வரும்போது டாக்டர்களே தாய்மார்களோடு பேசினார்கள்.

இதுபற்றியும் நாகர்கோவில் முழுவதும் பேசப்பட்டது. அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதை பெற்றோர்கள் விரும்பினார்கள். பள்ளிக்கூடம் திறந்த நான்காவது மாதத்திலும் இரண்டு குழந்தைகள் சேர்ந்தார்கள்.

ராணி யு.கே.ஜி.யை கவனித்துக் கொள்ள, வேணி முதல் வகுப்பு டீச்சராக இருந்தாள்.

காலையில் சேரும், டேபிளும் போட்டு எழுதுகின்ற பயிற்சியை தந்தாள். மத்தியானம் நன்கு தூங்கிவிட்டு சேர் டேபிளையெல்லாம் ஓரமாக அடுக்கி வைத்துவிட்டு டீச்சரை சுற்றி உட்கார்ந்து கொண்டு குழந்தைகள் கதைகள் கேட்டார்கள். கதை சொல்வதில் வேணியைவிட, ராணிக்கு அதிக சாமர்த்தியம் இருந்தது. குழந்தைகள் அந்தக் கதையை வீட்டில் போய் சொல்ல தாய்மார்கள் புளகாங்கிதம் அடைந்தார்கள். மூன்று நாள் தொடர்ந்து விடுமுறை வந்தபோது பல குழந்தைகள் பள்ளிக்கூடம் போக வேண்டுமென்று அடம்பிடித்தன.

புடவைக் கடையில், மார்க்கெட்டில், கோவிலில் அவர்களுக்கு மிகப் பெரிய மரியாதை இருந்தது.

"அடுத்த வரூஷம் என் குழந்தைய சேர்க்கணும். நீங்கதான் ஹெல்ப் பண்ணணும்."

அப்போதே பல பேர் வீட்டிற்கு வந்து விண்ணப்பம் செய்தார்கள்.

"மறுபடியும் புடவை வாங்கலாமா."

வேணி ஆவலாகக் கேட்டாள்.

"வாங்கலாமே!"

ராணி சந்தோஷமாகக் கூவினாள்.

"அந்த ரெண்டு குழந்தைய சேர்த்தோமே. நடுவுல."

"ஆமா."

"அந்த ரெண்டு பேரண்ட்ஸும் சேர்ந்து ஆளுக்கு ரெண்டாயிரம் ரெண்டாயிரமா நாலாயிரம் ரூபா கொடுத்திருக்காங்க."

"ஐயோ... யாருக்கு?"

"நமக்குத்தாள்."

"ஏன் அது?"

"என்ன செய்ய. ஆசைப்பட்டு கொடுக்கறாங்க. எவ்ளோ சொல்லிப் பார்த்தேன் வேணாம்னு. கேட்கலை."

"மேடத்துக்கு தெரிஞ்சா கத்துவாங்களே."

ராணி பயத்தோடு சொல்ல "எப்படித் தெரியும். நாம சொன்னாத்தான் தெரியும்."

"பேரண்ட்ஸ் சொல்லிட்டாங்கன்னா?"

"வாங்கவே இல்லைன்னு சொல்லிடுவேன்."

"மாட்டிக்கப் போறீங்க வேணி."

"எனக்குத் தெரியும் நீ பயப்படுவேன்னு. அதனாலதான் இதுல நான் உன்னை சேர்க்கலை. கொடுக்க வேண்டிய காசை எங்கிட்ட கொடுங்கன்னு வாங்கிட்டேன். கவர் அந்த மேஜை டிராயர்லதான் இருக்கு. அதனாலதான் புடவை வாங்கப் போகலாமான்னு கேட்கறேன்."

"அப்பா... என்ன தைரியம்."

"நானா போய் கேட்கலை. எதுக்கு வேணாம்னு சொல்லணும். அதுவா வருது. சரின்னு வாங்கி வச்சுட்டேன். ரெண்டாயிரம் ரூபாய்க்கு அஞ்சு புடவையாவது வாங்கலாமில்லையா."

ஸ்நேகிதிகள் இரண்டு பேரும் கடைக்குப் போனார்கள். ஆளுக்கு மூவாயிரம் ரூபாய்க்கு புடவைகள் எடுத்துக் கொண்டார்கள். ஒரே மாதிரிப் புடவையாக எடுத்துக் கொண்டு ஒரே விதமாய் கட்டிக் கொண்டு பள்ளிக் கூடத்திற்கு வந்தார்கள்.

ஐந்தாம் வகுப்பு, நான்காம் வகுப்பு டீச்சர்கள் பொறாமையோடு பார்க்க அவர்கள் இன்னும் அலட்டலோடு நடந்து கொண்டார்கள்.

அந்தப் பள்ளிக்கூடம் கிறிஸ்தவப் பள்ளிக்கூடமல்ல. ஆனால். கிறிஸ்துமஸ் கொண்டாடப்பட்டது.

அதற்காக அலங்காரம் செய்யப்பட்டது. குழந்தைகளுக்குப் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. பரிசு வாங்கும்போது ஒவ்

வொரு குழந்தையையும் போட்டோ எடுத்து அதை லேமினேட் செய்து இரண்டு ஆசிரியர்களும் வீட்டிற்குக் கொண்டு போய்க் கொடுத்தார்கள் பல வீடுகளுக்கு இப்படி ஏறி இறங்க நாகர் கோயில் முழுவதும் அவர்களுடைய பெயர் தெரிந்து போயிற்று. மதிப்பு மிகவும் உயர்ந்தது.

முதல் வகுப்பு மாணவர்களும் மாணவிகளும் மாறுவேடப் போட்டி நடத்தி அந்தப் போட்டோவும் எடுக்கப்பட்டு அவர்கள் வீட்டிற்கு வழங்கப்பட்டது. எல்லாப் போட்டோக்களிலும் டீச்சர்கள் ஒரே மாதிரி புடவை உடுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒரு போட்டோ ஸ்டுடியோவில் மூன்றடிக்கு இரண்டடியில் அந்த இரண்டு டீச்சர்கள் பத்துக் குந்தைகளோட நெருக்கமாக இருப்பதைப் போட்டோவாக மாட்டியிருந்தார்கள்.

ஸ்தாணுமால்யன் கோவிலில் ராணிக்கு தனி மரியாதை நடந்தது. அனுமார் சன்னதியில் அவர்கள் பெயருக்கு வேறு யாரோ அர்ச்சனை செய்தார்கள்.

"என்னங்க.... எதுக்கு?" என்று வேணிகேட்ட போது, "என் குழந்தைய உள்ளங் கையில் வச்சு பார்க்கற. நான் ஒரு அர்ச்சனை செய்யக்கூடாதா?"

ஒரு அம்மாள் சொன்னாள். சொல்லும் போதே கண்ணீர் விட்டாள்.

ராணிக்கும், வேணிக்கும் தலைகால் புரியவில்லை. பூமியில் நடக்கிறோமா இல்லையா என்று புரியவில்லை.

எல்.கே.ஜி குழந்தைகள் அத்தனை பேரும் இருபத்தைந்து பாடல்களை வரிசையாகப் பாடின.

"என் குழந்தை பேசும், ஆடும், பாடும்னு நான் நினைக்கவே யில்லை. உங்க ரெண்டு பேரையும் நான் தெய்வமா நினைக் கறேன்."

இன்னொரு தாய் குமுறிவிட்டுப் போனாள்.

பள்ளி மூடப்படும் முன்பு 'அட்மிஷனுக்கு முந்துங்கள்' என்பது போல் இன்னொரு விளம்பரம் வந்தது.

ஜனங்கள் பாய்ந்து வந்தார்கள். ராணியின் வீட்டுக்கும், வேணியின் வீட்டுக்கும் படையெடுத்தார்கள் 'எப்படியாவது என் குழந்தைய சேர்த்துக்கணும்' என்று சிபாரிசு செய்யச் சொல்லிக் கேட்டார்கள்.

இந்தமுறை அட்மிஷன் தொகையை இரண்டாயிரமாக உயர்த்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. உயர்த்தினார்கள்.

எல்லா கடும் உழைப்புக்கும் நிச்சயம் ஒருநாள் இல்லை யெனில் ஒரு நாள் நல்லபலன் கிடைக்கத்தான் செய்கிறது. ஒரு வருடம் முழுவதும் ஐந்து வகுப்பு நிரம்பிய அந்தப் பள்ளிக் கூடத்தில் ஆரம்ப வகுப்பைப் பார்த்துக் கொண்ட ராணி, வேணி என்ற இரண்டு கெட்டிக்கார ஆசிரியைகளால் அந்தப் பள்ளிக் கூடத்தின் புகழ் நாகர்கோயிலைச் சுற்றியிருக்கிற எல்லா ஊர்களுக்கும் பரவியது.

"ஒண்ணாவது படிக்கிறதுக்கு ஒரு குழந்தைகள் ரெண்டாயிரம் ரூபாயா, இது நியாயமா அப்படின்னு யாரும் கேள்வி கேட்கக்கூடாது. சில பள்ளிக் கூடங்கள்ல உட்கார்ந் துக்க டீச்சருக்கு சேர் இல்லை. ஆனா இந்தப் பள்ளிக்கூடம் போய் பாரு. தனித்தனியா சேர். டேபிள். ஒவ்வொரு குழந்தைக் கும் பீரோவுல ஒரு ஷெல்ப். குழந்தைங்க பள்ளிக்கூட புஸ்தகத்தை தோள்ல போட்டுகிட்டு வரக்கூடாதாம். கைய வீசிக்கிட்டு ஸ்கூலுக்கு வரணுமாம். ஹோம் வொர்க் பண்ண வேணாமா அப்படின்னு கேட்டாக்க ஒண்ணு, ரெண்டு மூணு க்ளாஸ் வரைக்கும் ஹோம் வொர்க் கிடையாதாம். நாலாவது அஞ்சாவது ஹோம்வொர்க் இருக்குமாம். "எதுக்கு ஹோம் வொர்க் இருக்கோ அந்தப் புஸ்தகம் மட்டும் எடுத்துகிட்டு வா. எல்லாத்தையும் தூக்கிகிட்டு சுமக்காத' அப்படின்னு சொல்லி யிருக்காங்க. மெட்ராஸ்ல ஒரு பள்ளிக்கூடத்தை இப்படித்தான் நடத்தறாங்களாம். அதே மாதிரி நாகர்கோயில்லயும் நடத்த

ணும்னு இங்க கொண்டு வந்திருக்காங்களாம். வேற எங்கயும் இந்த மாதிரி பள்ளிக்கூடம் இல்லையாம். இதை கேட்கறதுக்கே நல்லாயில்லை? விளையாட்டா நிறைய சொல்லிக் கொடுத்து டறாங்க. எக்ஸாமினேஷன்னு சொல்லாத எக்ஸாமினேஷன் வைக்கறாங்க. மொத்தம் இருபத்தேழு பேர். ஒரு பத்துக் குழந்தைக்கு இப்போ பரீட்சை. இன்னொரு பத்துக் குழந்தைக்கு இன்னொரு நாள் பரீட்சை. மிச்சம் இருக்கற குழந்தைக்கு இன்னொரு நாள் பரீட்சை அப்படின்னு பரீட்சை நடக்குது. டீச்சருங்க குழந்தைமேல கோவப்படறதே இல்லை அடிக்கறதே இல்லை.

நல்லா பளிச்சுனு கம்பெனியில வேலை செய்யறவங்க மாதிரி ட்ரெஸ் பண்ணிகிட்டு வராங்க. பசங்களையும் அப்படித் தான் ட்ரெஸ் பண்றாங்க. வீட்டுக்கு மூணு மணிக்கு திரும்பி அனுப்பறபோது ஒரு ஆயா எல்லாக் குழந்தைக்கும் முகத்தை துடைச்சுவிட்டு, மூக்கை துடைச்சுவிட்டு, பவுடர் போட்டு நெத்திக்கு இட்டு பாடிஸ்ப்ரே அடிச்சு அனுப்பறாங்க. எங்களா நடக்குமா. குழந்தைங்க தோட்டத்துப் பூ மாதிரி ஜம்முனு வருதுங்க. பெத்தவங்களுக்கு பள்ளிகூடம் போய் கூட்டிக்கிட்டு வர குழந்தைங்களை பார்க்கறபோது சந்தோஷமும் நிம்மதியும் எவ்வளவு இருக்கும். அவ ரெண்டாயிரம் பார்ப்பாளா... ஜில் லுனு குழந்தை முகத்தை பார்ப்பாளா?"

"அது மட்டும் இல்லீங்கம்மா. மத்த பள்ளிக்கூடத்து குழந் தைங்களோட ஒப்பிட்டு பார்க்கறபோது இங்க படிக்கிற குழந் தைங்க ரொம்ப கெட்டிக்கார குழந்தைங்களாத்தான் இருக்கு. இங்க சேர்க்கறபோது என் பையன் பேர் என்னடான்னு கேட்டாக் கூட பதில் சொல்ல மாட்டான். இப்ப அவன் பேரு. அவன் அப்பாபேரு, டீச்சர் பேரு, எதிர்வீடல இருக்கறவங்க பேரெல் லாம் சொல்லிக்கிட்டிருக்கான். காந்தின்றான், நேருன்றான், எம்.ஜி.ஆருன்றான், ரஜினின்றான். எப்போப் பாரு சலசலன்னு பேசிக்கிட்டிருக்கான். குழந்தை பேசட்டும் தடுக்காதீங்க. அவன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க; அது ரொம்ப நல்ல

துன்னு சொல்றாங்க. நம்ம புள்ள கேட்கற கேள்வி ஒண்ணும் பதில் சொல்றா மாதிரி இல்லை."

"அப்படியென்ன கேட்கறான்."

"சினிமால பாய்ஸும், கேர்ள்ஸும் கட்டிக்கறாங்களே அந்த மாதிரி நான் ஏன் கட்டிக்கக்கூடாது. கேர்ள்ஸை? அப்படின்னு கேட்கறான்."

அந்தத் தாய் சொல்ல கூட்டம் சிரித்தது.

3

பேப்பர் விளம்பரத்தினால் வரும் கூட்டத்தைவிட, பேச்சு விளம்பரத்தினால் குழந்தைகளைச் சேர்க்க அதிகப் பேர் குவிந் தார்கள்.

'இருபத்தைந்து குழந்தைகளை முப்பத்தைந்து குழந்தை களாக்கலாமே தவிர அதற்கு மேலும் சேர்க்க முடியாது' என்று தலைமையாசிரியை விவரம் தெரிவித்தாள்.

நூற்று நாற்பத்தேழு விண்ணப்பங்கள் வந்தன.

நிர்வாகிகளும், தலைமையாசிரியையும் பள்ளிக்கூடத்தை பணக்கார பள்ளிக்கூடமாக மாற்ற விரும்பினார்கள். எனவே, கார் வசதியுள்ள, நிறைய சம்பாதிக்கற, நல்ல உத்தியோகத்தில் இருக்கிற பெற்றோர்களின் குழந்தைகளையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று வகைப்படுத்தினார்கள்.

"நான் கெட்டிக்காரக் குழந்தைகளா எடுக்கணும்னு நினைக் கறேன். ஹெட்மிஸஸ் மேடம் பணக்காரக் குழந்தையா எடுக்கணும்னு பார்க்கறாங்க. ரெண்டாயிரம் ரூபா டொனேஷன் தவிர எஸ்கர்ஷன் ஃபீஸ் அப்படின்னு ஆயிரத்து ஐநூறு ரூபா வாங்கறாங்க. ஸ்பெஷல் லஞ்ச்சுனு சொல்லி மத்தியானம். குழந்தைங்களுக்கு இவங்க எதுவோ தரப்போறாங்களாம்.

அதுக்கும் சார்ஜ் பண்ணணும்னு சொல்றாங்க. பகல் கொள்ளைன்றது இதுதான். நேத்திக்கு ஒரு ஏழை அம்மா வந்து அழுதது. எனக்கு ஃப்ரீயா செய்து கொடுப்பாங்களான்னு கேட்டுது. 'அதெல்லாம் மாட்டாங்கம்மா போயிட்டு வாங் கம்மா'ன்னு திருப்பி அனுப்பிட்டேன். அந்தப் பையன் திருப் புகழ் பாடறான். நாலு வயசுக் குழந்தை. அவ்ளோ நல்லா பாடறான்."

வேணி ஒரு ஆற்றாமையோடு பேசினாள்.

"இங்க வா" என்று ராணியை அருகே கூப்பிட்டாள்.

"அதைத் தவிர என்ன நடக்குது தெரியுமா. உங்க, குழந்தைய நான் சேர்த்தக்கறேன். எனக்கு ஏதாவது ஹெல்ப் பண்ணுங் கன்னு பச்சையா ஒப்பனா கேட்டு ஹெச்.எம். காசு வாங்கிக் கறாங்க. இதையும் எனக்கு பேரன்ட் சொன்னாங்க."

"ஏதோ பண்ணிட்டுப் போறாங்க நமக்கு என்ன...?"

ராணி விட்டேத்தியாகச் சொன்னாள்.

"என்னா உனக்கு என்னாங்கற. மக்கும் மண்ணாந்தையுமா கொடுத்துட்டு நாம சாகணும். தொண்டை தண்ணி காய கத்தணும். இருவத்தேழு பசங்களையே நாம பார்க்க முடியாம தவிச்சோம். முப்பத்தஞ்சு முப்பத்தாறு பசங்க. பணக்காரப் பசங்களா சேர்க்கறாங்களாம். ஒவ்வொண்ணும் குரங்கா இருக்கு. யு.கே.ஜி.யில பரவாயில்லை. ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர் டுல வானரம்னு பத்து எண்ணலாம். தத்திப்புண்ணாக்க நாலு இருக்கு. நான் மனசுல கற்பனை பண்ணி வச்சுருந்த வகுப்பே வேற இதுவேற."

"சரி வேணி. நாம என்ன பண்ண முடியும்?"

"ஒண்ணும் பண்ணமுடியாது. ஒரு ஆற்றாமை. உங்கிட்ட சொல்லிக்கறேன். உங்கிட்ட பேசற போதும் ரொம்ப மக்கு பசங்களை சேர்க்காதீங்கன்னு சொல்லுங்க."

"சொல்லலாம். ஏதாவது திட்டுவாங்க. என்னாத்துக்கு பேசறது. வாங்கி கட்டிக்கறது."

"அப்படியா... அப்படியா..? உன்னை எதுக்காவது திட்டறாங் களா என்ன? அப்படி திட்டினா சொல்லு. நான் கிழிச்சு எடுத்துடறேன். அவங்களுக்கு நம்மள விட்டா வேற ஆள் கிடைக்காது ராணி. அதனால ரொம்ப தாழ்ந்து போக வேணாம்."

"அப்படியில்லை வேணி. அடுத்த வருஷம் ரெண்டு செக்ஷன் இம்ப்ரூவ் பண்ணப் போறாங்களாம். யு.கே.ஜி.யே ரெண்டு செக்ஷன். ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் மூணு செக்ஷன். செகண்ட் மூணு அப்படின்னு சொல்லிகிட்டிருக்காங்க. நிறைய பி.டி.ஸ் கால்ஃபார் பண்றாங்க."

"நான் விட்டுட்டு போயிடுவேன்."

"எங்க போறது?"

வேணியின் கூச்லுக்கு ராணி மென்மையாய் மறுத்தாள்.

"இந்த இடத்துல வேலை செய்யறது பெரிய மரியாதை இல்லையா? நல்ல கௌரவம் இல்லையா? சம்பளமும் நல்லா தான்... எதுக்கு விடணும்?"

"என்ன சம்பளம் நல்லாயிருக்கு. கவர்மெண்ட் பள்ளிக் கூடத்துல எட்டாயிரம் ரூபா வாங்கறாங்க. நமக்கு போன வருஷம் மாதிரியே இந்த வருஷமும் நாலாயிரத்து ஐநூறு ரூபாதான்."

"நீங்க சொல்றது எல்லாமே கரெக்ட் நாம என்ன பண்ண முடியும்? அடுத்த பி.டி. நம்ம சம்பளத்தைவிட சரின்னு தலை யாட்டினா? நமக்கில்ல கஷ்டம்."

"ஹலோ... உனக்கு ஒண்ணு புரியலை ராணி. போன தடவை பேப்பர் விளம்பரம் கொடுத்து, வந்த இருவத்தேழு பசங்களை யும் சேர்த்துகிட்டோம். அவ்ளோதான்.

இந்த தடவை பேப்பர் விளம்பரம் கொடுக்காத நூத்தி நாப்பத் தேழு விண்ணப்பம். அதுல முப்பத்தஞ்சு பேரை சேர்த்துகிட்

டோம். இந்த மரியாதை யாராள வந்தது. உன்னாலயும், என்னாலயும், நம்ம உழைப்பினால கிடைச்ச இந்த விஷயத்தை நாம அனுபவிக்க முடியலைன்னா, நாம உழைச்சு புண்ணிய மில்லை. இதைப் புரிஞ்சுக்கோ போதும்."

வேணி என்ன சொல்கிறாள் என்று ராணிக்குப் புரிய வில்லை.

'இன்னும் அதிகமாக சம்பளம் எதிர்பார்க்கிறாளா? அல்லது உயர்ந்த கௌரவத்தை கோருகிறாளா?'

அவளுக்குத் சந்தேகமாக இருந்தது. ஆனால். ஒரே வாரத் தில் வேணி எதிர்பார்ப்பது என்ன என்பது புரிந்து போயிற்று.

"எனக்குத் தெரியாது... எப்படியாவது என் குழந்தைக்கு இடம் கொடுக்கணும். இல்லைன்னா நான் உங்க வீட்டு வாசலை விட்டுப் போகமாட்டேன்."

வீட்டு வராண்டாவில் ஒரு அம்மாள் தன் குழந்தையோடு உட்கார்ந்து கொண்டாள்.

"நீங்க சோறு போட்டா சாப்பிடறேன். இல்லைன்னா பட்டினி கிடக்கறேன். எப்படியாவது என் குழந்தைக்கு இடம் வேணும்."

"அம்மா... குழந்தைய நான் சேர்க்கறதில்லை. அதுக்குன்னு தலைமையாசிரியை இருக்காங்க. எனக்கு மேல சிலர் இருக் காங்க."

"யார் இருந்தாலும் சரி. யார்கிட்ட பேசச் சொன்னாலும் சரி. நான் பேசறேன். ஆனா, நீ தான் என் குழந்தைக்கு சீட் வாங்கித் தரணும்."

"என்னால வாங்கித் தரமுடியாதும்மா."

"அப்படியெல்லாம் சொல்லாத. உன்னால முடியும். உங் கிட்ட என் குழந்தை படிக்கணும்னு ஆசையா வந்திருக்கேன். இப்படி தள்ளிவிடற மாதிரி பேசறியே."

"நான் தள்ளியும் விடலை. உள்ள வான்னும் சொல்லலை. நீங்கதான் விவரம் தெரியாத ஆடறீங்க. ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க.

எனக்கும் இந்த பள்ளிக்கூடத்து அட்மிஷனுக்கும் எந்த சம்மந்த மும் இல்லை. உங்க குழந்தை அட்மிட் ஆயி வகுப்புல போட் டாங்கன்னா அவனை நான் மரியாதையா பார்த்துக்கறேன். நல்லபடியா கவனிச்சுக்கறேன். இதுதான் சொல்லமுடியும். இப்படி சொல்றது கூடதப்பு."

ராணி இதமாகப் பேசினாள்

"எனக்கு அதெல்லாம் தெரியாது."

அந்த அம்மாள் மறுபடியும் ஆரம்பித்தாள்.

மூன்று மணிநேரம் வராண்டாவிலேயே உட்கார்ந்து கிடந்தாள்.

ராணிக்கு கோபம் வந்தது.

"போங்க. எழுந்து போங்க. என்ன விளையாட்டு இது. எனக்குத் தெரியாதுன்னு சொல்றேன். திருப்பித் திருப்பி இப்படியே பேசறீங்க. போங்க முதல்ல. வீட்டைவிட்டு வெளிய போங்க" என்று விதம்விதமாக அவளை வெளியே அனுப் பினாள்.

அப்பாவும், அம்மாவும் தலையில் கை வைத்துக் கொண்டு 'என்னடா இது கிரகச்சாரம்' என்பது போல் உட்கார்ந்திருந் தார்கள். அந்தப் பெண்மணி அழுது கொண்டே வெளியே போனாள்.

இப்படி சண்டை போட்ட ஆறாம் நாள் அவள் குழந்தைக்கு அட்மிஷன் கிடைத்தது.

ராணிக்கு மெல்லிய திகைப்பு ஏற்பட்டது.

"பார்த்தீங்களா உங்க குழந்தைக்கு இடம் கிடைச்சுடுச்சு. இப்போ நான உங்க குழந்தைய பார்த்துக்கறேன்."

"ஒண்ணும் தேவையில்லை."

அந்த அம்மாள் முகத்தில் அடித்தது போல் பேசினாள்.

"என்ன... என்ன தேவையில்லைன்னு சொல்றீங்க?"

"எங்கிட்ட கேட்டிருந்தா நான் செய்திருக்கமாட்டேனா? அதைத்தானே விதம் விதமான கேட்டேன். அப்போல்லாம் வாயை மூடிக்கிட்டு இருந்துட்டு இப்ப ஒண்ணும் தெரியாத பப்பா மாதிரி பேசறீங்களே."

"என்னம்மா சொல்றீங்க?"

"மூவாயிரம் ரூபா கேட்டாங்க. டக்குனு கொடுத்துட்டேன். நான்தான் ரெடியா வச்சிருந்தேன் இல்லை, கையிலயே துட்டு. நீயே கேட்கறதுக்கு என்ன."

"யாரு கேட்டாங்க மூவாயிரம் ரூபா."

"வேணிதான் ஆயிரம் ரூபா ஹெட்மிஸஸுக்கு, ஆயிரம் ரூபா உனக்கு; ஆயிரம் ரூபா அவங்களுக்காமே."

ராணிக்கு தலை சுற்றியது. 'நானா..? காசு கேட்டேனா? ஆயிரம் ரூபாீயா. என்ன கூத்து இது?'

அவள் மௌனமாய் நகர்ந்து போனாள்.

அந்த அம்மாள் முகத்தில் கர்வமும், பெருமையும் கலந்து வழிந்தன. 'இதை வேணியிடம் எப்படிக் கேட்பது?'

அவள் யோசித்தாள்.

'கேட்பதா, வேண்டாமா,'

மறுபடியும் சிந்தனை செய்தாள்.

'ஏதோ காசுவேணுனா வாங்கிக்கோங்க. அப்படி காசு வாங்கறதுக்காகத்தான் எங்கிட்ட நீட்டி முழக்கி பேசியிருக்காங்க. ஆனா, அதுல என் பேர் உபயோகப்படுத்துவானேன்.'

உள்ளுக்குள் ஒரு குமுறல் ஓடியது.

'வேணியோடு சண்டை வந்து விடுமா?' பயமாக இருந்தது.

'ஆமெனில் என்ன செய்வது.'

'பள்ளியிலிருந்து விலகி விடலாமா? அல்லது வேணியிடமிருந்து விலகி நிற்கலாமா.'

பள்ளியிலிருந்து ஏன் விலக வேண்டும். ஊரில் எவ்வளவு மரியாதை. அந்த மரியாதையை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் இன்னும் உறுதியாக எதற்கும் ஈடுபடாமல் இருக்க வேண்டும். லஞ்ச லாவண்யத்தில் மாட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

வேணி செய்வது தவறு. அவள் அவமானப் படப்போகிறாள்' என்று உள்ளுக்குள் ஒரு கோபம் தோன்றியது.

ஆனால், எந்த அவமானமும் வேணிக்கு வரவில்லை. மாறாய் ராணியை புறக்கணித்தார்கள். கோயிலில்கூட வேணிக்கு அதிக மரியாதை கிடைத்தது. பள்ளிக் கூடத்திற்கு வந்த பெற்றோர்கள் நேரே வந்து வேணியைப் பார்த்து ரகசியமாக தாழ்ந்த குரலில் பேசிவிட்டுப் போனார்கள். மரியாதைக்குக்கூட ராணியைக் குசலம் விசாரிக்கவில்லை. மரியாதையாய் குசலம் விசாரித்த சில பெற்றோர்கள் தன்னிடம் பேசியதற்குப் பிறகு வேணியிடம் பேசிவிட்டுத்தான் போனார்கள்.

"உங்களை நம்பித்தான் குழந்தைய விட்டுட்டுப் போறோம்" என்று கூடுதலாய் ஒரு வார்த்தை வேணியிடம் சொன்னார்கள்.

ராணிக்கு வலித்தது.

"ஏய் ராணி... புடவை வாங்கப் போகலாமா?"

"இல்லை டீச்சர். எங்கிட்ட காசு இல்லை."

சட்டென்று சகலமும் ஞாபகம் வந்தவளாய் ராணி பதில் சொன்னாள்.

"எங்கிட்ட இருக்கு. நான் தரேன் வா." வேணி மறுபடியும் கூப்பிட்டாள்.

"ஐய்யய்யோ... வேணாம். ரொம்ப புடவை வாங்கினா தப்பா பேசுவாங்க."

"என்ன தப்பு பேசுவாங்க?"

"என்னா நாலாயிரம் சம்பளம் வாங்கற டீச்சர் மாசாமாசம் நாலு புடவை வாங்கறாளே எப்படி அப்படின்னு கேட்டாக்க என்ன

பதில் சொல்ல முடியும்? லஞ்சம் வாங்கறோம்னா சொல்ல முடியும்."

சொல்லிவிட்டு வேணியை கூர்மையாகப் பார்த்தாள்.

வேணிக்குப் புரிந்து போயிற்று.

"ஆமான்னு சொல்லிட்டுப் போயேன். யார் உன்னை வந்து கைது பண்ணப் போறா. என்ன தப்பு, அஞ்சு பவுன்ல ஆரம். நாலு பவுன்ல வளையல் பண்ணியிருக்காங்க மேடம். ஹெட் மிஸஸ் மேடம். அவங்களை என்ன லஞ்சக் காசான்னு யாராவது கேட்பாங்களா? கேட்டு முடியுமா? நாக்கை இழுத்து புடிச்சு அறுத்துடுவாங்க."

"அவங்க ஏதாவது பண்ணிட்டுப் போறாங்க. அதனால நீங்களும் செய்யணுமா."

"இப்போ உன்னுடைய அபிப்ராயம் என்ன?"

"எனக்கு வேணாம்."

"எது வேணாம்?"

"புடவை துணிமணி வேணாம்."

"சரி. நானே போய் வாங்கிக்கறேன்."

வேணி எதற்கும் அசைந்தவளாகவே தெரியவில்லை.

"நீங்க எது வேணாலும் பண்ணுங்க மேடம். ஆனா என் பேரை சேர்க்காதீங்க. எனக்கு காசு கொடுக்கணும்னு காசு வாங்காதீங்க."

"நீ கேட்டுட்டேன்னு வச்சுக்கோ. அப்போ முடியாதுன்னு சொல்ல முடியுமா? அதனாலதான். உன் பேரையும் சொன்னேன். வேணாம்னா இனிமேல் சொல்லலை."

சட்டென்று ஏற்பட்டிருந்த பிரிவு ராணிக்கு துக்கத்தைக் கொடுத்தது.

அவளை மீறி அவள் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி கன்னம் வழிந்தது.

"ஏய்... என்ன ஆச்சு? எதுக்கு அழற?"

வேணி அசராமல் அவளைப் பாத்து மெல்லியதாய் அதட்டினாள்.

"நான் ரிஸைன் பண்ணிடலாம்னு பார்க்கறேன்."

"இப்போ நான் பதிலுக்கு என்ன பேசணும் ராணி? வேணாம் வோணம்னு கெஞ்சணுமா? ராணி உன்னைப் பார்த்து நானா, என்னைப் பார்த்து நீயா? ரெண்டு வருஷம் முன்னாடி நீ எங்க இருந்த, நான் எங்க இருந்தேன்? ஒருத்தருக்கு ஒருத்தர் தெரியுமா? யாரைப் பாரத்து யாரும் இல்லை ராணி. நீ ரிஸைன் பண்ணப் போறேன்னு தீர்மானம் பண்ணிட்டன்னா எனக்கு ஒண்ணும் இல்லை. நஷ்டம் உனக்குத்தான். இந்த மாதிரி நல்ல பள்ளிக்கூடம் உனக்குக் கிடைக்காது. மெல்ல மெல்ல இந்த அதிகாரத்தையும் பண பலத்தையும் நாம அதிகப்படுத்திக் கலைன்னா இது பெருசாக பெருசாக நம்மள ஓரம் தூக்கிப் போட்ருவாங்க. நீ சொன்னா மாதிரி இன்னும் பத்து டீச்சர் உள்ள வந்து இந்த இடம் பெருத்துப் போய் ஆளாளுக்கு பெரியதனம் பண்ணும்போது நாம வேடிக்கை பார்த்துகிட்டிருந்தோம்னா நம்ம தலையில மிளகாய் அரைச்சுடுவாங்க.

உனக்கு நல்லது பண்றதுக்காகத் தான் உன் பேரைச் சொன்னேன். உனக்கு நாலு புடவை தரணும்னுதான் உன் பேரைச் சென்னேன் வேணாம்னா சொல்லலை. ஆனா, நான் என்ன பண்ணணும்னு தயவு செய்து நீ சொல்லித்தராத."

மனசு ஆடிப் போயிற்று. இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் போயிற்று.

யாரிடம் இதைப் பகிர்ந்துகொள்ள முடியும் என்று தெரியவில்லை.

'வேணியைப் பத்தியும் குறை சொல்ல ஆரம்பிச்சுட்டியா? உனக்கு யார் கூடயும் ஒட்டுதலா பழக முடியாதுடா. நீ அந்த மாதிரி பிறவி.'

அம்மா நிச்சயம் தூக்கி எறிந்து பேசிவிடுவாள்.

'தான் செய்ததற்கு வருத்தப்படவில்லை. அது மட்டு மில்லை. தான் செய்தது சரியென்றும் வேணி பேசுகிறாள். இவளோடு தொடர்ந்து எப்படி நட்பாக இருக்க முடியும். இந்த வருடம் எப்படி இவளோடு சேர்ந்து வகுப்புகள் நடத்தமுடியும்.'

'வேலை வேண்டாம் என்று சொல்லிவிடலாமா? வெறு மனே வீட்டிலிருந்து எட்டாவது ஒன்பதாவது குழந்தைகளுக்கு டியூஷன் எடுக்கலாமா? இதற்கும் ஆளாய் பறக்கிறார்கள். ஆங்கிலமும். கணிதமும் சொல்லிக்கொடு' என்று கேட்கிறார் கள்.

ஆங்கிலம் பேசுவதற்கு பழக வேண்டுமென்று மத்தியதர வகுப்புப் பெண்கள் விரும்புகின்றார்கள். நாகர்கோயில் ஒரு தூங்குகின்ற நகரம்தான். ஆனால், மக்களுக்கு மெல்ல மெல்ல விழிப்பு வந்துவிட்டது. படிப்பு பற்றிய அக்கறை வந்துவிட்டது. நிறைய படிக்க வேண்டும் நிறைய பேசவேண்டும் பட்டணத் துப் பெண்கள் போல நடந்து கொள்ள வேண்டும் என்று நாகர் கோயில் பெண்களும் ஆசைப்படுகிறார்கள். இதில் ஒன்றும் தவறு இல்லை. பெண்களுக்கு மட்டும் டியூஷன் எடுக்கப்படும் என்று போர்டு போட்டால் போதும். ஆளுக்கு ஐநூறு ரூபாய் பத்து பேருக்கு வெகு எளிதாய் சம்பாதிக்கலாம். பிறகு மெல்ல மெல்ல பெரிய டியூஷன் சென்டரை ஆரம்பிக்கலாம்.

வேண்டாம் வரவில்லை என்று சொல்லலாமா அல்லது வேறு பள்ளிக்கூடத்திற்குப் போகலாமா. அங்கு போவதற்கு ஏனோ பிடிக்கவில்லை. எதனாலேயோ வேணியைப் பிடிக்க வில்லை. என்ன செய்வது?'

அவள் புரண்டுப் புரண்டு படுத்தாள்.

விடியற்காலையில் எழுந்தாள். தலைக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டாள். பட்டுப்புடவை உடுத்திக் கொண்டாள். நெற்றியில் குங்குமமும், திருநீறும் இட்டுக் கொண்டாள்.

வெறும் சிறு முடிச்சாய் தலை முடியில் போட்டுக் கொண்டு ஸ்கூட்டர் ஏறி ஸ்தாணுமாலயன் கோவில் போனாள்.

'நான் என்ன செய்யட்டும்... நான் என்ன செய்யட்டும்... நான் என்ன செய்யட்டும்' என்று இடைறாது அவரைக் கேள்வி கேட்டாள்.

ஸ்தாணுமாலயன் மௌனமாக நின்றிருந்தான்.

'ஒரு பூ உதிர்ந்து ஒரு இலை உதிர்ந்து நீ ரிஸைன் பண்ணி விடு' என்று நீ சொல்லிவிடக்கூடாதா?

ஒரு சின்ன அசைவுகூட இல்லாமல் ஸ்தாணுமாலயன் உம் மென்று உட்கார்ந்திருந்தார்.

'சரி, நீர் ஏதோ அவசர வேலையில் இருப்பீர் போலிருக்கிறது- நான் ஆஞ்சநேயரைக் கேட்டுக் கொள்கிறேன்.'

வேகமாக சுற்றிவந்து ஆஞ்சநேயர் அருகே நின்று கைகூப் பினாள். உச்சியிலிருந்து ஏதேனும் உதிர வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். நான் உடனே வேலையையும் உதறி விடுவேன் என்று சொன்னாள். உச்சியிலிருந்து எதுவும் உதிர வில்லை. உதிரும் படியாய் உச்சியில் எதுவும் இல்லை.

வேறு ஏதாவது ஒரு விதமாக ஆஞ்சநேயரைக் கேட்கலாமா என்றபோது கீழே பன்னீர் விற்கிற சுப்ரமணியன் யாரையோ பார்த்து உரத்த குரலில் 'நீ வேலைக்குப் போப்பா. இங்க உட்கார்ந்துகிட்டிருக்கற இன்னும்?' என்று உரத்த குரலில் அதட்ட அவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்.

அவர் குரலை ஆஞ்சநேயர் குரலாகவே எடுத்துக் கொண் டாள்.

'நீங்கள் வேலையை விடவேண்டாம் என்று சொல்கிறீர்கள். நான் வேலைக்குப் போகிறேன்' என்று தீர்மானம் செய்து வீடு திரும்பினாள். வேறு புடவை உடுத்திக் கொண்டாள்.

பள்ளிக்கூடத்திற்கு டிபன் பாக்ஸோடு கிளம்பினாள். மனம் முழுவதும் வேலையையே பற்றி நின்றது.

வேணி வழக்கமாக வந்து நிற்கும் பஸ் ஸ்டாண்டிற்குப் போய் நின்றாள்.

பதினேழு நிமிட காத்திருப்புக்குப் பின்னும் வேணி வரவில்லை.

ராணி கலவரமானாள். என்ன ஆயிற்று என்று வேகமாக பள்ளிக்கூடத்திற்கு போனாள்.

வண்டி ஓட்டும்போது இரண்டு மூன்று முறை தவறு செய்து ஒருவரிடம் திட்டு வாங்கிக் கொண்டாள்.

"அட கேடு கெட்டவளே என்ன வண்டி ஒட்டுதே."

அவர் உரக்கக் கத்த பத்துப் பேர் திரும்பிப் பார்த்தார்கள்.

பள்ளிக்கூடத்தில் இறங்கி தலைமையாசிரியை அறை நோக்கி நடக்க அந்தப் படபடப்பு அப்படியே இருந்தது. கையெழுத்து போட்டுவிட்டு தலைமையாசிரியை பார்க்க "என்ன நீ வந்திருக்க?" என்று தலைமையாசிரியை கேட்க.

"எதனால? ஏன் என்ன சொல்றீங்க?"

"நிஜமாவே உனக்குத் தெரியாதா?"

"தெரியாது."

"வேணி ஆஃப் டே லீவு."

"ஏன்."

"நிஜமாவே உனக்குத் தெரியாதா?"

"தெரியாது மேடம். சொல்லலை."

"ஏன் உங்க ரெண்டு பேருக்கும் சண்டையா?"

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை மேடம்."

"அவங்க அண்ணன் ஊர்லேர்ந்து வந்திருக்காரு. அதான் அரை நாள் லீவு வேணும்னு கேட்டா."

வேணியினுடைய அண்ணன் சுகவனன் ஒரு பெரிய கப்பல் கம்பெனியில் பேரராக வேலைபார்த்து வந்தார். குறிப்பாய்

மதுபானம் கொடுக்கின்ற கௌன்ட்டரில் பார் அட்டெண்டராக இருந்தார். ஆறு வருடம் விதம்விதமான கப்பல்களில் மதுபானம் ஊற்றி வழங்குபவராய் வேலை செய்துவிட்டு இப்பொழுது அதே கப்பல் கம்பெனியில் புதிதாக வந்து சேரும் இளைஞர்களுக்கு மதுபானம் எப்படி ஊற்றிக் கொடுப்பது என்று பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

மதுபானம் கலக்குவதும். ஊற்றிக் கொடுப்பதும் மேற்கத்தியத்தில் ஒரு முக்கியமான கலாச்சாரம். நாகரீகம். எல்லோரும் அதை எளிதில் செய்துவிட முடியாது. அது கடினமான வேலை. பொறுப்பான வேலை. அதில் தவறு செய்தால் பெரிய தகராறுகள் வரும். எனவே தவறு செய்யாமல் மிக அருமையாக பொறுமையாக செய்யக்கூடிய ஆசிரியர்களை அவர்கள் மிகவும் விரும்பினார்கள். சீனர்களை இதற்காக நியமித்துக் கொண்டார்கள். அவர்கள் கூட கோபமானவர்கள். அதிலும் சீன இளைஞர்கள் சட்டென்று அடிதடிக்கு தயாராகிவிடுவார்கள். ஆசிய இளைஞர்கள். குறிப்பாய் இந்திய இளைஞர்கள் இப்படி கோபப்படுவ தில்லை. அதிலும் தென்னிந்திய இளைஞர்கள் நல்ல ஆங்கிலமொழி ஆளுமையும், அதே சமயத்தில் பொறுமையும் நிதானமும் உள்ளவர்கள். இதில் இன்னொரு முக்கியமான விஷயமும் இருக்கிறது. தென்னிந்திய இளைஞர்கள் குடிப்பதற்கு விரும்புவதில்லை. எனவே மிச்ம் மீதியைக் குடித்துவிட்டு உளறுதல் என்பது அவர்களிடம் அறவே யில்லை.

பர்மியர்களும், மலேசியர்களும், சீனர்களும் மதுவை ருசிக்க விரும்புபவர்கள். சில சமயம் எடுத்துப்போகும் முன்புகூட ருசித்துவிடுவார்கள். ஆனால். தென்னிந்திய இளைஞர்கள் தனக்கும், மதுவுக்கும் சம்பந்தமில்லையென்று விலகி இருப்பதால் அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதில் ஒரு லாபம் இருக்கிறது. அவர்கள் பயந்தவர்களாகவும், ஒழுக்க முள்ளவர்களாகவும், நல்ல சம்பளம் கொடுத்தால் நன்கு வேலை

செய்பவர்களாகவும் இருக்க அது கம்பெனிக்கு மிக லாபகரமாக இருக்கிறது.

ஆனால், குடித்துவிட்டு ஆடுபவர்களை மிரளாமல் சமாளிக்க அவர்களுக்குத் தெரிவதில்லை. எனவே, அது குறித்த ஒரு பயிற்சி மட்டும் அந்த இளைஞர்களுக்கு அவசியமாகிறது. அந்த பயிற்சியைத் தான் வேணியின் அண்ணன் செய்து கொண்டிருந்தார்.

இருபத்திரண்டு வயதில் நாகர்கோயிலை உதறி பம்பாய்க்குப் போய் பம்பாயில் பல்வேறு வேலைகள் செய்து எதுவும் சரியில்லாமல் வெளிநாடு போகலாம் என்று முயற்சித்து ஒரு டிராவல் கம்பெனியில் டேபிள் துடைப்பவராகவும், எச்சில் டம்ளர்களை அப்புறப்படுத்தி கழுவுபவராகவும் வேலைசெய்து அங்கு நல்லபெயர் வாங்கி கோவாவைச் சேர்ந்த இன்னொரு கப்பல் கம்பெனிக்கு மதுபானம் கொடுப்பவராக மாறி ஒரு பிரெஞ்சுக் கம்பெனி ஆட்கள் கேட்க அதற்கு விண்ணப்பித்து 'என்ன சம்பளம் எதிர்பார்க்கிறாய்?' என்று அவர்கள் பதில் கேள்வி கேட்க 'உங்கள் விருப்பம்' என்று ஒற்றை வரியில் ஃபேக்ஸ் கொடுத்து அவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்க அங்கு பலவிதமான சோதனைகளிலும் தேறி 'நீ ஏன் உன் சம்பளம் பற்றி அக்கறை கொள்ளவில்லை' என்று கேட்க, 'இன்னும் நன்றாக வேலை கற்றுக் கொள்ள வேண்டும். எனக்கு என்வேலைபற்றி திருப்தியில்லை' என்று சொல்ல அவர்கள் விழிகள் விரித்து ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தார்கள்.

ஒரு உயரதிகாரி அவனுக்கு அருகே வந்தார்.

"நான் கற்றுக்கொண்டது போதாது, இன்னும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று எவனொருவன் நினைக்கிறானோ அவனை இந்தக் கம்பெனி இருகரம் நீட்டி வரவேற்கிறது.

நீ சொன்னது உண்மை, எவ்வளவு கற்றுக் கொண்டாலும் கற்றுக் கொண்டது போதும் என்கிற நினைப்பு வருவது கூடாது.

உனக்கு நான் சொல்லித் தருகிறேன். நிறைய சொல்லித் தருகிறேன்." என்று அணைத்துக் கொண்டார்.

ஆங்கிலேயனாகப் பிறந்த அந்த அதிகாரிக்கும் நாகர் கோவில் என்கிற இந்தியாவின் கடைக்கோடியில் இருக்கின்ற சுகவனனுக்கும் மிக நெருங்கிய நட்பு ஏற்பட்டது. காக்டைல் என்று பலவிதமான மது விஷயங்களைக் கலந்து கொடுக்கின்ற ஒரு தன்மையை அவர் போதித்தார். ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டியது என்று அவர் நிறைய சொல்லிக் கொடுத்தார். அவருடைய ப்ளடிமேரி என்கிற காக்டைல் அந்த வட்டாரத்தில் மிகப் பிரசித்தம். அதை ஊற்றுவதும், கலக்குவதும், எப்படி பரிமாற வேண்டும் என்பதையும், எதோடு பரிமாற வேண்டும் என்பதையும் சொல்லிக்கொடுத்தார். எதிர்ப்பவக்ளை எப்படி சமாளிப்பது என்பது பற்றியும் அவர் பயிற்சி கொடுத்தார்.

அந்தக் கம்பெனியில் அடுத்த மூன்று வருடங்கள் நாயாக உழைப்பேன் என்று அவனிடம் எழுதி வாங்கிக்கொண்டு மிக நல்ல சம்பளத்தில் அவனை அந்தக் கம்பெனி சேர்த்துக் கொண்டது. முதல் ஒரு வருடம் சுமாரான உல்லாசப் பயணக் கம்பெனியில் போட்டது. அடுத்த வருடம் மிகுந்த உயர்தரமான ஒரு கம்பெனியில் அவனைப் போட்டு ஆசியர்கள் இருக்கின்ற இடத்தை மட்டும் கவனித்துக் கொள்ளச் சொல்லியது. அதற்கு அடுத்த வருடம் அமெரிக்கர்களும், ஜெர்மானியர்களும் புகுந்து புறப்படும் ஒரு கப்பலில் முதல் வகுப்பில் அவனுக்கு பரிச்சயம் ஏற்படுத்தி அவனுக்கு வேலை செய்யவும் சொல்லிக் கொடுத்தது. ஐந்து வருடங்கள் நாயாய் உழைத்ததற்கு பெரும் பலன் பெற்றான். அந்தக் கம்பெனியின் ஒரு புதுக் கப்பலில் அவனுக்கு இடம் கிடைத்தது. ஆரம்பத்தில் வாங்கின சம்பளம் மும்மடங்காகியது. நாகர்கோயிலில் இருக்கின்ற அந்த இளைஞனுக்கு அப்படியொரு சம்பளம் கிடைக்குமென்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனாலும். தன்னுடைய வீடு, தன்னுடைய இடம் என்று இல்லையே என்று வருத்தம் அவனுக்கு இருந்தது. அதையும் அந்தக் கம்பெனி நீக்கியது.

அவனை லண்டனில் மத்தியத்தரமான ஒரு இடத்தில் குடியமர்த்தி அவனுக்கு பதவி உயர்த்தியது. சம்பளம் இன்னும் அதிகரித்தது.

ஆறு வருடங்களில் மூன்று முறையே அவன் இந்தியாவிற்கு வந்தான். மொத்தம் முப்பத்தேழு நாட்கள் மட்டும் இந்தியாவில் தங்கியிருந்தான்.

ஆனால் இப்பொழுதுஒரு பெரிய அமெரிக்கக் கம்பெனி அவனுக்கு பெரிய காசு கொடுப்பதாய் அழைப்பு விடுக்க அந்த அழைப்பைக் கொண்டுபோய் தன்னுடைய கம்பெனியில் காட்ட அவன் மிரண்டு போய் மேலும் சில வசதிகள் செய்து கொடுப்பதாய்ச் சொல்ல அவன் தன் வாழ்க்கையைப் பற்றி விவரித்தான். தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் தனியே வீடு அமைத்து வாழவேண்டும் என்றும் ஊருக்குப் போய் தனக்குப் பிடித்தபெண்ணை மணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் சொல்ல அவனுக்கு அறுபது நாள் லீவு கொடுத்து அந்தக் கம்பெனி அனுப்பியது. கைநிறைய காசோடும் மனம் நிறைய ஒரு பெண்ணைப் பற்றிய கற்பனை யோடும் சுகவனன் நாகர்கோயிலுக்கு வந்தான்.

எந்த டிரெய்ன்ல வந்த?" வேணி ஆவலோடு கேட்டாள்.

"அப்புறம் நாகர் கோயிலுக்கு என்ன வழி?

பிரான்ஸ்லேர்ந்து பாம்பேக்கு ஒரு ஃப்ளைட். பாம்பே லேர்ந்து மெட்ராஸுக்கு ஒரு ப்ளைட். மெட்ராஸ்லேர்ந்து திருவனந்த புரத்துக்கு இன்னொரு ஃப்ளைட். அங்கிருந்து ஒரு டாக்ஸி வச்சு இறங்கிட்டேன்."

வீடு அவனை வியப்போடு பார்த்தது-

"அதுவே நேரா மெட்ராஸ் வந்து இறங்கியிருந்தா..?"

"இறங்கலாம். பாம்பேல கஸ்டம்ஸ் ஈஸி. மெட்ராஸ்ல நோண்டி நுங்கு எடுத்துடுவாங்க."

"பாம்பேலேர்ந்து ட்ரிவேன்ட்ரம் வந்து இறங்கியிருக் கலாமே."

"வந்து இறங்கியிருக்கலாம். மெட்ராஸுக்கு வந்து இறங்கி அங்க என்ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு மூணு பேர் பார்த்து அவங் களுக்கு பார்ஸல் இருந்தது- அதைக் கொடுத்துட்டு ரெண்டு மூணு கோயிலுக்கு போயிட்டு ஒரு நடிகரைப் பார்த்துட்டு வரணும்னு போயிட்டேன்."

"நடிகரா? யாரு?"

அவன் பெயர் சொன்னான்.

"ஹை. அவரை உனக்கு எப்படித் தெரியும்?"

"ப்ரான்ஸ்ல ஷிப்ல பார்த்தேன். அவர் மட்டும் தனியா வந்துக்கிட்டிருந்தாரு. பக்கத்துல போய் 'வாழ்க தமிழ். வளர்க தமிழ் இனம்' அப்படின்னேன். திகைச்சு போய் எழுந்துட்டாரு. 'யோவ் என்னய்யா இந்த இடத்துல இந்தக் கடல்ல ஒருத்தன் வந்து தமிழ் பேசறான்னா இதை நம்பவே முடியலையே. பேசுய்யா. தமிழ் பேசுய்யா. எத்தனை நாளாச்சு.' அப்படின்னு கத்தினாரு. நானும் அவரும் ரொம்ப நேரம் பேசிக்கிட்டிருந் தோம். என் ரூம்லதான் வந்து படுத்துகிட்டார். 'என் சூட்ல வந்து படுத்துக்கோ'ன்னாரு. 'நான் படுத்துக்கக் கூடாது. தப்பாயிடும். என் ரூமுக்கு வாங்க'ன்னு கூப்பிட்டேன். என் ரூம்ல இடுக்க மான எடத்துல காலை சாய்ச்சு உட்கார்ந்து பேசிக்கிட்டே யிருந்தாரு. நானும் அவரைப் போய் பார்த்துட்டு வரலாமேன்னு போனேன்."

"கண்டுகிட்டாரா?"

"கண்டுகிட்டாரா? ஓடிவந்து கட்டிபிடிச்சு 'எப்படியிருக்க எப்படியிருக்கே?'ன்னு கேட்டு கூடவே உட்கார வச்சு சாப்பாடு போட்டு போட்டோ எடுக்கச் சொல்லி நல்ல மரியாதை. எதுவோ முத்துமாலை வாங்கியிருந்தாரு. அதை கழுத்துல போட்டிருந்தாரு. அதை என் ரூம்லயே வச்சிட்டுப் போயிட் டாரு. அதைக் கொண்ணாந்து கொடுத்தேன். 'யோவ் அது

உனக்குத்தான்'னாரு. 'அது தப்பு. நீங்க மறந்து விட்டீங்கன்னு கொண்ணாந்துட்டேன். கழுத்துல போட்டுக்கோங்க.' அப்ப டின்னு சொல்லி கழுத்துல போட்டேன். அவங்க வீட்டுக் காரம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம். 'ரொம்ப நல்லாயிருக்கு முத்துமாலை. இதை ஏன் அங்க விட்டீங்க'ன்னு கோச்சுக் கிட்டாங்க. நான் அவருக்குன்னு ஒரு நல்ல செண்ட் வாங்கி யிருந்தேன். அது காஸ்ட்லி செண்ட். அதையும் கொடுத்தேன். டையர் பேரு. அவரைக் கையில் பிடிக்க முடியலை போயேன். சுகன் சுகன்னே சொல்லிக்கிட்டிருக்காரு. எதுக்கு வந்தேன்னு கேட்டாரு. முக்கியமான வேலையா வந்திருக்கேன்னு சொல் லிட்டு வந்துட்டேன்."

"என்ன முக்கியமான வேலை அண்ணா?"

"உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கணும் வேணி."

"முப்பத்தோரு வயசாகுது உங்களுக்கு. நீங்க கல்யாணம் பண்ணிக்காம இருக்கீங்க. எனக்கு இருபத்திநாலு வய்சுதான். எப்படி கல்யாணம் பண்ணிக்க சொல்றீங்க. எனக்கு இன்னும் ஒருவருஷம் போகட்டும் அண்ணா."

"உனக்கு முடிச்சாதாம்மா நான் கல்யாணம் கட்டமுடியும்."

"இல்லைண்ணா. எனக்கு அவசரப்படாதீங்க."

"எனக்கு அவசரம் வேணி."

"நான் தப்பே சொல்லலை. நீங்க டக்குனு கல்யாணம் பண்ணிகிட்டு போங்க."

"ஆமாம் வேணி. சும்மா 'உப்பில்லாத கறியும், வேகவைச்ச கோழியும் சாப்பிட்டு நாக்கு செத்துப்போச்சு. நம்ம ஊர் காரக் குழம்பு. மிளகு ரசம், பூண்டு போட்ட மீன் வதக்கல்னு நல்லா சாப்பிடணும்னு ஆசை. அதுமட்டுமில்லை. வீட்டுக்கு வந்தோம்னா நம்மள வாங்கன்னு சொல்றதுக்கு ஒருத்தர் இருக் கணும். அது இல்லாத ரொம்ப போர். எட்டு வருஷம் ஆயிப் போச்சு. இதுக்கு மேலயும் தாக்கு பிடிக்க முடியலை."

"எனக்கு புரியுது அண்ணே. நீங்க தயவு செய்து என்னைப் பத்தி கவலைப்படாதீங்க."

"நீ யாரையாவது மனசுல நினைச்சுகிட்டிருக்கியா?"

வேணியைக் கூர்ந்து பார்த்தபடியே கேட்டான்.

"அப்படியெல்லாம் இல்லை. என் மனசுக்குள்ளயாரும் அப்படிடக்குனு நழைஞ்சுட முடியாது. எனக்கு சில லட்சியம் இருக்கு அண்ணே. ஒரு நல்ல பள்ளிக்கூடம் ஆரம்பிக்கணும். இன்னும் ரெண்டு வருஷம் இந்தப் பள்ளிக்கூடத்திலேயே இருந்தேன்னா என்னுடைய காண்டாக்ட் ஜாஸ்தியாகும். பள்ளிக்கூடம் பத்திய என் அறிவு ஜாஸ்தியாகும். நானே ஒரு பள்ளிக்கூடம் துவங்கலாம்னு இருக்கேன். எனக்கு பள்ளிக் கூடம் ஆரம்பிக்கறதுக்கு யாரு உதவியா இருக்காங்களோ அவங்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன். ரொம்ப நாள் நாலாயிரம் ஐயாயிரம்னு டீச்சரா மாரடிச்சுக் கிட்டிருக்க முடியாது. கொஞ்சம் கஷ்டப்பட்டு வேலை செய்யணும். இருபத்து நாலு மணிநேரமும் வேலை செய்ய ணும். அப்படி வேலை செய்தோம்னா மாசத்துக்கு நாற்பதாயிரம் ரூபா அம்பதாயிரம் ரூபா சம்பாதிக்கற இடத்துக்கு வந்துடலாம். இன்னிக்கு இல்லைன்னா நாலு வருஷம் கழிச்சு வந்துடலாம்."

"சபாஷ்... வேணியா கொக்கா? இதுதான் வேணும். இதுதான் ரொம்ப முக்கியம் மனுஷாளுக்கு. அப்போ நான் கல்யாணம் பண்ணிக்கட்டுமா?"

"தாராளமா பண்ணிக்கோங்க. திரும்பத் திரும்ப சொல்றேன். நிச்சயம் பண்ணிக்கோங்க. எத்தனை நாள் எனக்காக காத்திருப் பீங்க. மனசுல நான் இருபத்தேழு, இருபத்தெட்டு வயசுல கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைச்சுகிட்டிருக்கேன். அவ்ளோ நாள் நீங்க வெயிட் பண்ண வேண்டிய அவசியமே இல்லை. வெயிட் பண்ணா கெட்டுப் போயிடுவீங்க. நான் பொண்ணு பார்க்க ஆரம்பிச்சுடறேன்."

"ரைட். செய். ஜாதி முக்கியமில்லை மிருதுவா இருந்தா போதும். கொஞ்சம் இங்கிலீஷ் நல்லா பேசணும். கெட்டிக் காரியா இருக்கணும். ஒரு லட்சணமா பார்வையா குளுமையா இருக்கணும். சமைக்கத் தெரியணும். வீடு பார்த்துக்கணும். குழந்தை வளர்ப்புல ஆசை இருக்கணும். அவங்க வேலை செய்ய வேண்டிய அவசியமே இல்லை. நான் கப்பலுக்கு போறபோது அவங்களையும் கூட்டிட்டு போயிடுவேன். அப்படி கப்பல்ல வரும்போது அவங்க வெறும் உருளைக் கிழங்கு நறுக்கிக் கொடுத்தா போதும். கேஷவல் லேபர்னு அவங் களுக்கு ஒரு சம்பளம் உண்டு. அமெரிக்கா டூ பிரான்ஸ், பிரான்ஸ் டூ அமெரிக்கா, அமெரிக்கா டூ ஜெர்மன். அந்த மாதிரி சின்ன சின்னதா நிறைய இடத்துக்கு போகலாம் ஒரு மாசம் கப்பல் பதினொரு ஸாசம் தரைன்னு சுகபோகமா இருக்கலாம். என்ன... கப்பல்ல போகும்போது கொஞ்சம்குளிரும். வெய்யி லும் ஜாஸ்தியா இருக்கும். அதுக்குனு கொஞ்சம் பழகிக்கணும். தாங்கிக்கணும். ரொம்ப ஐயோ... ஐயோ... ன்ற மாதிரி பொம்பளையா இருந்தா மேற்கத்திய நாடுகளில் குடித்தனம் பண்ண முடியாது. சோம்பலா இருக்க முடியாது. அதுக்கு சொல்ல வரேன்."

"சுறுசுறுப்பா பொண்ணு வேணும்னு கேட்கறே.... அவ்ளோ தானே?"

"ஆமாம்."

"நான் ஏற்பாடு பண்றேன்."

சொல்லிக்கொண்டே இருக்கும் போது வேணிக்கு ராணி யின் ஞாபகம் வந்தது. 'சரியாக இருக்குமே. இத்தனை நாள் கஷ்டப்பட்ட அண்ணனுக்கு ராணி ஒரு நல்ல பெண்தானே. ராணி ஒரே ஜாதியில்லை. கொஞ்சம் தள்ளி. ஆனாலும் என்ன ராணி வீட்டில் சரியென்று சொன்னால் என்ன. ராணிக்கும் அண்ணனுக்கும் சரியாக இருக்கும்.'

உள்ளுக்குள்ளே குதூகலம் பொங்கியது.

'ஆனால், ராணி சரியென்று சொல்வாளா? இந்த நேரம் பார்த்து மெல்லியதாய் ஒரு பிணக்கு வந்திருக்கிறது. சுறுசுறுப்பு, அழகு, படிப்பு, ஆங்கிலப் பேச்சு எல்லாம் இருக்கு. ஆனால், தொட்டாசிணுங்கி. தர்மதேவதை போல ஒரு பொய்த் தோற்றம் காட்டிக் கொண்டிருக்கிறாள்.

ராணியிடம் பேசுவோமா? இல்லை. ராணி வீட்டில் பேசி விட்டு அண்ணிடம் பேசுவோம். ராணி கெட்டிக்காரி.'

திரும்பத்திரும்ப இந்த விஷயத்தை யோசித்தாள்.

'இப்போது போய் பெண் கேட்பதாலேயே அவள் வேண்டா மென்று சொல்லிவிடுவாளோ?

ராணியிடம் அனுசரித்துப் போகின்ற குணமே இல்லை. ஏனெனில் அவளுக்கு அந்த அவசியம் இதுவரை நேரவில்லை. நானும் அண்ணனும் வளர்ந்ததுபோல் கடினமான சூழ்நிலை யில் அவள் வளரவில்லை. மிகச் சுகமாக தேவாரம், திருவாச கம், நீதி நெறிக் கதைகள் என்று வளர்ந்து அதன் பாதிப்பில் இருக்கிறாள். வாழ்க்கையினுடைய பிரச்சினைகள் முகத்துக்கு எதிரேவந்து நின்றால்தான் அனுசரித்துப்போதல் ஏற்படும். அண்ணன் இதை அவளுக்குப் புரியவைத்துவிடுவார். எத்தனையெல்லாம் கஷ்டப்பட்டிருக்கிறோம் என்று ஒருநாள் உட்கார்ந்து சொன்னால் போதும், அனுசரிப்பது எவ்வளவு அவசியமென்பது ராணிக்குத் தெரிந்துவிடும். ராணி கெட்ட வள் அல்ல. மக்கு அல்ல. அனுபவமின்மைதான் அவளுடைய குறை. எல்லோருக்கும் எல்லா அனுபவமும் ஏற்பட்டுவிடுவ தில்லை. அண்ணனுக்கு நான் ஏதாவது நன்றி செய்ய வேண்டுமென்றால் அண்ணனுக்கு நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்றால் ராணியை அண்ணனுக்கு மண முடிப்பதுதான் நல்லது.'

'ஏன் ராணியை விட்டால் வேறு பெண்களே இங்கு கிடைக் காதா?'

'இருக்கும். ராணியைவிட பணக்காரப் பெண்கள்கூட இருக்கும். ஆனால், தெரியாத பேயைவிட தெரிந்த பூதம்மேல்' என்று வேணி விதவிதமாக இந்தப் பிரச்சனைபற்றி யோசித்தாள்.

ராணியின் மீது திரும்பத் திரும்ப ஒரு கண் வைத்து அவளுடைய அசைவுகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'அண்ணனுடைய உயரத்திற்கு நல்ல ஈடு. எந்த ஆணும் ஆசைப்பட்டு அனுபவிக்கிற உடம்பு. திமிறுகின்ற மார்பகங்கள். இறுக்கமான இடுப்பு. குழைவான தோள். அழகான நடை. மிதமான புன் சிரிப்பு. குழந்தைகளோடு அவள் கொஞ்சிப் பேசுகிறபோது எல்லோரையுமே அசரவைத்து விடுகிறாள். எந்தக் குழந்தையின் மீதும் கோபமில்லாமல் எத்தனை அடம் பிடித்தாலும் ஆத்திரப்படாமல் மிக அமைதியாக சொல்லிக் கொடுக்கிறாள். இது அவளுடைய மிகப் பெரிய பலம். அண்ணன் இதைப் புரிந்து கொண்டு விட்டால் இவர் குடும்பம் மிக நன்றாக இருக்கும். அண்ணனுக்கு இவளை நான் பரிசாக வழங்குவதுதான் உத்தமம். வேறு இடத்தில் எதற்குப் பெண் தேட வேண்டும்.'

அவள் மறுபடியும் தீவிரமாக யோசித்தாள்.

வேண்டுமென்றே ராணியிடம் கொஞ்சலாகப் பேசினாள். ராணிக்கு வியப்பு இருந்தது. ஆனாலும் மறந்துவிட்டு குழந்தைகளோடு பேசுவதிலும், பாடுவதிலும் மனம் திருப்பினாள்.

"நாளைக்கு காலையிலயும் அரைநாள் லீவு. நீ பார்த்துக் கறியா?"

"பார்த்துக்கறேன் மேடம்."

"இன்னும் ரெண்டு மூணு அரை நாள் போடுவேன்."

"ஏன் ஃபுல்டே போடுங்களேன்."

"வேணாம். நாளைக்குக் காலையில ஸ்தாணுமாலயன் கோயிலுக்குப் போறேன்.

"அப்படியா. கோயிலுக்குப் போறீங்களா?"

"ஏன். நீயும் வரியா?"

"இல்லை. நீங்களும் லீவு போட்டு, நானும் லீவு போட்டா நல்லாயிருக்காது. நீங்க போயிட்டு வாங்க. கோயிலுக்கு போறீங்கன்னவுடனே எனக்கும் போகணும்னு தோணிச்சு. என்ன திடீர்னு?"

"அண்ணனைக் கூட்டிக்கிட்டுப் போறேன்."

"நிச்சயமா கூட்டிக்கிட்டு போங்க."

"அண்ணனுக்கு அந்த வல்லப கணபதி ரொம்ப இஷ்டம். அவர்தான் தனக்கு வேலை வாங்கிக் கொடுத்தாருன்னு மனசுல ஒரு நினைப்பு. அதனால அவருக்கு அபிஷேகம் பண்றதுக்கும் அர்ச்சனை பண்றதுக்கும் நாளைக்குப் போறோம்."

"நாளைக்கு ஜெனரல் ஸ்டிரைக். அதனால பள்ளிக்கூடம் இருக்காதுன்னு பேசிக்கறாங்க."

"ஆமா, ஆமா. ஏதோ எதிர்கட்சியில கலாட்டா பண்றாங்கனு கேள்விப்பட்டேன். ஒண்ணும் இருக்காது. எல்லாரும் கடை திறந்து வைக்கணும்னும் போலீஸ்ல சொல்லிட்டுப் போறாங்க. கடையெல்லாம் திறந்து இருக்கும். பள்ளிக்கூடத்தை திறந்து வைக்க முடியுமா. லீவு விட்டாங்கன்னா நல்லது."

அவர்கள் பேசி முடித்ததும் நாளை லீவு என்று அறிக்கை வந்தது. தோழிகள் இரண்டு பேரும் குதித்தார்கள். கைகுலுக்கிக் கொண்டார்கள்.

"நாளைக்கு அப்போ நீயும் வரியா?" என்று ஆவலாக வேணி கேட்டாள்.

"வருகிறேன்" என்று ராணி வேகமாகத் தலையாட்டி பிறகு தயங்கினாள்.

"நீங்க குடும்பமா போறீங்க. அதுல நான் என்னாத்துக்கு?"

"ஏன் நீயும் என் குடும்பம் தான்"

அருகே வந்து அவளை அணைத்துக் கொண்டாள்.

இதுவரை தொடாத விதமாய் வேணி தன்னைத் தொடுகிறாள் என்று ராணிக்குத் தோன்றியது.

'அண்ணன் முதல்ல ராணியை பார்க்கட்டும். ராணிக்கு பிடிச்சிருந்தாக்க பிறகு பேசலாம்.'

வேணி தன்னுடைய திட்டத்தை மாற்றிக் கொண்டாள்.

ராணி, வீட்டிற்கு வந்து வண்டியை வீட்டிற்குள் வைத்து விடுவதாகவும். பிறகு டாக்ஸி வைத்துக்கொண்டு காலையில் சுசீந்திரம் ஸ்தாணுமாலயன் கோவிலுக்கு எல்லோரும் போவதாகவும் அங்கிருந்து 'முன் உதித்த தேவி' கோவிலுக்குப் போவதாகவும் பிறகு நாகராஜா கோவிலுக்குப் போவதாகவும் ஏற்பாடாயிற்று.

4

காலையில் பெரிய காட்டுரோஜாப் புஷ்பம் போல் சிலீர் என்ற அழகோடு ராணி உள்ளே நுழைந்தாள்.

சரிகை வேட்டியும், சரிகை மேல் துண்டுமாய் இருந்த அண்ணன் சட்டென்று சட்டைக்கு மாறினார்.

'வாங்க வாங்க' என்று கைகூப்பி வரவேற்றார்.

கொஞ்சம் தேங்காய் புட்டும், காபியும் குடித்துவிட்டு அவர்கள் எல்லோரும் கிளம்பினார்கள்.

"ஃபிரான்ஸ்ல எல்லாம் டூரிஸ்ட்டுன்னு சொல்லிட்டா போதும். உடனே அவனுக்கு தனி மரியாதை. போலீஸ்காரனோ, அதிகாரியோ மட்டுமில்லை. பொதுமக்களே டூரிஸ்ட்டுன்னாக்க முன்னவந்து ஹெல்ப் பண்ணுவாங்க. என்ன.... இங்கிலீஷ் பேசறவன் ஃபிரான்ஸ்ல கொஞ்சம் கம்மி. பிரெஞ்ச்தான் பேசுவான்."

முன்சீட்டில் உட்கார்ந்தப்ப கழுத்து திருப்பி வலதுப்பக்கம் பின் சீட்டில் உட்கார்ந்திருக்கின்ற ராணியிடம் சந்தோஷமாக சுகவனன் விசாரித்துக் கொண்டு வந்தான்.

"அடிப்படையில் என்ன வேலை?"

"சர்வர் வேலை. நம்ம ஹோட்டல்ல எல்லாம் சப்ளையர்னு கூசாத சொல்லுவோம். அவங்க பேரர்னுவாங்க. எங்களை மாதிரி பார்ல வேலை செய்யறவங்கள அட்டெண்டர்னு வாங்க. பரிமாறுறது சாதாரண விஷயமேயில்லை. அது ரொம்பப் பெரிய கலை. ரொம்பப் பொறுமையான கலை. கோபம் உள்ளுக்குள்ளயே இருக்கக்கூடாது. கொஞ்சம் முகம் மாறினாலும் கண்டுபிடிச்சுடுவான். 'என்ன நீ டென்ஷனா இருக்கியா? அப்போ நீ வந்து சர்வ் பண்ணாதே. கிளம்பிப் போ.' அப்படின்னுவான். நம்முடைய டென்ஷன் அவனுக்கு பத்திக் கக் கூடாதாம். அவன் ரிலாக்ஸ் பண்ணிக்கறதுக்காக வந்திருக் கானாம். அதனால அவன் என்ன டென்ஷன் பண்ணாலும் நாம கூலா சிரிச்சுகிட்டே ஜாலியா இருக்கறதுக்கு கத்துக்கணும். அவன் திட்டினாக்கூட கேலியா மாத்திக்க கத்துக்கணும்."

"ரொம்ப திட்டுவாங்களா?"

"நூத்துக்கு மூணு பேர். அவ்ளோதான் சொல்லுவேன். ஓவரா குடிச்சுட்டு உளறுவான். அனேகமா அதுவும் பிரெஞ்ச் மக்களா இருக்காது. ஜெர்மானியாக இருக்கணும்."

"ஒரு மாதிரி ஐரோப்பா முழுக்க உனக்குத் தெரியுமா"

வேணி கேட்க. "நல்லா தெரியும். சந்து பொந்தெல்லாம் கூடத் தெரியும். பஸ்ல டூர் கூட்டிட்டுப் போவாங்க கப்பல் லேர்ந்து வந்து பிரயாணிகளை. அந்த பஸ்ல நாங்களும் ஏறிப்போம். மத்த டுரிஸ்ட்டுக்கு என்ன சொல்றாங்களோ, அதை நாங்களும் கேட்டுப்போம். போய் இறங்கி அவங்க சுத்திப்பார்க் கறபோது நாங்க டக்குனு டேபிள் சேரெல்லாம் போட்டு ஹோட்டல் திறந்து வச்சு சின்னதா ஏதாவது ஸ்நாக்ஸ் கொடுத்து அவங்களுக்கு ஹெல்ப் பண்ணுவோம்."

"அதாவது ஒரு கையேந்திபவன் ஆரம்பிப்பீங்க இல்லையா."

"கையேந்திபவன்தான். ஆனா, கைபடாத கையேந்திபவன். சும்மா விரலால தொட்டுப் பார்த்தாக்கூட போதும் தூக்கிப் போட்டுருவான். க்ளவுஸ் போட்டுக்கிட்டுதான் எல்லாம். சாப்பிடற உணவுல பரம சுத்தம் பார்ப்பான். நான் இங்க வந்து நாகர்கோயில் தண்ணியைக் குடிக்கவேயில்லை. பிஸ்லரி வாட்டர்தான். மினரல் வாட்டர்தான்."

தட்சிணாமூர்த்தியைப் பார்த்து விட்டு ஸ்தாணுமாலயனைப் பார்த்து கன்றுக்குட்டி போல் சுகவனன் ஓட, மற்றவர்கள் நிதானமாக, அவன் சந்தோஷத்தைப் பார்த்தபடியே அவன் பின்னால் ராணி ஓடினாள். தானும் இப்படித்தான் ஸ்தாணு மாலயனை நேசிக்கிறோம் என்பது தெரியவர அவன் நேசிப்பை வேடிக்கை பார்க்க விரும்பினாள்.

இரண்டு கைகளையும் விரித்து 'அப்பா அப்பூ' என்று சுகவனன் கத்த அவள் தள்ளி நின்று அவன் முகத்தைப் பார்த்தாள்.

ஏனோ அவளுக்கு சுகவனனைப் பிடித்திருந்தது.

"வேணி இன்னிக்கு பள்ளிக்கூடம் போகணுமா?"

சுற்றிவரும் போது சுகவனன் கேட்டான்.

"என்ன சமாச்சாரம்"

"இல்லை. ராத்திரி ஆறு ஆறே காலுக்கு என்ன வேலை."

"என்ன வேணும் சொல்லுக்ங்ளேண்ணா" வேணி அவனை நோக்கி விசாரித்தாள்.

"எல்லாப் பாவை விளக்குக்கும் எண்ணெய் போட்டு விளக்கேத்தினா நல்லாயிருக்காது? வெளிப்பிரகாரம் முழுக்க செய்தா அழகா இருக்காது?"

கண்கள் விரிய சுகவனன் கேட்க வேணி மெல்ல சரியென்று தலையசைத்தாள்.

"நீங்க கவலையே படாதீங்க. நான் வந்துடறேன். நான் ஹெல்ப் பண்றேன்." என்று ராணி உரத்த குரலில் சொல்ல சுகவனனுக்கு அவள் உற்சாகம் பிடித்திருந்தது.

சுசீந்திரம் ஸ்தாணுமாலய கோவிலைச் சுற்றி நாலடி உயரத் திற்கு ஒவ்வொரு தூணுக்கும் ஒரு பாவையாய் பல தேவரடியார் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. வெவ்வேறு முகம். வெவ் வேறு உடம்பு. வெவ்வேறு விதமான அணிகலன்களில் அவர் கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். எல்லார் கையிலும் கல் அகல் இருந்தது. அன்று மாலை எல்லா விளக்குக்கும் சுகவனன் எண்ணெய் ஊற்ற, திரியை நறுக்கி ராணி போட்டுக் கொண்டு வர, எல்லாத்திரி நுனியிலும் கற்பூரத்தை வேணி தடவ ஒரு பெரிய அகல் விளக்கின் மூலம் சகல விளக்குகளையும் சுக வனன் பொருத்தினான். மறுகோடியிலிருந்து ராணி பொருத்திக் கொண்டு வந்தாள்.

ஐந்து நிமிட நேரத்தில் பிரகாரத்தின் எல்லா விளக்குகளும் தகதகத்து எரிந்தன. இருள் அகல எல்லாப் பெண்கள் கையிலும் விளக்குகள் இருக்க அந்த இடமே தேவலோகம் போல காட்சி அளித்தது- சுகவனன் கைகூப்பினான். எல்லா விளக்குகளை யும் நமஸ்கரித்தான். 'கோயிலிலுள்ள கடவுளுக்கு மட்டு மில்லை கோயிலுக்காக காலம் காலமமாக விளக்கு தூக்கிக் கொண்டிருக்கும் இந்த சிலைகளுக்கெல்லாம் நமஸ்காரம்' என்று உரக்கச் சொன்னான்.

அன்று ஒரு நிறைவோடு ராணி தூங்கப்போனாள்.

5

"ராணிக்கு கல்யாணம் ஆயிடுச்சா? பார்த்துகிட்டிருக் காங்களா"

திடீரென்று சுகவனன் கேட்க வேணி வியப்போடு அவனைப் பார்த்தாள்.

"அவளைப் பார்த்தா கல்யாணம் ஆன மாதிரியா இருக்கா?"

"இல்லை. இல்லை. வெறும் தோற்றத்தை வச்சு முடிவு பண்டு பிடிச்சுட முடியாது இல்லையா. அதனால வாய் வார்த்தையா கேட்டேன். பார்த்துக்கிட்டிருக்காங்களான்னு கேட்டேன்."

"ஆமாம். பார்த்துக்கிட்டிருக்காங்க."

"இல்லை.. ஏதாவது நல்லப் பையனா பார்த்தா சொல்லலாமேன்னு.."

"சொல்லு. நானும் போய் சொல்றேன்."

வேணி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அவங்க என்ன ஜாதி?"

"அதெல்லாம் ஒண்ணும் முக்கியமில்லை. இந்துவா இருந்தா கல்யாணம் பண்ணிக்கலாம். அவ்வளவு எளிமையா இருக்காங்க. சைவமா இருந்தா இன்னும் சந்தோஷப்படுவாங்க. நம்ம ஜாதியா இருந்தா ஏன் நீயா இருந்தர் அப்படின்னு கேள்வி கேளு"

"சட்டுனு கேட்டக்கூடாதேன்னு பயப்படறேன். ஒரு வேளை அவங்க மனசுல யாராவது இருந்து நாம கேட்டது தப்பாயிடுச்சுன்னா?"

"அவங்க மனசுல யாரும் இல்லை."

"அவங்களை எனக்குப் பிடிச்சுருக்கு"

வேணி "எனக்கும் பிடிச்சுருக்கு. உனக்கு ரொம்ப நல்லா இருப்பா அவ. மனசை பறிகொடுத்துட்டியா?"

"அடடே... அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை. பொண்ணு பார்க்க நல்லாயிருக்கு. நல்லா இங்கிலீஷ் பேசுது. நாம என்ன சொல்றோமோ அதே மாதிரியான அளவுல அந்தப்

பொண்ணு இருக்கு. அதனால பேசலாமான்னு நினைச்சேன். உனக்குப் புடித்தமா இருந்தா ரைட். இல்லைன்னா வேண்டாம்."

"என் சம்மதம் இங்க என்ன முக்கியம்?"

"உன் சம்மதம் மட்டுமில்லை. அம்மா, அப்பா எல்லார் சம்மதமும் முக்கியம். ஏதோ ரோட்டோட போற பொண்ண இழுத்துக்கிட்டு போய் கல்யாணம் பண்ற மாதிரி இல்லை. திருமணம்கற போது எல்லாரோடயும் ஒத்துமையா இருக்கணும். சந்தோஷமா இருக்கணும். எங்கப்பாவை கொண்டாடணும். என் தங்கச்சிய கொண்டாடணும். உன் கல்யாணத்துக்கு முன்ன நின்னு ஏற்பாடு பண்றவளா இருக்கணும்."

"அப்படி பண்றவதான். ரொம்ப நெருக்கமான பொண்ணுதான். ஆனா, போனமாசம் ஒரு சண்டை வந்துடுச்ச."

"என்ன?"

பதட்டத்தோடு சுகவனன் கேட்டாள்.

"எனக்கு யாரோ ரெண்டு பட்டுப்புடவை கொடுத்தாங்க. ஏன் இந்த பட்டுப்புடவை வாங்கினேன்னு கத்துறா. நான் வாங்கிப்பேன்னு சொல்லி அடம்புடிச்சேன். அதுல கொஞ்சம் மனவேறுபாடு."

"ஓ... தர்ம தேவதையா"

"ஆமாம். ஒழுக்கம்கறது ரொம்ப முக்கியம்கற ஜாதி. நீ பார் அட்டெண்டர். விஸ்கி, பிராந்தி, ரம்னு அலையறவன். அவளுக்கு அது சரியா வருமான்னு தெரியலை."

"நான் குடிக்கறதில்லை வேணி. ஆனால், குடிக்கவே மாட்டேன்னு சத்தியமும் பண்ணலை. போனமாசம் நல்ல குளிர்நாள். ஒரு கிழவன் ராத்திரி பன்னெண்டு மணிக்கு தட்டி எழுப்பி 'வா என்கூட. வந்த கம்பெனி கொடு'ன்னான். அவன் பெரிய பணக்காரன். அவன் எதிரசேர் போட்டுகிட்டு உட்கார்ந்து அவனுக்கு விஸ்கியும் ரம்மும் கலந்து கொடுத்துட்டு நான் ஒரு குவார்ட்டர் பாட்டில் ஒயின் எடுத்துக்கிட்டு உட்கார்ந்தேன்.

அந்த குளிருக்கு அந்த ஒயின் நல்லாதான் இருந்தது. உட் கார்ந்து குடிச்சதுக்காக நூறு டாலர் கொடுத்ததான். ஒரு டால ருக்கு நாப்பத்தஞ்சு ரூபா, ஒரு மணிநேரத்துல நாலாயிரத்து ஐநூறு ரூபா. அதென்ன நல்ல காசா? கெட்ட காசா? 'ஐயய்யோ... நான் குடிக்கெல்லாம் மாட்டேன்'னு அவங்ககிட்ட சொல்ல முடியுமா? அவன் என்னுடைய கஸ்டமர். அவன் சந்தோஷம் தான் முக்கியம். அப்புறம் தள்ளாடி எழுந்தவனை மெல்ல பிடிச்சுட்டுப்போய் ரூம்ல கொண்டுபோய்ப் படுக்க வச்சு சட்டை கோட்டெல்லாம் சுழட்டி மேல போர்வை போத்திட்டு வந்து இறங்கிப் போறபோது கட்டித்தழுவி முத்தம் கொடுத்து 'ரொம்ப சந்தோஷம் நான் உன்னைப் பத்தி உங்க ஆபீஸருக்கு எழுதறேன்'னு வெறுமனே சொல்றதோட நிக்கலை, அழகா எழுதிக்கொடுத்தான். எங்க ஆபீஸ்ல அதை எனக்கு திருப்பிக் கொடுத்து சட்டம் போட்டு வச்சுக்கடான்னு கொடுத்தாங்க. நான் ஃபைல் பண்ணி வச்சுருக்கேன். ஒழுக்கம் பார்த்தா அங்க வேலையாகியிருக்குமா? கொஞ்சம் அனுசரிக் கணும். அனுசரிப்பான்னு நினைக்கறேன். அவளுக்கு இன்னும் வாழ்க்கை தெரியலை, போய் கேட்டுப் பார்க்கலாமா?"

"நான் முதல்ல பேசிப் பார்க்கறேன். அப்பறம் கேட்டுப் பார்க்கறேன்."

மறுநாள் பள்ளிக்கூடம் போய் இரண்டு மணிநேரம் கழித்து பிள்ளைகளெல்லாம் சர்னு ஓய்ந்து உட்கார்ந்து பொம்மை களோடு விளையாட ஆரம்பித்தபோது வேணி ராணிக்கருகே போய் நின்று கொண்டாள்.

"எங்க அண்ணன் உன்னை ரொம்ப விசாரிச்சாரு" என்று சொன்னாள்.

ராணி திடுக்கிட்டாள்.

"என்ன... என்ன விசாரிச்சாரு?" என்று வியந்தாள்.

"விசாரிப்பாரேன்னே நினைக்கலையா?"

"விசாரிக்கும்படியா நான் ஒண்ணும் பண்ணலையே?"

"நீயா வந்து ஹெல்ப் பண்ணதும் அந்த விளக்கெல்லாம் பார்த்து கைகூப்பி நின்னதும் அவருக்கு ரொம்பபிடிச்சுப் போச்சு"

"அதை நானே சொல்லணும்னு நினைச்சேன். அவருதான் விளக்கு பொருத்தினாரு. அவர்தான் எல்லா விளக்கு பார்த்தும் கைகூப்பினாரு. அடடே... என்ன பக்தின்னு நான் நினைச்சுகிட் டேன். எனக்கு இப்படியெல்லாம் தோணலை யேன்னு அதுக்கப் பறம்தான் நான் னீகூப்பினேன். அதாவது அவரைப் பார்த்து காப்பி அடிச்சேன்"

"அது அவருக்குப் பிடிச்சு போச்சு. ராணி... ராணின்னு ரெண்டு மூணு தடவை அம்மாகிட்ட பேசிட்டாரு. அம்மாவும் ஆச்சரியமா பார்த்தாங்க."

"எனன ஆச்சரியம்?"

"இவ்ளோ வேகமா ஏந்தப் பொண்ணை பத்தியும் அண்ணன் பேசமாட்டாரோ; உன்னைப் பத்தியே பேசினாரேன்னு."

ராணி மெல்ல வேணி பக்கம் திரும்பினாள்.

"என்ன சொல்றீங்க வேணி?"

"அண்ணன் உன்னை கல்யாணம் பண்ணிக்கறேன்றாரு. உனக்கு சம்மதமா இருந்தா உங்க வீட்டுக்கு வந்து உன்னை பேசறாராம்."

"கடவுளே... இப்படி திடுக்குனு எங்கிட்ட கேட்டா நான் என்ன பதில் சொல்லுவேன்? நான் அவ்ளோ தூரத்துக்கு ஓர்த்தா? எனக்கு குடித்தனம் பண்ற புத்தியெல்லாம் இன்னும் வரவேயில்லை. நான் இன்னும் டீச்சராவே இருக்கேன்."

"இதோ பார் டீச்சராவே பொறக்கலை. டீச்சரா எங்கேயோ வேலை செய்த. இங்க வந்த பிறகு நீ நல்ல டீச்சரா மாறின. அதே மாதிரி கல்யாணம் பண்ணி குடித்தனம் பண்ணா நல்ல மனைவியா ஆட்டோமேட்டிக்கா மாறப்போற. நாம எல்லா

இடத்துக்கும் வளைஞ்சு கொடுத்து அந்த இடத்துக்கு ஏத்தபடி நாம மாத்திக்கத் தெரிஞ்சவங்க. கெட்டிக்காரங்க. உன்னால நல்ல மனைவியா இருக்க முடியும். எங்க அண்ணன் நல்ல புருஷனா இருப்பார்ங்கற கேரண்டியை உனக்கு நான் தர முடியும்."

"ஐயய்யோ... உங்க அண்ணனைப் பத்தி எந்தக் குறையும் நான் சொல்லலை. ஆனாலும், டக்குனு வந்து கல்யாணம் பண்ணிக்கறியான்னு கேட்டா நான் என்ன சொல்வேன்."

"வேற எப்படி கேட்கறதுன்னு சொல்லு. அதுப் பிரகாரம் கேட்கறேன்."

"நான் வீட்டுக்குப் போய் அம்மாகிட்ட பேசிப்பார்க்கறேன். அம்மா எந்த லெவல்ல இருக்காங்கன்னு தெரியலை. அவங்களால ரொம்பெல்லாம் செலவு பண்ண முடியாது."

"செலவு பத்தியெல்லாம் பயப்பட வேண்டிய அவசிய மில்லை. உன் கல்யாணத்துக்கு உங்க வீட்ல ரெடியாத்தான இருக்காங்க?"

"ரெடியாத்தான் இருக்காங்க. ஆனா, பத்தாயிரம் ரூபா பண்னெண்டாயிரம் ரூபா சம்பாதிக்கற மாப்பிள்ளையைத்தான் பார்ப்பாங்க. உங்க அண்ணன் ஒரு லட்சம் ரூபா சம்பாதிக்கறாரே. அவ்ளோ எங்களால பண்ண முடியுமா?"

"அப்படியெல்லாம் ஒண்ணும் கேட்டுடமாட்டோம். கேட்கறதுக்கு அண்ணனே விட மாட்டாரு."

"உங்க அண்ணனா கேட்டாரா? நீங்களா சொல்றீங்களா?"

"அண்ணனா ஆசைப்பட்டார்."

"எனக்கும் உள்ளுக்குள்ள ஒரு க்ஷணம் ஆசை வந்துச்சு?

"ஒரு க்ஷணம்னா? அப்புறம் வேணாம்னுட்டியா?"

"ஐயய்யோ.... இது நடக்காம போயிடுச்சுன்னா வருத்தமாயிடும்னு சொல்லிட்டு சைலண்ட் ஆயிட்டேன்."

"எப்போ வந்தது?"

"ரெண்டு கைய விரிச்சுக்கிட்டு கோயிலுக்கு போனாரே, அப்பவே, 'அடடா... நாம நேசிக்கற சாமியை இவரும் நேசிக்கறாரு. இவரை எனக்கு பிடிச்சுருக்கே' அப்படின்னு ஒரு எண்ணம் வந்தது. அவரை நான் தனியா நின்னு முகத்தைப் பார்த்துகிட்டேயிருந்தேன். சாமி கூட அவர் பேசறாரு. அதுவும் புடிச்சுருந்தது. இவ்வளோ பக்தி வேணிக்கு இல்லையே; இவருக்கு இருக்கேன்னும் நினைச்சுகிட்டேன்." சொல்லிவிட்டு ராணி கண் சிமிட்டினாள்.

வேணி அவள் முதுகைக் கிள்ளினாள்.

"நான் திமிர் பிடிச்சவடி. எங்க அண்ணன் நல்லவரு."

"கரெக்டான வார்த்தை"

ராணி வேணியின் உண்மையை ஆதரித்தாள்.

"இன்னைக்கு கேட்டுட்டு நாளைக்கு சொல்வியா? நான் வந்து உங்க வீட்ல கேட்கட்டுமா?"

"இல்லை. அதுக்கு முன்னால வேற ஒண்ணு பண்ணலாமா?"

" என்ன..."

"எனக்கு என்ன தெரியும், என்ன தெரியாதுன்னு சொல்லிட்டு உங்க அண்ணன்கிட்ட நான் பேசிடட்டுமா."

"இதான் நல்ல ஐடியா. எங்க பேசுவீங்க."

"ஸ்தாணுமாலயஸ்வாமி கோவில்ல"

"வேணாம். கன்னியாகுமாரி போயிடுங்க. அங்க பீச்சுலயோ, கோயில்லயோ பேசுங்க. நம்ம ஊர்ல கூட்டம் ஜாஸ்தி. யாரு, ஏன் நிக்கறாங்க, என்ன பண்றாங்க எல்லா கேள்வியும் வரும். அங்க போயிட்டீங்கன்னா எந்தப் பிரச்சனையும் வராது."

"தேங்க்யூ வேணி."

"எதுக்குடி கண்ணு...?"

"இவ்ளோ அன்பா உங்க அண்ணனை அறிமுகப் படுத்தினதுக்கு. பேச அலவ் பண்றதுக்கு"

"எல்லாம் நல்லபடியா முடியட்டும்."

6

சுகவனனும் ராணியும் க்ன்னியாகுமரிக்குப் போய் பேசினார்கள். மனம்விட்டுப் பரிமாறிக்கொண்டார்கள்.

"நான் ஆபீஸரோ, இன்ஜினீயரோ, கம்ப்யூட்டர்டிசைனரோ கிடையாது. பார் அட்டெண்டர். என் உடம்புலேர்ந்து விஸ்கி வாசனை, பிராந்தி வாசனை வரத்தான் செய்யும். நம்ம வீட்ல வர விருந்தாளிக்காக ஏதாவது இந்த மாதிரி சரக்கு வச்சுக்கிட்டிருப்பேன். ஆனா, ஒரேயொரு சத்தியம் மட்டும் பண்ணித் தரேன். நான் குடிச்சுட்டு ஆடமாட்டேன். உளற மாட்டேன். எனக்கு அது பிடிக்காது. ஏன்.... குடிக்கறதையே கூட நான் விரும்பறதில்லை. அந்த தேசத்துல குளிர்காலத்துக்கு ஒரு பெக் சாப்பிட்டாதான் உன்னால வெளியவே நடக்கமுடியும் கொஞ்சம் உன்னுடைய வாழ்க்கை முறையை நீ மாத்திக்கத் தான் வேணும்."

"ஆமாம். மாத்திக்கத்தான் வேணும். மாத்தமாட்டேன்னு சொல்லலையே? அவசியமானா நானும் ஒரு பெக் சாப்பிடத் தான் சாப்பிடுவேன்."

"சபாஷ். இது போறும் எனக்கு. என்ன சண்டை வேணியோட?"

தொடர்ந்து சுகவனம் கேட்க "அது ஒண்ணுமில்லை. சும்மா ஒரு விளையாட்டுக்கு போட்டோம். இதெல்லாம் உங்ககிட்ட சொன்னாங்களா?" என்று சிரித்து மழுப்பி பேச்சை முடித்து சுகவனத்தோடு மெல்ல கடற்கரையில் நடந்துவந்தாள்.

"அப்போ என்னைக் கல்யாணம் பண்ணிக்கறியா?"

"சரி... பண்ணிக்கறேன்."

அவள் அழகாக ஒயிலாக தலையசைத்தாள்.

சுகவனம் மெல்ல கைநீட்டினான். அந்த பலமான பெரிய கைக்குள் தன்னுடைய கையை பொதிந்து கொண்டாள்.

சுகவனன் மெல்ல அவள் தோளில் கைபோட்டுக் கொண்டான்.

ராணிக்கு உடம்பு முழுவதும் ஒரு பரபரப்பு பற்றியது. வயிற்றை மெல்லத் தாக்கியது. உதடை துடிக்க வைத்தது. இடுப்பையும், மார்பையும் இறுக வைத்தது. சமாளித்துக் கொண்டு நடந்தாள். ஆனாலும். அவள் முகம் சிவந்து மிகுந்த சோபையோடு இருந்தது.

மகிழ்ச்சியோடு இருவரும் வீடு வந்துசேர்ந்தார்கள்.

ராணி ஒயிலாகவும் மிகுந்த களையோடும் வீட்டுக்குத் திரும்புவதை வேணி பார்த்தாள்.

அவளுக்கு மெல்லியதாய் ஒரு பொறாமை ஏற்பட்டது. அண்ணன் அவளையே சுற்றிக்கொண்டு வருவதைப் பார்த்து சிரிப்பு வந்தது.

விட்டா எங்க எல்லாரையும் அனுப்பிட்டு இப்பவே தூக்கிகொண்டு போயிடுவான் போல' என்று ஒரு எண்ணம் வந்தது. அதுவும் உள்ளுக்குள் ஒரு பொறாமையைக் கொடுத்தது. 'ச்சீய்... சும்மாயிரு அவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும். நீ ஆசைப்பட்ட கல்யாணம்தானே. உன்னுடைய ஸ்நேகிதி தானே' என்று பலமுறை மனதை வேணி அடக்கினாள். ஆனாலும், உள்ளுக்குள் தன்னுடைய சொத்து ஏதோ ஒன்றை யாரோ தட்டிக் கொண்டு போனது போல ஒரு எண்ணம் ஏற்பட்டது. அதுவும் ராணி தட்டிக்கொண்டு போனபோது இன்னும் கோபம் அதிகமாக இருந்தது.

தனக்கே உரித்தான அண்ணனை அவள் எடுத்துக்கொண்டு போய் என்ன செய்வாளோ, எப்படி மாற்றுவாளோ என்று வீணாக வேண்டுமென்றே கற்பனை செய்து கொண்டாள்.

எத்தனைவிதமாக மனதை அதட்டி நியாயம் பேசினாலும் மனம் திரும்பத்திரும்ப ஒரு கோபத்திலேயே இருந்து வந்தது.

7

திருமணம் உறுதியாயிற்று என்று தெரிந்ததும் சுகவனத்தின் பார்வை ராணியின் மீதே இருந்தது.

பள்ளிக்கூடத்திற்கு வந்தாலும் ராணியிடம் பேசி விட்டு வேணியிடம் கையசைத்துவிட்டு ஓடுவதிலேயே குறியாக இருந்தான்.

'என்ன சொன்னாரு? அண்ணன் என்ன சொன்னாரு?' என்று ராணியிடம் அவள் கேட்க 'எல்லாத்தையும் சொல்ல முடியுமா வேணி' என்று சொல்லிவிட்டு அவள் நகர அடிபட்டதுபோல் வேணி உணர்ந்தாள்.

ஆனால், மறுபடியும் மனதைத் தேற்றிக்கொண்டாள்.

'கெட்ட பொம்பளையா மாறிடாத. முட்டாள்தனமா யோசிக்காத. உனக்கு வேற வேலை இருக்கு' என்று மனதை திசை திருப்பினாள்.

"இன்னும் பத்துநாள் லீவு கேட்டேன். முடியாதுன்னு சொல்லிட்டான். அதனால வீவை இப்பவே முடிச்சுகிட்டு நான் ஃபிரான்ஸ் போகப்போறேன். அங்க போய் இருவத்தஞ்சு நாள் வேலை செய்துவிட்டு பிறகு மறுபடியும் ஒரு மாசம் லீவு எடுத்து கிட்டு வரேன்.

ராணியோட விசாவையும் வரும்போதே கொண்டாந்துட றேன்."

அவன் அவளுடைய பாஸ் போர்ட்டை வாங்கி சென்னைக் குப் போய் லண்டன் பிரிட்டிஷ் ஹை கமிஷனரிடம் பேசி, வேண்டிய மற்ற சான்றிதழ்களையெல்லாம் சேகரித்து காண்பித்து லண்டனுக்கு புறப்பட்டுப் போனான்.

பிரான்ஸுக்குப் போய் தொலைபேசியில் ராணியோடு பேசினான். "எல்லாம் நல்லபடியா முடிஞ்சுடும். அங்க உண் டான வேலையை கொஞ்சம் கவனமா பார்த்துச் செய்யுங்க" என்று கேட்டுக்கொண்டான்.

இங்கே வேலைகள் வேகமாக ஆரம்பித்தன.

பள்ளிக்கூடத்தில் இதைக் கேள்விப்பட்டு வந்து கைகுலுக் கினார்கள். தலைமையாசிரியை ஓடிவந்து இரண்டு பேரையும் ஆசிர்வதித்தாள். குழந்தைகளுடைய பெற்றோர்கள் கூட கேள்விப்பட்டு விசாரித்தார்கள்.

'வேணி! உனக்கு எப்போ கல்யாணம்?' என்று விசாரித்த அத்தனை பேரும் வேணியைப் பார்த்து கேள்வி கேட்டார்கள்.

ராணி முதல் இடத்தைப் பிடித்துவிட்டதாகவும் தனக்கு இரண்டாவது இடம்தான் என்பது போலவும் ஒரு தோல்வியை வேணி திடீரென்று உணர்ந்தாள்.

'நாமளும் கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன? ரெண்டு கல் யாணத்தையும் ஒரே மேடையில் நடத்தச் சொன்னா என்ன' என்று யோசித்தாள்.

'ச்சீ... என்ன முட்டாள்தனம். ஏன் இவ்வளவு உணர்ச்சி வசப்பட்டு யோசிக்கறேன். என்னுடைய வேலை மாண்டிசோரி ஆரம்பிப்பது. இன்னொரு பள்ளிக்கூடம் துவங்குவது. ஒரு மாதத்திற்கு நாற்பதாயிரம் ஐம்பதாயிரம் சம்பாதிப்பது. திரு மணம் செய்துகொள்வது அல்ல. ராணி செய்து கொள்ளட்டும். எனக்கு வேறு வேலை இருக்கிறது' என்று மறுபடியும் மனதைப் பிடித்துக் கீழே இழுத்தாள்.

சட்டென்று ஒருநாள் காலை ராணி வேணிக்குப் போன் செய்தாள்.

"எங்க வீட்ல எல்லாரும் திருநெல்வேலி போறோம். கல்யாணத்துக்கு துணி எடுக்க இன்னிக்கு ஒருநாள் வர முடியாது." என்று சொன்னாள்.

வேணிக்கு கோபம் வந்தது.

"திடீர்னு சொன்னா எப்படி?"

"ஏம்மா? திடீர்னுதான் வீட்ல சொன்னாங்க. அதனாலதான் சொல்றேன்."

"துணி எடுக்கறதுதானே? அது முன்கூட்டியே தெரியாதா?" என்று மறுபடியும் வேணி உரத்த குரலில் பேச, "துணி எடுக்கப் போறோம்னு தெரியும். என்னிக்குன்னு தெரியாது. இன்னிக்கு நாள் நல்லாயிருக்கு. இன்னிக்கு துணி எடுத்தா விளங்கும் அப்படின்னாங்க. சரின்னு உடனே கிளம்பறோம். இதுக்கு நான் என்ன பண்ண முடியும் இதெல்லாம் தீர்மானம் பண்றது நான் இல்லையே" என்று ராணி பரிதாபமாகச் சொல்ல, மறுபடியும் வேணிக்கு கோபம் வந்தது.

"முப்பத்தஞ்சு ஸ்டுடண்ட்ஸை நான் எப்படி ஒருத்தியா சமாளிக்க முடியும்? என் ஸ்டுடண்ட்ஸை யார் கவனிச்சுப்பா? நீ ஏற்பாடு பண்ண ரெண்டு பொண்ணுங்களும் தத்தி" என்று சொல்லிவிட்டு சடக்கென்று போனை வைத்தாள்.

ராணிக்கும் லேசாக கோபம் வந்தது. ஆனால் வெளியே காட்டாமல் இருந்தாள்.

வேணியைத் தொந்தரவு செய்யக் கூடாதென்று தலைமை யாசிரியைக்கு போன் செய்தாள்.

தான் வருவதற்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகும் என்றும் அதுவரை தன் வேலையை பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் மரியாதையாகக் கேட்டாள்.

"எனக்குத் தெரியாதா கல்யாணம்னா எவ்ளோ வேலை இருக்கும்னு. நீ அதைக் கவனி. இதைப் பத்தி ஒண்ணும் கவலைப்படாத. ஆமா, வேலைக்கு கல்யாணம் ஆயிட்டு வருவியா."

"எனக்கு வரத்துக்கு இஷ்டமில்லை."

"அப்போ நான் வேறடீச்சர்பார்க்க ஆரம்பிக்கட்டுமா ராணி?"

"ஆரம்பிச்சுடுங்க மேடம். அதான் நல்லது. என்னை நம்பாதீங்க" என்று இனிமையாகச் சொன்னாள்.

பழைய விண்ணப்பங்களைச் சோதித்து தலைமையாசிரியை வேறு ஒரு பெண்ணைத் தொடர்பு கொள்ள அவள் உடனடியாக வேலையில் சேருவதாகச் சொன்னாள்.

வேணிக்கு இவை அனைத்தும் மூன்றுநாள் தாமதமாகத் தெரிவிக்கப்பட்டன. வேணி ராணியின்மீது கடுயைமாக கோபம் கொண்டாள்.

ஆனால் யோசித்துப் பார்க்கும் போது வேணியிட்ம் ராணி சொல்ல வேணிடிய அவசியம் ஏதுமில்லை என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

'நீ வருவ. எங்கிட்ட வருவ. வராத போக முடியாது' என்கிற கோபமும் பிறந்தது.

வேணிக்கு ராணி வீட்டில் வாங்கிய புடவைகள் காண்பிக்கப் பட்டன.

"சுமாராகத்தான் இருக்கு" என்று அவைகளை வலதுகையில் ஒதுக்கியபோது அந்த வீட்டார் திகைப்படைந்தார்கள்.

"வேற என்னமாதிரி வாங்கணும்?"

"கல்யாணம், ரிசப்ஷன்னா, வைரஊசி புடவையாவாங்கு வாங்க. என்னாது இது சாதாரணமா பார்டர் போட்ட ஒரு புடவைய எடுத்திருக்கீங்க. எனக்கு இதைவிட பெரிய பார்டரா எடுப்பீங்கன்னு நினைச்சேன். எனக்கு எடுத்ததுபோதும் பரவாயில்லை. அம்மாவுக்கு இப்படி எடுக்காதீங்க, உங்களவிட

பெருசாத்தான் அம்மாவுக்கு இருக்கணும்" என்று மூன்று நான்கு புடவைகளை மாற்றும்படிச் சொல்ல அந்த வீடு கலவர மாயிற்று.

"மறுபடியும் திருநெல்வேலி போகணும்."

"போயிட்டு வாங்க. லீவுதானே? வீட்ல சும்மாதானே உட்கார்ந்திருக்கீங்க?" என்று மெல்லியதாய்க் குத்த ராணி கோபமானாள்.

"உங்கிட்ட முன்னாடியே சொல்லலைன்னு கோபமா? டெலிபோன்ல மூணுநாள் லீவு கேட்டேன். வேலைக்கு வருவியா விட்ருவியான்னு கேட்டாங்க. விட்ருவேன்னு சொன் னேன். எப்போதுலேர்ந்துன்னு கேட்டாங்க இப்போதுலேர்ந்தே அப்படின்னு சொல்லிட்டேன் அப்படியானா நான் வேற பொண்ணு எடுத்துக்கறேன்னு சொல்லிட்டு அவங்க வேற அப்ளிகேஷன் தேட ஆரம்பிச்சுட்டாங்க, இதுக்கு நான் என்ன பண்ணுவேன். அவங்க யாரை செலக்ட் பண்ணாங்க, என்ன செலக்ட் பண்ணாங்கன்னு உங்ககிட்ட நான் எப்படி பேச முடியும்? வந்து உங்ககிட்ட சொல்லணும்னு பார்த்தா இங்க ஏகப்பட்ட வேலை. எல்லாத்துக்கும் நானே அலைய வேண்டி யிருக்கு. அம்மாவால இந்தப் புடவைய இன்னொரு தடவை நான் போய் மாத்திகிட்டு வந்தேன். எனக்கு வைரஊசி வேண்டாம். அது ரொம்ப முகத்துல அடிக்கறமாதிரி இருக்கு. ஒரு தடவை வைரஊசிவாங்கி ரிசப்ஷனுக்கு கட்டிகிட்டு அதை வேற எங்கேயாவது கட்டிக்கிட்டு போகமுடியாது. ஒரு கோயி லுக்கு போக முடியுமா. ஒரு ரிசப்ஷனுக்கு போக முடியுமா? போனா நல்லாயிருக்குமா? இந்த வைர ஊசிக்குப் பதிலா மூணு நாலு பட்டுப்புடவை எடுத்துட்டேன்னா அங்க லண்டன்ல நல்லாயிருக்கும்னு நினைச்சேன். இன்ஃபாக்ட் புடவையை குறைச்சுட்டு சுடிதார் அதிகமா பண்ணனுங்கறது என்னோட எண்ணம்....!"

"போறதுலயே குறியா இருக்கியா?"

"என்ன பேச்சு இது? போகாம இங்கேயே இருக்கறதுக்கா கல்யாணம் பண்ணிக்கப் போறோம். உங்களுக்கு என்னமோ என் மேல ஒரு கோபம், ஒரு வெறுப்பு வந்துடுச்சு. உங்க அண் ணனை நான் கைக்குள்ள போட்டுக்கிட்டதா நினைக்கறீங்க. இல்லை, உங்க அண்ணனைக் கேட்டுப் பாருங்க. 'வேணிதான் எனக்கு தெய்வம்மாதிரி'ன்னு நான் எத்தனை தடவை சொல்லி யிருக்கேன்னு சொல்லுவாரு. உண்மையிலேயே அண்ணன் வந்து 'அவ்ளோ தூரம் யாரையும் கொண்டாடாத. எல்லோரும் நல்லது கெட்டது உள்ளவங்கதான்' அப்படின்னாரு. அவரு அப்போ சொன்னது கரெக்ட்டுன்னு இப்போ புரியுது" என்று சொல்ல அண்ணன் மீதும் வேணிக்கு கோபம் வந்தது.

"உனக்கு என்ன புடவை வேணுமோ எடுத்துக்கோ. நீ தான் இந்தக் கல்யாணத்துக்கு காரணம். உன் மனசு சந்தோஷமா இருக்கறதுதான் முக்கியம்."

வேணியின் அம்மா வந்தாள்.

அவர்கள் மறுபடியும் கார் வைத்துக் கொண்டு திருநெல் வேலி போத்தீஸுக்குப் போனார்கள். கிட்டத்தட்ட வைர ஊசிப் புடவையின் விலைக்கு வேணி ஒரு புடவை எடுத்துக் கொண்டாள். வெகு நிச்சயமாய் ஒரு முறைக்கு மேல் அதைக் கட்ட முடியாது என்று அங்குள்ள பெண்களுக்குத் தெரிந்தது. ஆனாலும் வேணியின் மனம் கோணாதிருக்கட்டும் என்பதற் காக அவர்கள் காசு எண்ணி வைத்தார்கள்.

ராணிக்கு வேணியின் செய்கைகள் பிடிக்கவில்லை.

8

கல்யாண இன்விடேஷனிலிருந்து எந்த ஐயரைக் கூப்பிட வேண்டும் என்பதுவரை வேணியினுடைய தலையீடு இருந்

தது. ஒரு கட்டத்தில் ராணியின் அப்பா மிகவும் வேகமாய் அலுத்துக் கொண்டார்.

"என்ன அந்தப் பொண்ணு இப்படி தொந்தரவு பண்ணுது. ரொம்ப பிரியமா வந்து பேசற பொண்ணு டக்குனு மாறிப் போச்சே!"

"அதான்... அதான்... பொம்பளை. நட்பா இருக்கற பொம்பளை வேற. நட்பா இருக்கற பொம்பளை உறவா வரும்போது வேற. இங்க வீட்டுக்கு வந்திருந்த போது அவ இன்னொரு டீச்சர் இப்போ உங்க பொண்ணோட நாத்தனார். சம்மந்தி அம்மா. அப்படித்தான் இருப்பா"

'வரவேற்புக்கு அதிகம் கூப்பிடுங்கள், திருமணத்திற்கு குறைவாக வந்தால் போதும்' என்று சூசகமாகச் சொல்ல வேணி வேண்டுமென்றே 'காலை திருமணத்திற்கு அவசியம் வரவேண்டும், வரவேற்புக்கும் வரவேண்டும்' என்றாள்.

கூட்டம் நினைத்ததைவிட இருநூறு இருநூற்றைம்பது அதிகமாக இருந்தது. உள்ளே சமையல் ஆட்கள் திண்டாடினார்கள். கடைக்குப்போய் இனிப்பு வாங்கி வரும்படியாயிற்று. ஒரே மாதிரியான இனிப்பு கிடைக்கவில்லை. அதனால் கிடைத்த இனிப்பையெல்லாம் வாங்கி வந்தார்கள். ஒரே பந்தியில் ஒரு பந்திக்கு லட்டும் வேறு ஒரு வரிசைக்கு மைசூர்பாக்கும் இன்னொரு வரிசைக்கு பாதுஷாவும் என்று போட்டார்கள்.

அது மிகப்பெரிய குறையாக, சபையில் கேலியாக சொல்லப் பட்டது.

அதற்காக ராணியின் அப்பா மன்னிப்புக் கேட்டார்.

"கூட இருநூறு பேர் வந்துட்டாங்க நான் என்ன பண்றது" என்று சொன்னார்.

ரிசப்ஷனை இன்னும் விமரிசையாகக் கொண்டாட வேணி முழுமுயற்சி எடுத்துக் கொண்டாள்.

கடைக்கு ஆள் அனுப்பி தேங்காயும் அதற்கான காகிதப் பையும் வாங்கிவரச் செய்து அதை தாம்பூலப்பையாக மாற்றி அதை வந்தோர்கள் அத்தனை பேருக்கும் கொடுத்தாள். அந்தப் பைக்கு வேணியின் உறவினர்களே பெரிதாக போட்டியிட்டார்கள்.

ரிசப்ஷனில் இனிப்பு மீய்ந்து போயிற்று. உறவினர்களுக்கு பைகள். போட்டு வேணி ஊருக்கு அனுப்பினாள்.

மறுநாள் விருந்தில் மறுபடியும் இந்தப் பேச்சு வந்தது.

சுகவனம் அப்படித்தான் இருக்கும் என்று ஒரே வார்த்தையில் அடக்கினான்.

அவர்கள் பல வீடுகளுக்கு விருந்துகளுக்கு போய்விட்டு, பெட்டி படுக்கையோடு வேணியின் வீட்டுக்கு வந்து குடியேறினார்கள்.

"ராணி என்னைக் கொண்டு போய் தயவுசெய்து பள்ளிக் கூடத்துல விட்டுடு" என்று வேணி கேட்க ராணி சமையல் கட்டிலிருந்து கை துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

வண்டியில் ஸ்டாண்டை தள்ளினாள். வண்டி பஞ்சர் ஆகியிருந்தது. 'வீட்டிற்கு வந்திருந்த பிள்ளைகள் ஏதோ விளையாடி காற்றை இறக்கிவிட்டிருக்க வேண்டும்; அல்லது ஊசியால் குத்தியிருக்க வேண்டும்.' என்று அங்கு பேசப்பட்டது.

வேணி கோபமானாள்.

"ராணியேகூட செய்திருக்கலாம் இல்லையா. கொண்டு போய்விடச் சொல்லி நான் கேட்பேன்னு தெரிஞ்சு டக்குனு காத்து இறங்கி விட்டிருக்கலாம். ஓ.கே. நான் பஸ்ல போயிக் கறேன்" என்று சொல்ல, ராணி 'அப்படிப் பேசுவது தவறு' என்று வேகமாக மறுத்தாள்.

அந்த விவாதம் மடமடவென்று சூடுபிடித்தது.

"இனிமே உன்னை வாயைத் திறந்து என்னை கூட்டிகிட்டு போய் பள்ளிக்கூடத்துல விடுன்னு கேட்கமாட்டேம்மா. நீ எங்க அண்ணனோடயே சுத்திக்கிட்டிரு" என்று சொல்லப்பட்டது.

ராணி அன்று கட்டிலில் உட்கார்ந்து மெல்ல அழுதாள்.

"அப்படித்தான் இருக்கும். ஒரு பொறாமை வரத்தான் செய்யும். இதுல தப்பு நான் பண்ணிட்டேன். அவளுக்குக் கல்யாணம் பண்ணி அனுப்பாம நான் கல்யாணம் பண்ணிக் கிட்டது தப்பு. பல்வேறு விதமா கேள்வி கேட்டேன். 'இல்லை, எனக்கு லட்சியம் இருக்கு. பள்ளிக்கூடம் ஆரம்பிக்கணும்'னு அது இதுன்னு சொல்லி என்னைக் கல்யாணம் பண்ணிக்க சொல்லிட்டா. தெளிவா பேசறாளேன்னு நானும் துணிந்து உன்னைக் கல்யாணம் பண்ணிகிட்டேன். பொம்பளை தெளிவு இவ்வளவுதான்னு தெரிஞ்சு போச்சு. அன்னிக்கு எல்லாம் புரிஞ் சவ மாதிரி பேசிட்டு இன்னிக்கு சின்னச்சின்ன விஷயங்களுக் கெல்லாம் பிடுங்கி எடுக்கறா.

கவலைப்படாத. விசா வந்துரும். கையோட எடுத்தாற ணும்னு நினைச்சேன். முன்ன மாதிரி இல்லை. ஏகப்பட்ட கேள்வி. அங்கங்க வெடிகுண்டு வச்சிடறானா தீவிரவாதி. அதனால இந்தியாலேர்ந்து யார் வந்தாலும் ஒரு கேள்வியாத் தான் பார்க்கறானுங்க. விசாக்காக ஏழாயிரம் ரூபா செலவு பண்ணிட்டேன். வராம போகாது. எல்லா ஏற்பாடும் அங்க ஒரு ஃப்ரெண்ட் பார்த்துகிட்டிருக்கான். டூரிஸ்ட் விசால கொண்டாந் துரு என்றான். மூணு மாசம் எங்கிட்ட குடித்தனம் பண்ண முடியும். டூரிஸ்ட் விசா மெட்ராஸ்ல வாங்கிக்க முடியும். கவலைப்படாத."

"என்னை இங்க விட்டுட்டுப் போனீங்கன்னா வேணி கடிச்சு குதறிடும். தயவுசெய்து எந்த விசாவோ என்னவோ என்னை கூட்டிகிட்டு போயிடுங்க. இல்ல, என்னை எங்க வீட்ல விட்டுட்டுப் போயிடுங்க." என்று அவள் கெஞ்சினாள்.

அவள் அவளை அணைத்துக் கொண்டான்.

பல்வேறு விதமாய் உறுதிமொழிகள் கொடுத்தான்.

திருவனந்தபுரம், கொச்சின், கோயம்புத்தூர், ஊட்டி என்று திட்டம் வகுத்து ஊர்விட்டுக் கிளம்பினார்கள்.

அவர்கள் ஊருக்கு வந்து சேருகின்ற காலையில் வேணி வேண்டுமென்றே வாந்தி எடுத்தாள். வயிறு வலிக்கிறது என்றாள். நெஞ்சு அடைக்கிறது என்றாள். அவள் வீட்டார் அவளை வாரிக்கொண்டு மருத்துவ மனைக்குக் கொண்டு போனார்கள்.

டாக்டர் பரிசோதித்துவிட்டு "ஒன்றுமில்லையம்மா. நன்றாகத்தான் இருக்கிறாய்"

"இல்லை. என்னை அட்மிட் பண்ணிடுங்க" என்று கேட்க டாக்டர் சிறிதுநேரம் அவளை உற்றுப்பார்த்துவிட்டு 'சரி ஒருநாள் அப்சர்வேஷன்ல இருங்க' என்று சொல்லிக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

வீட்டிற்கு வந்த அண்ணனும், ராணியும் ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்தார்கள்.

அவளைப் பார்த்துவிட்டு எழுந்து மெல்ல சிரித்துவிட்டு மறுபடியும் சுருண்டு படுத்துக் கொண்டாள். உறங்குவது போல் நடித்தாள்.

ராணிக்கு அவள் நடிப்பது புரிந்து போயிற்று.

"உடம்பு சரியில்லையா? மனசு சரியில்லையா?"

வேணியின் அண்ணன் சுகவனம் கேட்டபோது வேணிக்கு கோபம் வந்தது.

"எது சரியா இருந்தாலும் சரியா இல்லாட்டாலும் உனக்கு என்ன? உங்க வேலையை நீ பார்த்துகிட்ட. என் வேலைய நான் பார்த்துக்கறேன். ஒண்ணும் நீ கவலைப்பட வேண்டாம்." என்று வெறுப்பாக பேச அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீ சொன்ன பொண்ணதானே நான் கல்யாணம் பண்ணி கிட்டேன். 'நீ பண்ணிக்க. அதுக்கப்புறம் நான் பண்ணிக் கறேன்' அப்படின்னு கெஞ்சின பிறகுதானே நான் கல்யாணம் பண்ணிகிட்டேன்? நான் என்ன தப்பு பண்ணேன். எதுக்கு என்னைப்போட்டு இப்படி நோகடிக்கற? எதுக்கு என் பொண் டாட்டிய கரிச்சுக் கொட்டற?" என்று சொல்ல வேணி வேகமாக எழுந்திருந்தாள்.

ராணி அவளை நிறுத்தி படுக்க வைத்தாள்.

"என்னவோ கோபம். என்மேல கோபம். ஃப்ரெண்ட்ஸை ஃரெண்ட்ஸா வச்சுருந்தா ரொம்ப சந்தோஷமா இருந்திருக்கும். நான் ஃப்ரெண்டை உறவா மாத்திக்கிட்டது தப்பு. நல்லவேளை எனக்கு உறவா கிடைச்ச உங்க அண்ணன் ரொம்ப ஃப்ரெண்ட் லியா இருக்காரு. ரொம்ப நட்பா இருக்காரு. அதனால நான் பிழைச்சேன். இல்லை என் வாழ்க்கை சுக்குநூறா போயிட்டிருக் கும். என்னதான் ஸ்நேகிதியா இருந்தாலும் நாத்தியா வருகிற போது நம்ப புத்தி இப்படித்தான் கேவலமா, கொடூரமா போயிடும். நம்மள நாமே நிறைய திருத்திக்கணும். அப்போதுதான் குழந்தைங்களுக்கு சரியான டீச்சரா இருக்க முடியும்னு தோணுது. உங்க அண்ணன் தன் வாழ்க்கையில பட்ட அவஸ்தையெல்லாம் சொன்னாரு. நான் ஆடிப்போயிட்டேன். அதெல்லாம் ஒருவேளை நீங்க கேட்டிருந்தா நீங்களும் வேற விதமா மாறியிருப்பீங்க. உங்க மனசு எனக்கு நல்லா புரியுது. உங்க மேல எனக்கு எந்தக் கோபமும் இல்லை. ஃப்ரெண்டோட அண்ணனை கல்யாணம் பண்ணிக்கறதுன்ற விஷயத்தை நான் யோசனை பண்ணிப் பார்த்திருக்கணும்.

உங்களை ஃப்ரெண்டுன்னும், அவரை புருஷன்னும் நான் சாதாரணமா நினைச்சிட்டேன். ஒரு ஃப்ரெண்டா உங்க அண்ணனுக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு நினைச்சீங்க. உறவானதும் உங்க வீட்டு வேலைக்காரியா ஆகணும்னு பார்க்கறீங்க. வேலைக்காரி ஆகறதுக்கு நான் தயார்.

அதுல ஒண்ணும் பெரிய கஷ்டம் இல்லை. ஆனால், நான் எப்படி உங்க அண்ணனோட கொஞ்சிப் பேசலாம்னு நினைக்க ஆரம்பிச்சிட்டீங்கன்னா நீங்க ஃப்ரெண்டும் இல்லை. உறவும் இல்லை. எதிரின்னு தெள்ளத்தெளிவாக புரிஞ்சுரும். சென்னையில நின்னு கெஞ்சி, கூத்தாடி டூரிஸ்ட் விசா வாங்கிட் டோம். அங்கப்போய் அந்த விசாவையும் வேகமா வாங்கிடு வோம். நான் இன்னும் பத்து நாள்ல கிளம்பறேன். இந்தப் பத்து நாளும் உங்களோட சண்டை போடாம நீங்க எவ்ளோ கோச்சுக்கிட்டாலும் பொறுமையா இருக்கணும்னு தீர்மானம் பண்ணியிருக்கேன். நாம ஆஸ்பத்திரியில இருந்தா பேசிப்பழக முடியாது. வாங்க. கிளம்பி வாங்க. வீட்டுக்கு வந்து படுத்து தூங்குங்க. உங்களுக்கு கை கால் பிடிச்சுவிடறேன். சாப்பாடு போடறேன். முகத்தை துடைச்சு விடறேன். இந்த ஆஸ்பத்திரி யில என்ன பண்ணுவாங்களோ அத்தனையும் நான் உங்களுக்கு பண்றேன். வாங்க."

அவள் வேணியை இழுக்க வேணி பேசாமல் உட்கார்ந் திருந்தாள்.

"நீங்க ஒரு நல்ல டீச்சர். பெரிய பள்ளிக்கூடம் கட்டணும்னு ஆசைப்படறவங்க. எனக்கு அந்த மாதிரியான லட்சியம் எதுவும் கிடையாது. நான் சாதாரண பொம்பளை. டீச்சரானதேகூட என்ன பண்றதுன்னு தெரியாம டீச்சரானேன். 'பேசாம வீட்டோட கிட. நாங்க பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கறோம்'னு சொன்னாங்க. கொஞ்சம் உலகம் தெரிஞ்சுக்கணும்னுதான் டீச்சரானேன். நல்லவேளை... அப்படி உலகம் தெரிஞ்சுக்க புறப்பட்டதாலதான் எனக்கு நல்ல புருஷன், உங்களை மாதிரி நல்ல ஃப்ரெண்ட் கிடைச்சாங்க. இல்லைன்னா நான் வீட்டை விட்டு வெளியிலயே வராத மக்கு பொம்பளையாவே இருந் திருப்பேன். இந்த சிச்சுவேஷன் என்னன்னு புரிஞ்சுக்காம பயந்துபோய் தடுமாறியிருப்பேன். உங்களை எனக்கு நல்லா புரியுது. ஒருவேளை நான் உங்க இடத்துல இருந்தா உங்களை விட மோசமா இருப்பேனோ என்னவோ" என்று ராணி சொல்ல

வேணி மெல்ல எழுந்து அவள் கையைக் கோர்த்துக் கொண்டு வாசலை நோக்கி நடந்தாள்.

'ராணி, அதையும் சொல்லிடு' என்று காருக்குள் உட்கார்ந்து, வீடு நோக்கிப்போகும் போது அண்ணன் நினைவூட்டினான்.

"உனக்கு ஏதாவது செய்யணும். இப்போ வேணாம்னு சொல் லிட்டா நாம விட்டுடக்கூடாது. நாம ஏதாவது செய்யணும்னு நான் கேட்டேன். உங்க அண்ணனும் நானும் ரொம்ப நேரம் யோசனை பண்ணோம். நீ ஆரம்பிக்கப்போற பள்ளிக்கூடத்துக் காக உங்க அண்ணன் ஒன்றரை லட்ச ரூபா தராரு. உங்க பேர்ல இன்னிக்கு பேங்கல போடறாரு. ஏதோவொரு காலகட்டத்துல நீங்க நல்லபடியா பள்ளிக்கூடம் ஆரம்பிக்கணும். அப்போ உங் களுக்கு நாங்க அதிகமா உதவி செய்வோம். இது பயத்துலயோ படபடப்புலயோ கொடுக்கலை. எனக்கு வேலை பள்ளிக்கூடம் அப்படின்னு ஒரு பொண்ணு ஆரம்பிச்சிருக்கும்போது அந்தப் பொண்ணுக்கு பின்னால யாராவது நிக்கணும். நாங்க நிக்கறோம். உங்க பின்னாடி நிக்கறோம். நீங்க ஒரு டீச்சர். கெட்டிக்கார டீச்சர். உங்களை நாங்க விடமாட்டோம்." என்று சொல்ல வேணி மெல்ல ராணியின் மடியில் சாய்ந்து கொண் டாள்.

ராணி அவள் முதுகையும் தலையையும் தடவிவிட்டாள். கன்னங்களில் முத்தமிட்டாள்.

நீட்டிய வேணியின் விரல்களை சுகவனம் பிடித்துக் கொண்டான்.

அவர்கள் அத்தனை பேருக்கும் அவர்கள் செய்த தவறு தெரிந்து. அதேசமயம் அந்தத் தவறை திருத்திக் கொண்டு திரும்ப நல்லவழியில் போக முயற்சிப்பதும் புரிந்தது.

அவர்கள் மௌனமாய் ஒருவரையொருவர் தொட்டபடி வீடு திரும்பினார்கள்.

"தாழம்பூ விக்கறாங்க. வாங்கிக்கறீங்களா?"

வண்டி ஓட்டி வண்டியை நிதானமாக்கிக் கொண்டு கேட்டான்.

வழியில் மஞ்சளும், பச்சையுமாய் மடல்மடலாய் இருந்த தாழம்பூவை சில பெண்கள் விற்றுக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பூவை விற்கிற பெண் துணியைச் சுற்றிக் கொண்டு தாழம்பூவை பற்றிக் கொண்டிருந்தாள்.

'வேணுமா... வேணுமா?" என்று அருகே வந்து நீட்டியபடி கேட்டாள்.

அந்தத் தாழம்பூவை வாங்குவதற்கே பயமாக இருந்தது. எந்தப் பக்கம் தொட்டாலும் முள் கீறுமோ என்று கலவரம் ஏற்பட்டது.

ராணியும், வேணியும் என்ன செய்யப் போகிறார் என்று அண்ணனையே வியப்போடு பார்த்தார்கள். சட்டென்று கர்ச்சீஃப் எடுத்து மெல்ல அந்த தாழம்பூவைப் பற்றி வாங்கிக் கொண்டு அந்த பெண்ணுக்குக் காசு கொடுத்து தாழம்பூவை தனக்கருகே வைத்துக் கொண்டான்.

வண்டி மறுபடியும் வேகமாகக் கிளம்பியது.

சட்டென்று நெடியான ஒரு வாசனைகார் முழுவதும் பரவியது.

"இதான் இந்த பூவின் விசேஷம். ஒரு பூ கார்ல இருந்துட்டா லும் போதும். அப்படி மணக்கும். நீங்க வாங்கி வச்சிட்டீங்க இல்ல- ரெண்டு நாள் மணக்கும். ஆனா, கைய கிழிச்சுக்காம யாரும் வாங்கிக்கமாட்டாங்க. அண்ணன் கெட்டிக்காரர். டக்குனு கர்ச்சீஃப் சுத்திக்கிட்டு பூவை வாங்கிட்டாங்க." என்று புன்னகையோடு சுகவனத்தை பாராட்டும் விதமாய் டிரைவர் கூறினார்.

"இந்தப் பூ அப்படித்தான். முள்ளுக்கு பயந்தோம்னா வாசனை கிடைக்காது. வாசனை வேணும்னா முள்ளை சமாளிச்சாகணும். தாழம்பூ எங்க வேணி மாதிரி நல்ல வாசனை.

ஆனா, கொஞ்சம் முள்ளு தொந்திரவும் இ[illegible]க்கும். இல்ல[illegible] வேணி?" என்று சொல்ல அவள் அண்ணன் முதுகில் மெல்ல[illegible] அடித்தாள். ஸ்நேகிதியின் மீது நெருக்கமாய் சாய்ந்த[illegible] கொண்டாள்.

"எல்லாப்பூவும் ஒரே மாதிரியா இருக்கும்?" என்று ராணி சொல்ல அந்த மூன்று பேருக்கும் அதனுடைய அர்த்தம் தெள்ளத் தெளிவாய் புரிந்தது.

-முற்றும்-